பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 08, புதன்கிழமை 23.11.2016 | கதிர் 18

தங்க நகை உலகில் 34 வருட அனுபவத்தைக் கொண்ட
ரூபி ஜுவல்லரி
இல.227-229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 221 6919




இலங்கையின் 9 மாகாண சபைகளினதும் முதலமைச்சர்கள் நேற்று ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடிய போது...

- யுத்தக் குற்ற விசாரணையில் சர்வதேச உள்ளீட்டை வலியுறுத்துகின்றோம்
- இராணுவம் ஆக்கிரமித்த தமிழர்களின் நிலங்களை உடன் விடுவியுங்கள்
- மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு தமிழ் மக்களுக்கு உரிமை உண்டு
- 'எழுக தமிழ்' நிகழ்வை தெற்கு தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது
- வடபகுதிக்குரிய நிதியை தாமதியாது அரசு அனுப்ப வேண்டும்

# சமஷ்டியே எமக்குத் தேவை!

## கொழும்பில் முதல்வர் விக்னேஸ்வரன் திட்டவட்டம் சிங்களவரோடும் கைகோக்கத் தயார் என்கின்றார்



செய்தியாளர் மாநாட்டில் முதல்வர்

கொழும்பு, நவம்பர் 23

புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியில் நாம் சமஷ்டி முறையை முன் வைத்துள்ளோம். சமஷ்டியே எமக்குத் தேவை. இதனை இப்போது நாம் புதிதாக முன்வைக்கவில்லை. தந்தை செல்வா காலத்தில் அவரும் சமஷ்டிக் கோரிக்கையையே முன் வைத்தார். எமது சமஷ்டிக் கோரிக்கையை அரசாங்கம் எவ்விதத்தில் அணுகுகின்றது, என்ன முடிவெடுக்கின்றது என்பதைப் பார்த்த பின்னர்தான் நாம் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுப்போம்.

-இவ்வாறு கொழும்பில் மண்டபம் நிறைந்த செய்தியாளர்கள் மத்தியில் வைத்து திட்டவட்டமாக அறிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்று கொழும்பில் தமிழ்மக்கள் பேரவை நடத்திய 'வடக்கு - தெற்குக்கான உரையாடல்' என்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றி, பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த சமயமே அவர் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அந்த மாநாட்டில், தமிழ் மக்கள்

பக்கம் 20 >>>

## மக்கள் பங்களிப்புடன் தீர்வு யோசனை அதற்காகவே தமிழ் மக்கள் பேரவை!

### இணைத் தலைவர் டாக்டர் லக்ஷ்மன் விளக்கம்

கொழும்பு, நவ.23

தமிழ் மக்கள் பேரவையின் தோற்றம், செயற்பாடுகள், தீர்வுத் திட்ட யோசனை முன்வைப்பு, 'எழுக தமிழ்' நிகழ்வு போன்றவை குறித்து நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான டாக்டர் பூ.லக்ஷ்மன் விளக்கமளித்தார்.

மக்களின் நேரடிப் பங்களிப்புடன் தீர்வு யோசனை ஒன்றைத் தயாரித்து முன்வைப்பது பேரவையின் முக்கிய பணியாக இருந்தது என்றார் அவர்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பக்கம் 20 >>>

## கருணா பிரிவின் துப்பாக்கியாலேயே ரவிராஜ் சுட்டுக்கொல்லப்பட்டாராம்!

### நீதிமன்றில் அரசு தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, நவ.23

கிரிதலே இராணுவ முகாமினால் கருணா பிரிவுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கியினாலேயே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் மற்றும் அவரது பாதுகாவலர் சுட்டுக் கொல்லப்பட்டனர் எனப் பிரதி சொலிஸிட்டர்ஜெனரல் ரொஹான் அபேசூரிய நேற்று நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

ரவிராஜ் கொலை தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி மனிலால் வைத்தியதிலக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணைக்கான ஜூரி சபை முதலில் தெரிவு செய்யப்பட்டது.

பக்கம் 20 >>>




சக வாழ்வு அமைச்சர் சமாளிக்கப் பாக்கிறார்...!

## புலிகளின் பெயரைக் குறிப்பிடாமல் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கலாம்!

### இப்படி விளக்குகின்றார் அமைச்சர் மனோ கணேசன்

கொழும்பு, நவ.23

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பதால், வடபகுதி மக்கள் புலிகளின் பெயரைப் பயன்படுத்தாமல் மாவீரர் தினத்தைக் கொண்டாட முடியும்.

-இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தேசிய கலந்துரையாடல், சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன்.

"உயிரிழந்த தங்களின் உறவுகளை நினைவு கூர்ந்து அனுஷ்டிப்பது மக்களின் அடிப்படை மனித உரிமையாகும். ஆனால் அதனை அரசியல் உள்நோக்

பக்கம் 20 >>>

# பலாலி ஆசிரிய கலாசாலையை இராணுவத்திடமிருந்து விடுவியுங்கள்!

## நாடாளுமன்றத்தில் பிரதி அமைச்சர் விஜயகலா வலியுறுத்தல்



கொழும்பு,நவ.23

"பலாலி ஆசிரிய கலாசாலைக் கட்டடத்திலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றி அக்கட்டடத்தைக் கல்விச் செயற்பாடுகளுக்கு ஒப்படையுங்கள்"

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் கோரியிருக்கின்றார் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் கூறுயவை வருமாறு:

தேசிய அரசாங்கம் படிப்படியாக பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. எதனையும் செய்யவில்லை என்று கூற முடியாது. காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. நல்லிணக்கத்தை உருவாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீடு குறைவாக உள்ளதாக கூறப்படுகின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கிலும், அதே போன்று நீண்டகாலமாக பின்தங்கிய நிலையில் உள்ள மலையகப் பகுதிகளிலும் உள்ள பாடசாலைகள் மிகவும் மோசமான நிலைமைகளில் உள்ளன.

சரியான கட்டடங்கள் இல்லை, ஓலைக்குடிசைகளில் இன்றும் பாடசாலைகள் இயங்குகின்றன. அடிப்படை வசதிகள் இல்லை, மாணவர்களின் கால்களைப் பார்த்தாலே எந்த நிலைமையில் அவர்கள் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும். இவை கவலையான விடயங்களாகவே உள்ளன. ஒட்டுமொத்தமாக ஆசிரியர் பற்றாக்குறை நாடளாவிய ரீதியில் நிலவுகின்றது.

வடக்கு, கிழக்கு ஒரு காலத்தில் கல்வியில் முன்னிலையில் இருந்தது. ஆனால் யுத்தத்தின் காரணத்தால் அந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டு அது பாரிய வீழ்ச்சியை அடைந்துள்ளது. இவ்வாறான நிலைமை தொடர்ந்தும் நீடிப்பதற்கு இடமளிக்க முடியாது. வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் மோசமான நிலைமையில் உள்ள பாடசாலைகள் இனங்காணப்பட்டு அவற்றுக்கு விசேட நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பலாலி ஆசிரிய கலாசாலை தற்போதும் இராணுவத்தினது பிடியில் உள்ளது. இதனை விடுவிக்குமாறு நாம் பல்வேறு தடவைகள் வலியுறுத்தியுள்ளோம். பாதுகாப்பு அமைச்சுக்கு எழுத்துமூலமான கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. எனினும் இராணுவத்தினரோ அதனை விடுவிக்காது பின்னிற்கின்றார்கள். அண்மையில் கல்வி அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தபோது இவ்விடயம் தொடர்பாக பேச்சு நடத்தியிருந்தோம். அப்போது அக்கலந்துரையாடலில் இருந்த இராணுவ அதிகாரிகள் இந்த பயிற்சிக் கலாசாலை வவுனியா பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமானது எனக்காரணம் கூறி அதனைவிடுவிப்பதற்கு பின்னடித்துக் கொண்டிருந்தார்கள். எவ்வாறாயினும் விரைவில் இந்த கலாசாலையை இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவித்து மீள இயக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. அந்தச் செயற்பாடு நிச்சயமாக எமது நல்லாட்சியில் நடக்கும்.

கல்வி முன்னேற்ற தரவரிசையில் 97ஆவது இடத்திலேயே தீவகவலயம் உள்ளது. 20வருடங்களாக தீவக பிரதேசங்கள் ஆயுதக்குழுவின் பிடியில் இருந்தது. இதனால் இங்கு ஆசிரியர்கள்,அதிகாரிகள் யாரும் பணியாற்ற செல்ல முடியாத நிலைமை நீடித்தது.

தற்போது அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் தற்போதும் தீவக வலயத்தில் கடமையாற்றுவதற்கு ஆசிரியர்களோ அதிகாரிகளோ பின்னடிப்புச் செய்கின்றார்கள். அங்கு அவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டாலும் ஏதாவது காரணங்களை கூறி இடமாற்றங்களைப் பெற்று விடுகின்றார்கள். இதுவொரு துரதிஷ்டமான நிலையாகும்.

அரச நியமனம் பெறுபவர்கள் இவ்விடயம் தொடர்பாக கருத்திற்கொள்ளவேண்டும். மேலும் தீவகத்தில் பெண்களுக்கான பாதுகாப்பு தொடர்பான சிக்கல்களும் இருக்கின்றன. பாடசாலைகள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களில் குறிப்பாக ரிண்டட் கண்ணாடிகளைக் கொண்ட கட்டட அமைப்புக்கள் காணப்படுவதால் பெண்கள் மீதான வன்செயற்பாடுகள் சில இடம் பெறுகின்றன.

கல்வி கற்று சிறந்த இடத்தில் இருக்கும் அதிகாரிகள் ஒருசிலர் இழைக்கும் தவறினால் ஒட்டுமொத்தமாக நல்லாட்சியின் பெயருங் குலைய வேண்டியநிலைமை ஏற்படுகின்றது. ஆகவே இவ்வாறு ரிண்டட் செய்யப்பட்ட கண்ணாடிகள் உடனடியாக அகற்றப்பட்டு பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். அதற்குரிய நடவடிக்கையைஉடன்எடுக்க வேண்டும்.

அத்தோடு தொண்டர் ஆசிரியர்களும் பல்வேறு காரணங்களால் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் இழுத்தடிப்புச்செய்யப்பட்டு வருகின்றனர். அவர்களின் யதார்த்த நிலைமைகளை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

வடக்கு, கிழக்கில் இவ்வாறு பல தொண்டர் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கான நிரந்தர நியமனம் எப்போது வழங்கப்படுமென அண்மையில் நான் கல்வி அமைச்சரிடம் கேள்வியெழுப்பியிருந்தேன். அமைச்சரவை அங்கீகாரத்துக்கான பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்ற நிலையில் அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படுவதோடு தமிழ் மொழி பேசும் பட்டதாரிகளுக்கு உரிய நியமனங்களும் வழங்கப்படவேண்டும். - என்றார் அவர்.

# 100க்கு மேற்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலை கொழும்பை விட யாழ்ப்பாணத்தில் குறைவாம்!

## வணிகர் கழகத் தலைவர் கூறுகிறார்

யாழ்.வியாபாரிகளினால் வவுனியா மாவட்டத்தில் கொள்வனவு செய்யப்படுகின்ற அரிசியை கொள்முதல் விலையிலிருந்து கிலோவுக்கு 2ரூபா மாத்திரமே இலாபமாக வைத்து விற்பனை செய்கின்றார்கள் என்று யாழ்.வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

அத்துடன் சுமார் நூறுக்கு மேற்பட்ட நுகர்வோருக்கான பொருள்களை கொழும்பு விலைகளிலிருந்து குறைத்துத்தான் எமது வியாபாரிகள் விற்பனை செய்து வருகிறார்கள் எனவும் யாழ்.வர்த்தகர்கள் முன்னிலையில் குறிப்பிட்டார்.

யாழ்.வணிகர்கழகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் யாழ். வர்த்தகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

அரசாங்கம் மானிய அடிப்படையில் யாழ்.வத்தகர்களுக்கு அரிசி வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதனால் எமது வர்த்தகர்கள் அரசாங்கத்திடமிருந்து மானிய அடிப்படையில் குறைந்த விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்வதற்காகப் பணத்தைச் செலுத்தியிருந்தனர்.

இதற்கமைவாக யாழ்.வர்த்தகர் ஒருவர் 4கோடி ரூபா பணத்தை செலுத்தியுள்ளார். வர்த்தகர்களினால் மேற்படி பணம் அரசாங்கத்துக்கு செலுத்தப்பட்டு 3மாதங்கள் ஆகியுள்ள நிலையில் இதுவரை அரசாங்கம் மானிய அரிசியை வழங்கவில்லை.

தற்போது நெல்லின் விலை உயர்வடைந்துள்ளமையினால் அரிசியின் விலையும் உயர்வடைந்துள்ளது. இதனால் தற்போது ஏற்பட்டுள்ள அரிசியின் விலை உயர்வுக்கு அதுவும் ஒரு காரணமாகும்.

அத்துடன் 3 தொடக்கம் 4 வரையான மாதங்களுக்குப் போதுமான நெல் அரசிடம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இந்நெல்லினை வழங்கினால் மக்கள் பயன் பெறுவார்கள்.

வடக்கைப் பொறுத்தவரைக்கும் வேறு எந்த மாகாணங்களிலும் இல்லாதவாறு இங்கு விலை குறைவாக விற்பனை செய்யப்படுகிறது. அத்துடன் தெற்கிலிருந்து சில பெரும்பான்மை சில்லறை வியாபாரிகளும் மக்களும் இங்கு வந்து பொருள்களை வாங்கிச் செல்கிறார்கள்.

இந்த நிலைக்குக் காரணம் கொழும்பில் சீனியின் விலை 110 ரூபா என்றால் யாழில் 95 ரூபாக்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல் பால்மா வகைகளான அங்கர், லக்ஸ்பிறே, பருப்பு, அரிசி வகைகள், செத்தல் மிளகாய் போன்றவைகள் உட்பட 100க்கு மேற்பட்ட நுகர்வோர் பொருள்களில் சில பொருள்களை 10 ரூபாவிலிருந்து 25 ரூபா வரையும் சில பொருள்களை 7 ரூபா தொடக்கம் 25 ரூபா வரை கொழும்பு விலையிலிருந்து குறைத்து விற்பனை செய்து வருகின்றோம்.

யாழ்.வர்த்தகர்கள் கொழும்பிலிருந்து முகவர்களினூடாக கொள்வனவு செய்யாமல் நேரடியாகவே பொருள்களைக் கொள்வனவு செய்வதனால் பொருள்களை கொழும்பு விலையை விட குறைத்து விற்பனை செய்ய முடிகிறது.

அத்துடன்கொழும்பு வர்த்தகர்களுடன் நல்ல உறவு இருக்கிறது. அதனால் நாம் அவர்களிடம் குறைந்த விலையில் பொருள்களை கொள்வனவு செய்கிறோம். இதனால் நாம் பொருள்களைவிலைகுறைத்து விற்பனைசெய்தாலும் எமக்கு இலாபம் இருக்கிறது.

கடந்த கிழமைகளில் வெளிவந்த பத்திரிக்கைச் செய்திகளில் வவுனியாவில் கொள்முதல் செய்யப்பட்ட அரிசியின் விலையிலிருந்து 10தொடக்கம் 15 ரூபா கொள்ளை இலாபம் வைத்து விற்பனை செய்கிறார்கள் என்று வெளியாகியிருந்தது. இது வர்த்தகர்களிடையே பெரிதும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

யாழ்.வர்த்தகர்கள் வவுனியாவில் கொள்வனவு செய்யப்பட்ட அரிசியின் விலையிலிருந்து கிலோவிற்கு ஒரு ரூபா தொடக்கம் 2ரூபா வரையான இலாபத்தையே வைத்து விற்பனை செய்கின்றார்கள். அத்தோடு போட்டி நிரம்பிய இங்குள்ள வியாபாரிகளிடையே கூடிய இலாபத்துக்கு அரிசி விற்பனை செய்யவும் முடியாது என்றார்.

**ஆசிரியர் குறிப்பு:**

'அரிசி விற்பனையில் அதிக லாபம் பெறுகின்றனர் யாழ். வர்த்தகர்கள்' என்ற தலைப்பில்கடந்த 8 ஆம்திகதி 'காலைக் கதிர்' நாளிதழின் 4 ஆம் பக்கத்தில்முக்கிய செய்தியொன்று பிரசுரமாகி இருந்தது. அதில் "வவுனியாவில் கொள்வனவு செய்யப்படும் அரிசி கிலோ ஒன்றுக்கு 15 தொடக்கம் 20 ரூபாவை லாபம் வைத்து யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகின்றது."என்ற சாரப்பட தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

அந்தச் செய்திக்கு இன்று - சரியாக 14 நாட்கள் கழித்து - இப்போது செய்தியாளர் சந்திப்பு வைத்து, விளக்கமளித்திருக்கின்றார் யாழ்.வணிகர் கழகத் தலைவர். இரண்டு வாரத்துக்கு முன்னர் அரிசி என்ன விலைக்கு யாழ்ப்பாணத்தில் விற்பனையானது என்பதும், 'காலைக்கதிர்' செய்தியிலும், இன்று பிரசுரமாகும் வணிகர் சங்கத் தலைவரின் தகவலிலும் உள்ள உண்மைத் தன்மைகள் குறித்தும் தீர்மானிக்க வேண்டியவர்கள் நுகர்வோரான மக்களே. அவர்களிடமே அதை விட்டுவிடுகின்றோம்.

(ஆ-ர்)

# கோண்டாவில் ஐயப்பன் திருவிழா நாளை ஆரம்பம்



யாழ்ப்பாணம், நவ.23

ஈழத்துச் சபரிமலை எனப் போற்றப்படும் கோண்டாவில் சபரீஸ ஐயப்பன் தேவஸ்தானத்தின் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் ஆலய மகோற்சவத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும், 3 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

மகோற்சவ கால விசேட பூசை நிகழ்வுகள் தினமும் காலை 7 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும் நடைபெறும்.

உற்சவ காலத்தில் 10 நாள்களும் அன்னதானம் (சக்தி பூஜை) பகலும் இரவும் இடம் பெறும் என்றும் தெரிவிக்கப் பட்டது. (இ)

# குடாநாட்டில் தொடர் மழை வெள்ளத்தால் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.23

வடக்கில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக மழை பொழியத் தொடங்கியுள்ளது.

யாழ் குடா நாட்டிலும் எல்லா இடங்களிலும் பரவலாக மழை பெய்து வருகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் மழை தொடர்ச்சியாக பெய்வதால், நீர் நிலைகள், குளம் குட்டைகள் நிரம்பி வருகின்றன என்று எமது பிரதேச செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர். முக்கிய குளங்கள் பலவற்றில் நீர் மட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்று அவர்கள் கூறுகின்றனர்.

கிளிநொச்சியில் பல இடங்கள் வெள்ளத்தால் மூழ்கியுள்ளன என்று எமது செய்தியாளர் நேற்று முற்பகல் தெரிவித்தார். முறிகண்டியில் ஏ-9 வீதியில் வெள்ளம் மூழ்கிப் பாய்ந்ததாக பயணிகள் கூறினர்.

யாழ். மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளிலுள்ள தாழ் நிலப் பகுதியில் வெள்ளம் தேங்கத் தொடங்கியுள்ளது. மழை நீடித்தால், நிலைமை மோசமாகும் என்றும் மக்கள் இடம்பெயர நேரிடும் என்றும் பிரதேசத்தவாகள் நேற்றுத் தெரிவித்தனர்.

ஏற்கனவே சிற்சில பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர் என்று தகவல்கள் இடைந்துள்ளன.

"மழை வெள்ளம் எமது குடிசைகளைச் சுத்தித் தேங்கி நிக்குது. சின்னஞ் சிறுசுகள் சினக்குதுகள். சமைக்கிறதும் கஷ்டம் " என்று விரத்தியுடன் கூறினார் பொம்மை வெளி பெண் ஒருவர்.

" குடிசையைச் சுத்தி வெள்ளம் நிற்குது எங்கும் ஒரே ஒழுக்கு என்ன செய்வது...? பிள்ளை குட்டி எண்டு எங்கள் பாடு திண்டாட்டந்தான் பாருங்கோ...!" என்கிறார் மற்றொரு பெண்மணி.

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஜே/87 கிராமசேவகர் பிரிவில் உள்ளடங்கும் பொம்மைவெளி கிராமம், வசந்தபுரம், நித்தியஒளி பகுதியில் மழை வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்தும் வீடுகளின் வாயில்களை எட்டிப் பார்த்துக் கொண்டும் நிற்கிறது.

இந்த மழை வெள்ளத்தால் இந்தப் பகுதியைச் சேர்ந்த 40 குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளன.

மழை நீர் வழிந்தோடுவதற்கு ஏற்றவாறு வடிகால் இன்மையே இங்கு வெள்ளம் தேங்கக் காரணம் என்று பொம்மைவெளி அபூபக்கர் ஜும்மா பள்ளி வாசல் நிர்வாகச் செயலாளர் எம்.றிஸ்வான் குறிப்பிட்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை கிராம சேவகர்கள், பிரதேச செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசம் ஒவ்வொரு வருடமும் மழையாலும் அதனால் ஏற்படும் வெள்ளத்தாலும் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து கோணப்புலம் தற்காலிக நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களாக நீடித்து வரும் மழை வீழ்ச்சியால், தாழ்நிலப் பகுதியில் அமைந்துள்ள மல்லாகம் கோணப்புலம் நலன்புரி முகாமின் ஒரு பகுதி வெள்ளத்தில் மூழ்கியது. கடும் மழையை அடுத்து சில வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்தது. இதனால், இரண்டு குடும்பங்கள் இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. ஏனைய குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மழை காரணமாகத் தற்காலிக வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்குகின்றனர் என்று முகாம் மக்கள் தெரிவிக்கின்றனர். வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது மாத்திரமன்றிப் பல வீடுகள் வெள்ளக் கசிவால் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் குழந்தைகளுடன் நரக வாழ்க்கை வாழ வேண்டியுள்ளது என்று கண்ணீருடன் தெரிவிக்கின்றனர் இந்தப் பகுதி மக்கள். வருடம் தோறும் வெள்ளத்தால் தாம் பல்வேறு சுகாதார ரீதியான நெருக்கடிகளுக்கும், தொற்று நோய்களுக்கும் ஆளாக வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த முகாமில் வாழும் வலி.வடக்குத் தையிட்டிப் பகுதியைச் சேர்ந்த ஒரு பகுதி மக்கள் அண்மையில் சொந்த இடத்தில் மீள் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள போதும் அங்கிருந்த வீடுகள் கடந்த காலப் போர் நடவடிக்கையால் முற்று முழுதாகத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளமையால் அவர்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

அத்துடன் முகாமில் வாழும் தையிட்டியைச் சேர்ந்த நூறு வரையான குடும்பங்கள் இதுவரை மீள் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்குமானால் கோணப்புலம் நலன்புரி முகாம் முழுவதும் வெள்ளத்துள் மூழ்கும் அபாய நிலை ஏற்படும்.

இதேவேளை, மல்லாகம் நீதிவான் நலன்புரி முகாம் மக்களும் மழை வெள்ளம் காரணமாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள தற்காலிக வீடுகளுக்குள்ளும் மழை வெள்ளம் உட்புகுந்துள்ளது. வலி. வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாத மயிலிட்டிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் வாழும் இந்த முகாமில் தாம் வருடாவருடம் மாரி காலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் கூறுகின்றனர்.


உரிய அதிகாரிகள் இந்த விடயங்களில் நடவடிக்கை எடுப்பார்களா என்றும் பாதிக்கப்பட்டோர் கேள்வி எழுப்புகின்றனர்.

(ஐ-9-10-12)

## இனி எங்கே நாங்கள் போவது...? விமோசனம் கிட்டுமா எமக்கு...?







வலி. வடக்கு கோணம்புலம் தற்காலிக நலன்புரி நிலையம்...





பொம்மைவெளி...



நித்திய ஒளிக் கிராமம்...



வசந்தபுரம்...



வசந்தபுரத்தில் வெள்ளத்தை வெளியேற்றும் மாநகரசபையினர்



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600

## தமிழ்த் தலைவர்களின் பாதுகாப்பு

இனப்பிரச்சினையின் விளைவாக நாட்டில் வெடித்த கோர யுத்தம் முடிவுக்கு வந்து ஏழாண்டுகள் கடந்து விட்டன.

யுத்தத்தின் சத்தம் ஓய்ந்து விட்டது. கனன்றுகொண்டிருந்த சுடுகலன்களின் குழாய்கள் அடங்கிக் குளிர்ந்துவிட்டன. போரழிவும் பேரழிவும் தணிந்து விட்டன.

ஆனால், நிலையான சமாதானம் வந்துவிடவில்லை. நிரந்தர அமைதி ஏற்பட்டுவிடவில்லை.

ஆனாலும், போர்க் கொடூரத்தின் அச்சம் இன்னும் தொடர்கின்றது. அது மறுக்கமுடியாதது.

2009 மே மாதத்துடன் யுத்தம் முடிந்தாலும், அதன் பின்னரும் 'மழை விட்டும் தூவானம் விடாதமை போல' இந்த நாட்டில் வன்முறைக் கலாசாரம் தொடர்ந்தது. ஊடக அடக்கு முறையும், நீடித்தது. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான தடை பல வழிகளிலும் தன் கைவரிசையைக் காட்டிக்கொண்டே இருந்தது.

யுத்தகாலத்தில் ஆயுதத் தளபாட வரிசைகளுடன் இரண்டு தரப்புகள் இருந்தன. யுத்தம் முடிவுற்ற காலத்தின் பின்னரான வன்முறை நீடிப்பு மற்றும் அச்சுறுத்தல் நிலைமைக்கு யார் காரணம் என்பது வெளிப்படையானது. அதை ஊகிப்பதில் சிரமம் ஏதுமில்லை.

வெற்றிக்களிப்பில் - மமதையில் - ஆட்சித் தரப்பின் ஆசியுடன் - இன்னும் கொஞ்சம் ஊன்றி நோக்கினால் - வழிப்படுத்தலுடன் அந்த வன்முறைப் போக்குத் தொடர்ந்தது - அதுவும் அரசியல் பின்புல நோக்கத்துடன்.

முன்னைய ஆட்சியாளர்கள் வடக்கு , கிழக்கில் இராணுவத்தையும் தங்களின் அரசியல் செயற்பாடுகளுக்கு நேரடியாக - வெளிப்படையாக - பயன்படுத்தினர். அதனால், யுத்தம் முடிந்த பின்னரும் அரசியல் ரீதியான வன்முறைகள் தொடரவே செய்தன. அந்த அரசியல்ரீதியான வன்முறைகளுக்கான கருவியாகப் பிறப்பெடுத்ததே ஆவா குழு போன்றவை என்பதும் இப்போது வெளிவரும் - கசியும் - தகவலாக இருக்கின்றது.

எது, எப்படியென்றாலும் புதிய ஜனாதிபதி, அதைத்தொடர்ந்து புதிய நல்லாட்சி அரசு என்ற பல அரசியல் அதிரடி மாற்றங்கள் நிலைமையை புரட்டிப் போட்டிருக்கின்றன என்பதும் மறக்கப்பாலதன்று.

அரசியல் நோக்கங்களுக்காக - ஆளுந்தரப்பின் அரூபக் கரங்களின் மறைமுக ஆதரவோடு, முன்னெடுக்கப்படக்கூடிய வன்முறைகளின் போக்கில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதும் ஒப்புக்கொள்ள வேண்டிய யதார்த்தமாகும்.

ஆனாலும், இனப்பிரச்சினையில் பிரதானமாக சம்பந்தப்படுகின்ற - அந்தப் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்ட - நீதியும், நியாயமும், சமத்துவ உரிமைகளும் கோரி வன்முறை யுத்தத்தை நாடி, அதை முன்னெடுத்த - தமிழர்களின் மத்தியில் இருந்து பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகள் இப்போது வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன.

அதுவும் தமிழர்கள் தரப்பில் தீர்வு முயற்சியில் பிரதான பங்கு வகிக்கக்கூடிய - முக்கியமான தலைவர்கள் குறித்து, அவர்களின் தனிப்பட்ட பாதுகாப்புப் பற்றி - இப்போது கரிசனை எழுப்பப்பட்டிருக்கின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

தமிழர்களுக்கு நீதியான தீர்வு கிட்டுவது தொடர்பில் - தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்படுவது சம்பந்தமாக - வெளிப்படையாகவும், யதார்த்தமாகவும், துணிவுடனும் கருத்து வெளியிடுபவர் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன். அப்படி வெளிப்படையாகப் பேசுகின்றமையால் அவர் தென்னிலங்கையில் 'புலி' போலப் பார்க்கப்படுகிறார்.

அத்தகையவர் - அதுவும் வடக்கு முதல்வர் என்ற பதவியில் இருப்பவர் - தமது பாதுகாப்புக் குறித்து ஏற்கனவே சந்தேகம் எழுப்பியிருக்கின்றார். அது பரபரப்பாகப் பேசப்பட்டுமுள்ளது.

அதே சமயம், தமிழர்களுக்கான தீர்வு முயற்சியில் - அரசுத் தரப்புடன் - ஆளும் வர்க்கத்துடன் - நேரடியாகப் பேசுபவர்கள் இருவர். ஒருவர் எதிர்க்கட்சித் தலைவரான சம்பந்தன் ஐயா. மற்றவர் அவரின் உதவியாளர் போலவே பின்னால் செல்லும் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

இந்த இருவரின் பாதுகாப்புக் குறித்தும் இப்போது சந்தேகம் - குரல் - எழுப்பப்பட்டிருக்கின்றமை இன்றைய நிலையில் மிக முக்கியமானதாகும்.

சாவகச்சேரியில் நடைபெற்ற பொது நிகழ்வு ஒன்றில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனையும் வைத்துக் கொண்டு, தமிழரசுக்கட்சியின் முக்கிய பிரமுகரும் தென்மராட்சியில் இருந்து வடக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவருமான சட்டத்தரணி சயந்தன் ஒரு கருத்தை அம்பலப்படுத்தி உள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

அண்மையில் மறவன்புலோவில் மீட்கப்பட்ட, தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதல் அங்கி, சுமந்திரன் எம்.பியை இலக்கு வைத்துக் கொண்டு வரப்பட்டது என்ற சாரப்பட அந்த உரை அமைந்திருந்தது.

அதேபோல, நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று எம்.பிக்கள், எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு உரத்து கோரியிருக்கின்றார்கள்.

ஆக, இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி, தீர்க்கமான ஒரு கட்டத்தை எட்டியிருப்பதாகக் கூறப்படும் இவ்வேளையில், அந்த பிரச்சினை தொடர்பில் தமிழ் மக்கள் சார்பில் முன்னிலை வகிக்கக்கூடிய தலைவர்களின் - சம்பந்தன், விக்னேஸ்வரன், சுமந்திரன் ஆகியோரின் - பாதுகாப்பு குறித்து கரிசனை எழுந்துள்ளமை முக்கியமானதாகும்.

'வெள்ளம் வர முன் அணை கட்டுவது' அவசியமல்லவா ?

# காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் பணியாளர்கள் அமைச்சர் சுவாமிநாதனிடம் மனு

## நஷ்டஈடு கிடைக்கவில்லை எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.23

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் முன்னாள் பணியாளர்கள் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர். சிமெந்து தொழிற்சாலை தற்போது இயங்காத நிலையில், அங்கு முன்னர் பணியாற்றிய தங்களுக்கு இதுவரை எதுவித நஷ்டஈடும் தரப்படவில்லை என்று அவர்கள் அந்த மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், சிமெந்து தொழிற்சாலையை மீள இயக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தொழிற்சாலையை அண்டிக் குடியிருந்த மக்களின் காணிகள் இதுவரை விடுவிக்கப்படாமை, அங்குள்ள தமது வீடுகள் அழிந்துள்ளமை போன்ற விடயங்களையும் அதில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

நல்லூரில் இடம்பெற்ற நாவலர் மாநாட்டுக்கு அமைச்சர் வருகை தந்தபோதே சிமெந்துத் தொழிற்சாலையின் முன்னாள் பணியாளர் சங்கத் தலைவர் கிருஷ்ணபிள்ளை மனோகரன் இந்த மகஜரை அவரிடம் கையளித்தார்.

மனுவைப் பெற்றுக்கொண்ட அமைச்சர் சுவாமிநாதன், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை தனது அமைச்சின் கீழ் இல்லை எனவும் அது ரிஷாட் பதியுதீனின் அமைச்சின் கீழ் வருவதாகவும் கூறியதுடன் உடனடியாக இந்த விடயம் தொடர்பாக ரிஷாட் பதியுதீனுடன் உரையாடுவதாகவும் கூறினார்.

மேலும், சிமெந்து தொழிற்சாலை இயங்காமையால் வேலை இழந்துள்ள பணியாளர்களில் தற்போது பதிவில் உள்ள 154 பேருக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்குவதற்குத் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

இதேவேளை, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை கடந்த 1990 ஆம் ஆண்டு திடீரென மூடப்பட்டமையால் அங்கு பணியாற்றிய பல தொழிலாளர்கள் வேலை இழக்கவேண்டி ஏற்பட்டது.

இந்த தொழிற்சாலையை மீள இயக்குவது தொடர்பாக 2016 ஜனவரி 26 ஆம் திகதி தொழிற்சாலைப் பணியாளர்கள் அமைச்சர் சுவாமிநாதனைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். அப்போது சிமெந்து தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு தன்னாலான முழு முயற்சியையும் செய்வார் என அமைச்சர் கூறியிருந்தார்.

அன்றைய தினமே காங்கேசன்துறை இராணுவப் பொறுப்பதிகாரிக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார். தொழிற்சாலையை மீள இயக்குவதற்காக அங்கிருந்து படையினரை வெளியேறுமாறு அவர் கோரியிருந்தார். அதன் தொடர்ச்சியாக ஏப்ரல் 25 ஆம் திகதி அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகத்திலும் ஒரு கலந்துரையாடல் இடம் பெற்றது. ஆனாலும், இன்று வரை தொழிற்சாலையை இயக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என முன்னாள் தொழிலாளர்கள் தெரிவித்தனர். (ம-12)

# பசுபிக் ஒத்துழைப்பு வர்த்தக ஒப்பந்தத்தில் இலங்கை இணைவதில் பாதிப்பு நிலை

## ட்ரம்ப் வருகையின் எதிரொலி

கொழும்பு, நவ.23

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முடிவினால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டொனால்ட்ட்ரம்பின் முடிவால் பசுபிக் ஒத்துழைப்பு வர்த்தக ஒப்பந்தத்தில் இணையும் இலங்கையின் தீர்மானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ட்ரம்ப்வெள்ளைமாளிகைக்கு உத்தியோகபூர்வமாக செல்லும் முதலாவது நாள் பசுபிக் ஒத்துழைப்புவர்த்தகஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகும் என அறிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையை பொறுப்பேற்ற முதல் தினத்திலேயே இதனை நடைமுறைப்படுத்த உள்ளார் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் உலக பொருளாதாரத்தின் 40 சதவீதமான பகுதியைக் கட்டுப்படுத்துகிறது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதற்குப் பதிலாக, அமெரிக்க கடற்கரையில் வேலைகள் மற்றும் வர்த்தகங்களை நடத்துவதற்கு நியாயமான, இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களுக்கான பேச்சு நடத்த வேண்டும் என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவை முதலாவது இடத்துக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளவுள்ள விரைவான 6 செயற்பாடுகள் தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள ட்ரம்ப், பசுபிக்ஒத்துழைப்புவர்த்தக ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகும் என்பது அதன் ஒரு செயற்பாடாகும் என்றும்கூறினார்

விசேடமாக வர்த்தக நடவடிக்கையில் இருந்து, அகதிகளின் பிரச்சினை, தேசிய பாதுகாப்பு மற்றும் நெறிமுறைகள், வொஷிங்டனில் புதிய சீர்திருத்தங்கள் கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களில் ட்ரம்ப் இதன் போது அவதானம் செலுத்தியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட வாசிப்பின் போது பசுபிக் ஒத்துழைப்பு வர்த்தக ஒப்பந்தத்தில் இணைவதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுமாக இருந்தால், அது உலக பொருளாதாரத்துக்கு பெரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஒப்பந்தம் 12 நாடுகளுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டில் வாகன விபத்துகளால் நாள் ஒன்றுக்கு 7 பேர் உயிரிழப்பு

கொழும்பு, நவ.23

ஒரு நாளைக்கு வாகன விபத்துகளால் மாத்திரம் ஏழு பேர் உயிர் இழக்கின்றனர், 30 பேர் படுகாயங்களுக்கும், 100 பேர் சிறு காயங்களுக்கும் உள்ளாகின்றனர்.பொலிஸ்போக்குவரத்து விபத்து பிரிவுத் தலைவர் கே.ஏ கித்சிறி குமார இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டு கால போரால் உயிர் இழந்தவர்களை விட வாகன விபத்துகளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிமாகக் காணப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் அனைத்துப் பாடசாலை பஸ் சாரதிகளும் தங்கள் கண்களை நவம்பர் முதல் வாரத் தில் இருந்து சோதனை செய்து கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

கடந்த ஆண்டு மேற்கொண்ட இதே போன்ற சோதனைகளின் போது , பலருக்கு கண்புரை மற்றும் ஏனைய கண் நோய்கள் இருப்பது கண்டறியப்பட்டன என்று சுகாதார சேவைகள் பொதுப் பணிப்பாளர் கலாநிதி பாலிதமஹிபால தெரிவித்துள்ளார்.

வாகன விபத்தின் போது அதிக இரத்தப் போக்கு காரணமாகவே அதிகமான உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதம தாதியல் அதிகாரி புஷ்பா ரம்யானி சொய்சா தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பாகவும், விரைவாகவும் வைத்தியசாலைக்கு கொண்டு வந்தால் அவர்களின் இறப்புக்களை தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில், ஓட்டோ விபத்துக்களின் மூலம் 326 பேர் உயிரிழந்துள்ளனர்

இந்நிலையில், தேசிய சாலை பாதுகாப்புச்சபை முச்சக்கரவண்டி சாரதிகளுக்கான வாகன அனுமதிப் பத்திரம் பெறும் வயதெல்லையை 18 இலிருந்து 25 ஆக உயர்த்தியுள்ளது. நாட்டில் 1.1 மில்லியன் ஓட்டோ பாவனையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### நாளை

24.11.2016
வியாழக்கிழமை
திதி : தசமி முற்பகல் 8.58 வரை
நட்சத்திரம் : உத்தரம் பிற்பகல் 1.00 வரை
சுபநேரம்: 7.41 – 9.11
இராகுகாலம்: 1.41 – 3.11

# தமிழக இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வெற்றி வாகை

## புதுச்சேரியில், நெல்லித்தோப்பை மீண்டும் பறித்தார் நாராயணசாமி

சென்னை, நவ.23

தமிழகம்மற்றும்புதுச்சேரியில் இடைத்தேர்தல் நடத்தப்பட்ட 4 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்குமான முடிவுகள் வெளியாகின. அதன்படி தமிழகத்தில் தஞ்சை, அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம் ஆகிய 3 தொகுதிகளிலும் அ.தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது. புதுச்சேரி நெல்லித்தோப்பில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

திருப்பரங்குன்றம் தொகுதியில் அ.தி.மு.க.ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 32 வாக்குகளும் தி.மு.க.70ஆயிரத்து362வாக்குகளும் பா.ஜ.க. 6 ஆயிரத்து 930 வாக்குகளும் தே.மு.தி.க. 4 ஆயிரத்து 105 வாக்குகளும் பெற்றுள்ளன.

தஞ்சாவூர் தொகுதியில் அ.தி.மு.க. ஒரு லட்சத்து ஆயிரத்து 362 வாக்குகளும் தி.மு.க.74 ஆயிரத்து 488 வாக்குகளும் பா.ஜ.க. 3 ஆயிரத்து 806 வாக்குகளும் தே.மு.தி.க. ஆயிரத்து 534 வாக்குகளும் பெற்றுள்ளன. அரவக்குறிச்சி தொகுதியில் அ.தி.மு.க.88 ஆயிரத்து 68 வாக்குகளும் தி.மு.க.64 ஆயிரத்து 395 வாக்குகளும் பா.ஜ.க. ஆயிரத்து 179 வாக்குகளும் தே.மு.தி.க. ஆயிரத்து 70 வாக்குகளும் பெற்றுள்ளன.

நெல்லித்தோப்புத் தொகுதியில் காங்கிரஸ் 18 ஆயிரத்து 709 வாக்குகளும் அ.தி.மு.க.7 ஆயிரத்து 526 வாக்குகளும் பெற்று காங்கிரஸ் வெற்றி பெற்றது.

இதன்படி, தமிழகத்தில் தஞ்சாவூர், திருப்பரங்குன்றம், அரவக்குறிச்சி ஆகிய 3 தொகுதிகளில் அதிமுக வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இதனால் தமிழக சட்டப் பேரவையில் அ.தி.மு.கவின் பலம் 136 ஆக அதிகரித்துள்ளது.

4 தொகுதிகளுக்குமான இடைத்தேர்தல் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது. இதற்கான வாக்குகள்எண்ணும்பணிநேற்று நடைபெற்றது.

**தஞ்சையில் ராங்கசாமி வெற்றி**

தஞ்சாவூரில் அ.தி.மு.க. வேட்பாளர் ரங்கசாமி வெற்றி பெற்றார். 19 சுற்றுகளாக வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. இறுதிச் சுற்று முடிவில் அ.தி.மு.க. வேட்பாளர் ரங்க சாமி வெற்றி பெறறார் என்று அறிவிக்கப்பட்டது.

தஞ்சாவூரில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. வேட்பாளர் ரங்கசாமி கூறும்போது, "என்னை ஆதரித்து வாக்களித்த மக் களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றி தமிழக முதல்வரின் சாதனைத்திட்டங்களுக்குகிடைத்த வெற்றி" என்றார்.

**திருப்பரங்குன்றத்தில் ஏ.கே. போஸ் வெற்றி**

திருப்பரங்குன்றத்தில் அ.தி.மு.க. வேட்பாளர் ஏ.கே.போஸ் வெற்றி பெற்றார்.

**அரவக்குறிச்சியில் செந்தில் பாலாஜி வெற்றி**

அரவக்குறிச்சியில் அ.தி.மு.க. வேட்பாளர் செந்தில் பாலாஜி வெற்றி பெற்றார்.

வெற்றி பெற்ற செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறும்போது, "முதல்வர் ஜெயலலிதா என்றும் மக்கள் பக்கம் நிற்பவர். அதனாலேயே மக்கள் அவருக்கு வெற்றியை பரிசளித்துள்ளனர்"– என்றார்.

புதுச்சேரி நெல்லித் தோப்பில் காங்கிரஸ் வேட்பாளர் நாராயணசாமி அமோகவெற்றிபெற்றார். இடை தேர்தல் வெற்றி மூலம் அவர் தனது முதல்வர் பதவியை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

"நெல்லித்தோப்பு தொகுதி வாக்காளர்கள்என்மீதுநம்பிக்கை வைத்து வெற்றிபெறச் செய்துள்ளனர். தேர்தல் வெற்றிக்குப் பாடுபட்ட காங்கிரஸ், தி.மு.க., மற்றும் கூட்டணிக் கட்சியினருக்கு நன்றிதெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

**போராட்டம்**

முன்னதாக, அரக்குறிச்சி தேர்தல் வாக்கு எண்ணும் நிலையத்தில் போதிய இடவசதி இல்லாததைக் கண்டித்து அந்த நிலையம் முன்பாக பா.ஜ.க. மற்றும் தே.மு.தி.க.வினர்கள் முற்றுகையிட்டனர். தொடர்ந்து அவர்கள் வீதி மறியலில் ஈடுபட்டனர். இதனால் தே.மு.தி.க., மற்றும் பா.ஜ., வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டனர். (ஏ)

## உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் காலமானார்



லக்னோ, நவ.23

உத்தரப் பிரதேச முன் னாள் முதல்வரும் மத்திய பிரதேச ஆளுநருமான ராம் நரேஷ் யாதவ் உடல் நலக் குறைவால் 90 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

நீண்ட நாள்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

1977 ஆம் ஆண்டு ஜனதா தளம் வெற்றி பெற்றபோது உத்தரப்பிரதேச முதல்வராக அவர் பதவி வகித்தார்.

2011 ஆம் ஆண்டு ஐக்கிய ஜன நாயகக் கூட்டணி ஆட்சியின்போது மத்திய பிரதேச ஆளுநராக அவர் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

## தீவிரவாதிகள் இருவர் சுட்டுக்கொலை

ஜம்மு, நவ.23

ஜம்மு–காஷ்மீர் மாநிலம் பண்டிபோரா பகுதியில், தீவிரவாதிகள் இருவர் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், தீவிரவாதிகள் பதுங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தேடுதல் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்திய இராணுவத்தின் சர்ஜிக்கல் ஸ்ட்ரைக் நடவடிக்கையின் பின்னர் பாகிஸ்தான் இராணுவம் இதுவரை 290 முறை எல்லைப் பகுதியில் பல்வேறு அத்துமீறல்களில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)



நடைபெற்று முடிந்த தமிழக இடைத்தேர்தல் முடிவுகளில் தஞ்சாவூர், திருப்பரங்குன்றம், அரவக்குறிச்சி தொகுதிகளில் அ.தி.மு.க வெற்றீயீட்டியதை அடுத்து அ.தி.மு.கவினர் இனிப்புகள் வழங்கிக் கொண்டாடி வருகின்றனர்.

## இந்திய ராணுவ வீரர்களுக்கு குண்டு துளைக்காத ஆடைகள்!

டில்லி, நவ.23

இந்திய இராணுவ வீரர்களுக்குப் புதிய குண்டு துளைக்காத மேல்சட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 8 வருட போராட்டத்துக்குப் பின்னர் இவை வழங்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 20 ஆயிரம் மேல்சட்டைகள் தீவிரவாதத் தாக்குதல் அதிகம் உள்ள பகுதிகளில், பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளும் இராணுவ வீரர்களுக்கு வழங்கப்பட்டுள் ளன.

ஏற்கனவே வழங்கப்பட்ட பழைய குண்டு துளைக்காத மேல்சட்டைகள், பருமனாக உள்ளன என்றும், பழு தடைந்து விட்டன என்றும் இராணுவத்தினர் கூறிவந்தனர்.

2009 ஆம் ஆண்டு 3 லட்சத்து 53 ஆயிரத்து 765 குண்டு துளைக்காத உடைகள் வேண்டும் என்று இராணுவம் கோரிக்கை விடுத்தது.

அதில் 2007–2012 ஆம் ஆண்டு களில் 18 லட்சத்து 60 ஆயிரம் குண்டுத் துளைக்காத மேல்சட்டைகளும், 2012–2017 ஆம் ஆண்டுகளில் 16 லட்சத்து 70 ஆயிரம் குண்டு துளைக்காத மேல்சட்டைகளும் வழங்கப்பட்டன.

இதுபோன்று சிறுகச் சிறுக வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது முதன் முறையாக 20 ஆயிரம் குண்டு துளைக்காத மேல்சட்டைகள் இராணுவ முகாம்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக இராணுவ வீரர்கள் தெரிவித்துள்ளனர். (ஏ)

## சபரிமலை ஐயப்பன் ஆலயப் பெயர் மாற்றம்

திருவனந்தபுரம், நவ.23

கேரளாவில் உள்ள பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலின் பெயர் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி கோயில் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர்.

குறிப்பாக, கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மாதங்களில் ஏராளமானோர்மாலைஅணிந்து விரதம் இருந்து ஐயப்ப சுவாமியைத் தரிசினம் செய்து வருகின்றனர்.

சபரிமலை கோயிலை திருவாங்கூர் ஆலய நிர்வாகம் நிர்வகித்து வருகிறது.

பெயர் மாற்றம் குறித்து ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளதாவது:–

"திருவாங்கூர் ஆலய நிர்வாகத்தின் கீழ் ஆயிரத்து 248 கோயில்கள் உள்ளன.

அவற்றில் பல கோயில்களின் பெயர்களில் தர்மசாஸ்தா கோயில் என்று இடம்பெற்றுள்ளது.

அதன் காரணமாகவே சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி கோயில் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, கோயில் தொடர் பான அனைத்து ஆவணங் களிலும் புதிய பெயரே பயன்படுத்தப்படும்.

கடந்த 5 ஆம் திகதி நடந்த ஆலய நிர்வாகக் கூட்டத்தில் இந்தப் பெயர் மாற்ற முடிவு எடுக்கப்பட்டது. (ஏ)

## விண்ணில் பாய்ந்தது 'அக்னி–I' ஏவுகணை

புவனேஸ்வர், நவ.23


எதிரிகளின் இலக்கை 700 கிலோமீற்றர் தூரம் பாய்ந்து சென்று தாக்கவல்ல 'அக்னி –I' ஏவுகணையை இந்தியா நேற்று வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

இந்தியப் பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் 12 தொன் எடையுடன் 15 மீற்றர் நீளம் கொண்ட இந்த ஏவுகணையைத் தயாரித்து வருகிறது.

ஒடிசா மாநிலத்தில் உள்ள பலசோர் கடற்கரை பகுதியை ஒட்டியுள்ள அப்துல்கலாம்தீவில் நேற்றுக் காலை இது பரிசோதித்துப் பார்க்கப்பட்டது என்று இந்திய பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஏ)

## மீனவர் மீதான தாக்குதல் தடுத்து நிறுத்த வேண்டும்

### தமிழக மாநில காங்.தலைவர் வாசன் தெரிவிப்பு



சென்னை, நவ.23

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஜி.கே.வாசன் கூறியுள்ளார்.


தமிழக மாநில காங்கிரஸ் சார்பில் உலக மீனவர் தினத்தை முன்னிட்டு ராயபுரத்தில் மீனவர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடை பெற்றது.

நிகழ்வில் தமிழக மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.கே. வாசன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதன்பின் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

"தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற் படையினரால் தாக்கப்பட்டு வருகின்றனர். இதனை தமிழக மாநில காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது. இது தொடர்பாக பேச்சு நடத்திய பின்பும் இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களைத் தாக்கி வருகின்றது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். மாநில அரசு, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து மீனவர் பிரச்சினையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்தால் த.மா.கா.சார்பில் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும்."– என்றார். (ஏ)

# விகாராதிபதியின் இனவாத செயற்பாடுகளை கண்டித்து செங்கலடியில் அமைதிப் பேரணி



மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் இனவாதச் செயற்பாடுகளைக் கண்டித்து மட்டக்களப்பு செங்கலடியில் அமைதி பேரணி ஒன்று நடத்தப்பட்டது. நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை ஆலயக் குருக்கள், பூசகர்கள், தர்மகர்த்தாக்கள் இந்து அமைப்புக்களின் பிரதி நிதிகள் பொது மக்கள் இணைந்து இந்த அமைதிப் பேரணியை நடத்தியுள்ளனர். குறித்த பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (ச)

## கன்னங்குடா பிரதேசத்தில் கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு, நவ.23

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கன்னங்குடாப் பிரதேசத்தில் கைக்குண்டு ஒன்றும் ஆர்.பி.ஜி. ரக மோட்டார்க் குண்டு ஒன்றும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை மின்சாரசபை அலுவலகத்துக்கு அருகிலுள்ள காணியில் கைக்குண்டும் மோட்டார்க் குண்டும் காணப்படுகின்றன என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே அந்த இடத்துக்குச் சென்று சோதனை மேற்கொண்டனர்.

அதன்போதே கைக் குண்டு ஒன்றும் ஆர்.பி.ஜி. ரக மோட்டார்க் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## தமிழ் பாடசாலைகளுக்கு சிங்கள மொழியில் வினாத்தாள்கள்

திருகோணமலை வடக்குக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட றொட்டவெள முஸ்லிம் வித்தியாலயம் மற்றும் நொச்சிக்குளம் தமிழ் வித்தியாலயங்களுக்கு மாகாணமட்ட பொதுப்பரீட்சைக்கானவினாத்தாள்கள் தனிச் சிங்கள மொழியில் கிடைத்துள்ளன என அந்த பாடசாலைகளில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுசெவ்வாய்க்கிழமை மாகாணமட்ட பொதுப்பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், திருகோணமலைவடக்குக் கல்வி வலயத்தில் 4 பாடசாலைகள் உள்ளன. இருப்பினும் அதில் 3, 4, 5ஆம் ஆண்டுவகுப்புகளுக்கு உத்தியோகபூர்வமாக 2 பாடசாலைகளுக்கு தனிச் சிங்கள மொழியில் வினாத் தாள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தான்தமிழ்ப் பாடசாலைகள் வடக்கு வலயத்தில் புறக் கணிக்கப்படுகின்றன என பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

# அம்பாறையில் 10 மாத காலத்தில் 142 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

## பெற்றோர்கள் அவதானம் அவசியம் என்கிறார் பொலிஸ் அதிகாரி

அம்பாறை, நவ.23

அம்பாறைமாவட்டத்தில்கடந்த 10 மாதகாலத்துக்குள், 142 சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் என்று, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எல்.எம். ஜெமீல் தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்தின் 150ஆவது தினத்தையொட்டி அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் வன்முறைதொடர்பான விழிப்புணர்வுகருத்தரங்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

சிறுவர்கள், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றமை, நாளாந்தம் அதிகரித்த வண்ணம் உள்ளது.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் முறைப்பாடுகளைச் செய்யத்தயங்குகின்றனர். இவை, எதிர் காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

அம்பாறை மாவட்டத்தில், இந்த வருட தொடக்கத்திலிருந்து, பாலியல் துஷ்பிரயோகத்தால் 35 பேரும், பாரதூரமானபாலியல் துஷ்பிரயோகத்தால் 26 பேரும், பாலியல் வன்புணர்வு மற்றும் பெண்கள் மீதான வன்முறை காரணமாக 115 பேரும், வீட்டு வன்முறைகளால் 35 பேரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையைபொறுத்தவரை, இன்று சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் உரிமைகள் கேள்விக்குறியாகவுள்ளன.

சிறுவர்களின் பாதுகாப்பு, அவர்களின் உரிமை தொடர்பாக, நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜையும், குறிப்பாக பெற்றோர்களும் மிக அவதானமாகச் செயற்படுதல் அவசியம்.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள சிறுவர்களை, துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாப்பதற்கு, பொது மக்கள் பொலிஸாருடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-ச)

## கிழக்கு பல்கலைக்கழக ஏ.ரி.எம். கூண்டுக்குள் இராட்சத முதலை!



வந்தாறுமூலை, நவ.23

கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ளவங்கிஒன்றின் தன்னியக்க பணம் பெறும் இயந்திரமுள்ள கூண்டுக்குள் இராட்சத முதலை ஒன்று புகுந்து அங்கு பதுங்கிவிட்டது. அதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் தற்போது தொடர்ந்து கடும் மழை பெய்து வருவதனால் தாழ் நிலப் பகுதிகள் நீரில் மூழ்கி வருகின்றன. இதன் காரணமாக முதலைகள் நீர்நிலைகளை விட்டு குடிமனைகளுக்குள் வரத் தொடங்கியுள்ளன.

இவ்வாறான நிலையிலேயே நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள தன்னியக்க பணம்பெறும் கூண்டுக்குள் இராட்சத முதலை காணப்பட்டது. பின்னர் முதலை பொதுமக்களால் பிடிக்கப்பட்டு வேறு பகுதியில் விடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-ச)

## கர்ப்பிணிப் பெண் கொலை விவகாரம்; சந்தேகத்தின் பேரில் கணவன் கைது

கிண்ணியா, நவ.23


கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூராங்கல் பகுதியில், குளியலறையில் வழுக்கிவிழுந்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார் எனக் கூறப்பட்ட கர்ப்பிணிப் பெண், கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது

கிண்ணியா சூராங்கல் சாந்தி நகர் பகுதியைச் சேர்ந்த நளீம் ஜனூபா (15வயது) என்ற கர்ப்பிணிப் பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் அவரது கணவன் (18வயது) கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக, இவர்கள் இருவரும் காதலித்து வந்த நிலையில், அந்தப்பெண் கர்ப்பமடைந்துள்ளார். அதற்குத்தனது காதலனே காரணம் எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளார்.

எனினும், காதலன் அதனை மறுத்து விட்டார். ஆனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது, அவரால் தான்பெண்கர்ப்பமடைந்துள்ளார் என்பது தெரிய வந்தது.




அதனையடுத்து, காதலன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். எனினும், அந்தப் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொள்வதாகக் கூறி கடந்த மாதம் 20ஆம் திகதி சூராங்கல் பள்ளி வாசலில் திருமணம் செய்து கொண்டார்.

இந்த நிலையிலேயே பெண்ணின் கொலைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. பொலிஸார்கணவனைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-ச)

# வடக்கு உப்பளங்களைத் தனியார் மயப்படுத்த அரசு எடுத்துள்ள முடிவுக்கு முதல்வர் கண்டனம்

## அதற்கு அனுமதிக்க மாட்டோம் அமைச்சர் ரிஷாட்டும் உறுதி



மன்னார், நவ.23

வட மாகாணத்தில் இயங்கி வரும் உப்பளங்கள் தனியார் மயப்படுத்தல் சம்பந்தமாக மத்திய அரசு தன்னிச்சையாக முடிவு எடுத்தமைக்கு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எந்தக் காரணம் கொண்டும் உப்பளங்கள் தனியார் மயப்படுத்தப்படமாட்டா என்று அமைச்சர் றிஷாட் பதியுதீன் இதன்போது உறுதிமொழி வழங்கினார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னாரில் இணைத் தலைவர்களான வட மாகாண சபை முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் றிஷாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், எம்.எம்.மஸ்தான் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாந்தை உப்பளங்கள் தனியார் மயப்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இந்தவிடயம் தொடர்பாக நீண்ட நேரம் பேசப்பட்டது.

இதனையடுத்துக் கூட்டத்தின் இணைத் தலைவர்களில் ஒருவரான வடமாகாணசபை முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் உரையாற்றினார். இதன்போது இந்தக் கண்டனத்தை வெளியிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக முதலமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உப்பளத்தைத் தனியார் நிறுவனத்துக்கு கொடுக்க வேண்டிய அவசியம் இருந்தாலும்கூட, அவர்கள் எம்முடன் கூட்டுறவாக இருந்து செயற்படுவார்களா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அத்துடன் கூட்டுத்தாபனம் தொடர்ந்து நல்ல முறையில் செயற்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

தனியார்த் துறையினர் ஒரு தொழிலைத் திறமையான முறையில் செய்கின்றனர் என்ற அடிப்படையில் தனியார் மயமாக்குவது குறித்து ஆராயப்பட்டுள்ளது. இந்த நிலையில், இந்த உப்பளத்தில் பணிபுரிவோருக்கு எந்தவிதமான பாதிப்பு ஏற்படும் என்பது தொர்டர்பாகவும் சற்றுச் சிந்திக்க வேண்டும். அவசரப்பட்டு மாந்தை உப்புக் கூட்டுத் தாபனத்தை தனியார் மயப்படுத்தாது இது குறித்து கலந்தாலோசிக்க வேண்டும்.

இந்த விடயத்தை மத்திய அரசு செய்வதானால், மாகாண சபை அமைச்சுடன் பேசுவேன் என்று இதற்குப் பொறுப்பான அமைச்சர் றிஷாட் இங்கு தெரிவித்தார்.

மாகாணத்துக்குரிய அதன் பாதிப்பை நாங்கள்தான் அறிவோம். ஆகவே இவற்றைச் சொல்லுவதற்கு எமக்கு இடமளிக்க வேண்டும். மத்திய அரசு இது சம்பந்தமான ஒரு தீர்மானத்தை எடுக்கும்போது எந்தவிதமான பாதிப்பு வரும் என்பதை அறிந்திருக்க வேண்டும். அமைச்சர் றிஷாட் மத்திய அரசுக்கும் இந்த மாகாணத்துக்கும் உரியவர். ஆகவே அவருக்கு இருபக்கமும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். மக்களுக்கு எவ்வாறான பாதிப்புக்கள் உருவாகும் என்பதை அறிந்து அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். - என்றார்.

இதன்போது, அமைச்சர் றிஷாட் குறுக்கிட்டு பதிலளிக்கையில்:-

இந்த விடயம் தொடர்பாக எந்த வகையிலும் என்னுடன் கலந்தாலோசிக்காது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் அரசால் எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம், பரந்தன் கூட்டுத்தாபனம் இதேபோன்று சிமெந்து கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அபிவிருத்திகள் சம்பந்தமாக நான் வட மாகாண சபை முதல்வராகிய உங்களுக்குத் தெரிவித்திருந்தேன். நீங்களும் பதில் தந்தீர்கள். வட மாகாண சபை, வர்த்தகஅமைச்சருடன்இணைந்து ஐந்து வருடங்களுக்கான கைத்தொழில் அபிவிருத்தியை மேற்கொள்ளலாம்.

மத்திய அமைச்சர் என்றவகையில்நானும், மாகாண சபை முதலமைச்சரும் இணைந்து ஒரு திட்டத்தை மேற்கொள்ளலாம். அதுவரைக்கும் உப்பளத்தைத் தனியார் மயப்படுத்துவதை நிறுத்தி வைக்க நான் நடவடிக்கை எடுப்பேன்.- என்றார் றிஷாட்.

தொடர்ந்து, அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான சாள்ஸ் நிர்மலநாதன் இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்:-

இந்தஉப்பளம்ஆரம்பக்காலம் தொடக்கம் இலாபத்திலேயே இயங்கிவருகின்றது. தற்பொழுது இது றிஷாட் பதியுதீனின் அமைச்சின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கின்றது. எந்த வருடமும் இந்த உப்பளம் நஷ்டத்தில் இயங்கியதற்கான வரலாறு கிடையாது.

இந்த உப்பளம் மன்னார் மக்களுக்கு அவசியமான ஒன்றாகும். ஆகவே இது தொடர்ந்து இக் கூட்டுத்தாபனத்துக்கு கீழ் இயங்க வேண்டும். இது தனியார் மயப்படுத்தப்படுவதை மன்னார் மக்களோ அல்லது இங்கு பணிபுரிவோரோ சிறிதேனும் விரும்பவில்லை. இதுதனியார்மயப்படுத்தப்படமாட்டாது என இதற்கு பொறுப்பு வாய்ந்த அமைச்சர் தெரிவித்தமை மகிழ்ச்சி தருகிறது. மாந்தை உப்பளம் தொடர்ந்து இவ்வாறு இயங்க வேண்டும். இதை மேலும் அபி விருத்தி செய்ய அமைச்சர் ஒத்து ழைப்பு வழங்க வேண்டும். - என்றார். (ஜ-112)

# நீயும் நானும் ஒன்று (YOU AND I ARE ONE)

சர்வலோக நாயகன் இன்று பரப்பிரம்மமாக விளங்குகின்ற பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 91ஆவது அவதார தினத்தில் வாழ்கின்ற நாம் எல்லாம் எத்தனையோ பிறப்புகளில் செய்த புண்ணியமே.

எனக்கு எங்கும் நிறைந்த சிவ சக்தி காப்பாம் நீயே நானென்று உரைத்தான் கடைக் கண்ணால் பாரையனே, ஊர், உற்றார், சுற்றம், சீர், செல்வம் பதவி ஒன்றும் துணையில்லை உன்னுள் நான் அடைக்கலம் என்று யாழ்ப்பாண யோகர் சுவாமிகள் தமது நற்சிந்தனையில் எவ்வளவு அடைக்கலம் என்று யாழ்ப்பாண யோகர் சுவாமிகள் தமது நற்சிந்தனையில் எவ்வளவு தெளிவாகக் கூறியுள்ளார். கடவுள் தான் எமது உற்ற நண்பன் மற்றைய எல்லாம் ஓடும் மேகங்களே (Passing Clouds) பூர்ண அவதாரமான பகவானின் அன்பை நாம் உணர முடியுமேயன்றி அவரை அறிய முற்படுதல் என்பது பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர்களாலும் முடியாத காரியம். ஒரு முறை பேராசிரியர் மகாதேவன் என்பவர் யோகர் சுவாமிகளைப் பற்றி ஒருத்தராலும் எழுத முடியாது. இனியும் எழுத முடியாது அதைச் சொன்னால் இவர்களுக்கு விளங்குவதில்லை. எனக் கூறினார்.

ஒரு முறை சாயிராம் கந்த சுவாமி ஐயா, இரத்தின வடிவேல் ஐயா, வேதவிற்பன்னர் இராசதுரை ஐயா போன்றோர்கள் தமது இந்திய தல யாத்திரையின் போது இளைஞராக இருந்த சுவாமிகளிடம் இறுதியாகச் சென்ற போது கந்தசுவாமி ஐயா சுவாமியைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். "சுவாமி உங்களைப்பற்றி ஏன் 1965இற்கு முன் எம்மால் அறிய முடியவில்லை அதற்கு பகவான் பாபா யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய மகான் வழி நடத்திக் கொண்டிருந்ததில் அப்போது எனது பிரசன்னம் தேவைப்படவில்லை என்றார். இதையே யோகர் சுவாமிகளும் மர்மம் இது மர்மம் இது மக்களாலும் அறியொனா மர்மம் எனப் பாடியுள்ளார்.



பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 91 ஆவது அவதார தினம் இன்றாகும். உலகெங்கும் பாபாவின் அவதார தினம் பெரு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. யாழ்ப்பாணம் திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள சாயி நிலையத்திலும் காலை முதல் மாலை வரை விசேட நிகழ்வுகள் இடம்பெறும்.

இன்று சர்வ மதப்பிரியன், சர்வலோக நாயகன் முழு மனித இனத்தையும் ஒரே குடையில் கொண்டுவந்துளங்கள் அன்புத் தெய்வத்தின் பிரசன்னத்தை அதிகமாக உலகெங்கும் உணர்கின்றோம்.

சுவாமியின் போதனைகள் எவராலும் இலகுவாக உணர முடியும். Help Ever, Hurt Never Love All Serve All சுவாமி அடிக்கடி கூறுவார். சத்தியம் எனது பிரசாரம் தர்மம் எனது ஆதாரம், சாந்தி எனது சுபாவம் பிரேமை என்னுடைய சொரூபம். இவற்றில் ஒன்றைக் கடைப்பிடியுங்கள். நீங்கள் என்னுடையவராவீர். நான் உங்களுடையவராவேன்.

சுவாமி எல்லோரிடமும் கேட்பது ஆத்ம விசுவாசத்தோடு சேவை செய்யுங்கள் அதற்கு நீதி, நேர்மை, சத்தியத்தை ஆதாரமாகக் கொள்ளுங்கள். பூர்ண அவதாரமான பகவான் எப்பொழுதும் தமது இரு கரங்களையும் உயர்த்தி எங்களைப் புன்முறுவலுடன் ஆசீர்வதிப்பார். வழமைக்கு மாறாக 2011 சித்திரை மாதம் நாலா புறமும் உள்ள பக்தர்களைப் பார்த்துத் தமது இருகரங்களையும் கூப்பினார். அப்போது படம் எடுத்துக் கொண் டிருந்த சகோதரர் வேத நாராயணனின் புகைப்படக் கருவி அவ ரையறி யாமலே கை நழுவியது பக்கத்திலிருந்த நண்பனிடம் இது வழமைக்கு மாறாக உள்ளது என ஏங்கினார். ராமர்கிருஷ்ணர்போலசுவாமியும் தமது பெளதீக உடலை நீத்து எங்களுக்குத் தந்த செய்தி நீயும் நானும் ஒன்று என்பதாகும்.

நாமும் எமது மிருக நிலையில் இருந்து தெய்வீகத்தை உணர முயற்சி செய்வதே நாம் சுவாமியின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் மூலப்பொருளாக இருக்க அவனருளாலே அவன்தாள் வணங்கி பகவானைப் பிரார்த்திப்போம்.

எல்லா உலகமும் இன்புற்று
வாழ்க சமஸ்த லோகா
சுதினோ பவந்து.

■ ம.சிவயோகசுந்தரம்

## கஞ்சா, பணத்துடன் கைதான பெண்ணுக்கு விளக்கமறியல்

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாதகல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து 9 கிலோ கிராம் கஞ்சா மற்றும்7 லட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபா பணத்துடன் கைதான பெண்ணை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிவான் என்.தம்பிமுத்து நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த 16 ஆம் திகதி கோணாவளை வீதி, மாதகல் பகுதியில் உள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்ட இளவாலை பொலிஸார், வீட்டின் அறையில் குழிவெட்டி மறைக்கப்பட்டிருந்த 9 கிலோ கிராம் கேரள கஞ்சா மற்றும்7லட்சத்து62ஆயிரத்து 500ரூபா பணம் என்பவற்றை மீட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் வீட்டுஉரிமையாளரான 24 வயதுடைய யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

120 மணித்தியாலங்கள் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்குரிய கட்டளையை மன்றில் கோரியிருந்த பொலிஸார், நேற்று முன்தினம் விசாரணை நிறைவு பெற்ற நிலையில் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். இதன்போது எதிர்வரும் 24 ஆம் திகதி வரை அந்தப் பெண்ணை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-9)

# சர்வதேச கடற்பரப்பு ஊடாகவே இந்திய மீனவர்கள் வருகின்றனர்

## கடற்றொழிலாளர் இணையத்தின் பொருளாளர் தெரிவிப்பு





வவுனியா, நவ.23

சர்வதேச கடற்பரப்பின் ஊடாகவே முல்லைத்தீவுக்குள் இந்திய மீனவர்கள் வருகின்றனர் என்று கடற்றொழிலாளர் இணையத்தின் பொருளாளர் அ.மரியதாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சர்வதேச மீனவர் தின நிகழ்வு வவுனியா அருந்ததி விருந்தினர் விடுதியில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தை இறால் வங்கி என்று வர்ணிப்பார்கள். அந்த அளவுக்கு எமது கடலில் இறால் வளம் நிறைவாக இருந்தது. ஆனால், அந்த வளம் கடந்த காலங்களில் இந்திய இழுவைப் படகுகளால் சூறையாடப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சர்வதேச கடலின் ஊடாகத்தான் இந்திய மீனவர்கள் ஊடுருவி மீன்பிடிப்பில் ஈடுபடுகின்றனர்.

எனவே, அதனை உற்று நோக்கி ஒரு நிமிடம் கூட எமது கடற்பரப்பினுள் அனுமதிக் கமாட்டோம் என்பதை இம்முறை இடம்பெற்ற பேச்சுக்களின் போது இறுக்கமாகக் கூறியி ருக்கின்றோம்.

இம் முறை பேச்சுகளில் இரு நாடுகளும் கலந்துகொண்டன. இது எமது மக்களைப் பொறுத்தவரை மன நிம்மதியாக உள்ளது.

ஆகவே, இது எமக்குச் சாதகமாக அமையும் என்ற நம்பிக்கையும் எமக்கு உள்ளது. இந்த நம்பிக்கை தொடர வேண்டும்.

இம்முறை முல்லைத்தீவு மீனவர்கள் இறால் வளத்தைத் தாமே பெற்று அதன் மூலம் வாழ்வாதாரத்தைப் பெருக்க முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளோம்.- என்றார். (ஐ-100)

## தொடர் மழை: வான்பாயும் குளங்கள்

கிளிநொச்சி, நவ.23

தற்போது நாடளாவிய ரீதியில் பெய்து வரும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

கனகாம்பிகைக்குளம், குடமுருட்டிக்குளம் ஆகியன வான் பாய்கின்றன எனத் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனகாம்பிகைக்குளம் 10 அடி 8 அங்குலமாகவும் குடமுருட்டிக்குளம் 9 அடி 1 அங்குலமாகவும் கொள்ளளவு காணப்படும் நிலையில், இரண்டு குளங்களும் 2 அங்குலம் அளவில் தற்போது வான்பாய்கின்றன. (ஐ)

## மீனவருக்கு ரூ.5 ஆயிரம் அபராதம்!

முல்லைத்தீவு, நவ.23

தடை செய்யப்பட்ட கூட்டு வலை பாவித்து மீன்பிடித்த செம்மலைப் பகுதியைச் சேர்ந்த மீனவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்த அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன்.

அத்துடன் பறிமுதல் செய்யப்பட்ட வலையை அழிக்குமாறு நீதிவான் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளுக்குப் பணித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாயாறு கடல் நீரேரியில் தடை செய்யப்பட்ட கூட்டு வலையைப் பாவித்து மீன் பிடித்த மீனவரை கடற்றொழில் நீரியல் வளத் துறை மாவட்ட அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த அந்த மீனவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரம் நேற்று நீதிமன் றில் எடுத்துகொள்ளப்பட்ட போது நீதிவான் இவ்வாறு அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஐ-9)





கிளிநொச்சியில் விட்டு விட்டுப் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பலரது வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதேவேளை, இதுவரை நிரந்தர வீட்டுத் திட்டங்கள் கிடைக்காது தற்காலிக வீடுகளில் வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சியில் உருத்திரபுரம், பொன்னகர், இரத்தினபுரம், பரந்தன் சிவபுரம், பன்னங்கண்டி, மலையாளபுரத்தின் ஒரு பகுதி, எனப் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பல வீதிகளில் வெள்ளம் ஊடறுத்துப் பாய்கிறது. இதனால், சில இடங்களில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. (ஐ-70)



## வவுனியா பஸ் நிலையத்தில் இரு கடைகள் உடைத்து திருட்டு

வவுனியா, நவ.23

வவுனியா பிரதான பஸ் தரிப்பிடத்தில் உள்ள நகரசபைக்கு சொந்தமான கட்டடத் தொகுதியில் உள்ள இரு கடைகள் உடைக்கப்பட்டு திருட்ப்பட்டுள்ளன. குறித்த கடைத் தொகுதியில் காவலாளி கடமையில் இருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை கடையை திறப்பதற்காக அதன் உரிமையாளர்கள் சென்ற போது, கடைகள் உடைக்கப்பட்டு திருட்டப்பட்டிருந்தமை தெரியவந்தது. இதனையடுத்து வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பஸ் தரிப்பிடத்தில் உள்ள நகரசபைக் கட்டடத் தொகுதியின் மேல்மாடியில் அமைந்திருந்த இறுவட்டு கடை ஒன்றின் முன் கதவை உடைத்து திருடர்கள் அங்கிருந்த பொருள்களைத்திருடியுள்ளனர். கடையில் இருந்து பீடிகள், கடை உடைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அலவாங்கு என்பன மீட்கப்பட்டுள்ளன.

அதே கட்டடத் தொகுதியில் கீழ்த் தளத்தில் இருந்த புடைவைக் கடை ஒன்றின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டு அங்கு இருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இரு கடைகளும் உடைக்கப்பட்டு திருடப்பட்ட கட்டடத்தொகுதியில் நகரசபையின் காவலாளி கடமையில் இருந்தார் என்று கூறப்பட்டது. (ஐ-100)

## வெளிநாட்டில் இருந்து வந்தவர் வவுனியாவில் சடலமாக மீட்பு!

வவுனியா, நவ.23

வவுனியா, மருக்காரம்பளை வீதி பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் வீடொன்றில் இருந்து வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளார்.

ஜேர்மனியில் இருந்து கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் நாடு திரும்பிய விக்கிரமரத்ன குணசிறி என்ற 59 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஜேர்மனிக்குச் சென்றிருந்த இவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் சத்திர சிகிச்சை ஒன்றுக்காக வருகை தந்திருந்தார். பின்னர் மீண்டும் ஜேர்மனிக்குச் சென்றிருந்தார்.

அங்கு காலநிலை ஒத்துக்கொள்ளவில்லை எனத் தெரிவித்து தனியாக தனது பத்தினியார் மகிழங்குளம் வீட்டில் தங்கியிருந்து வீட்டின் திருத்த வேலைகளை மேற் கொண்டு வந்துள்ளார்.

இந் நிலையில், நேற்றுமுன்தினம் வீட்டில் திருத்த வேலைகள் இடம்பெற்றுள்ளன என்று அயலவர்கள் கூறினர். நேற்றுக் காலை மணல் இறக்குவதற்காக வந்த டிப்பர் சாரதியே குறித்த




வீட்டின் உரிமையாளர் வீட்டு வாசலில் சடலமாக கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கும் தகவல் வழங்கியிருந்தார். இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சடலமாக மீட்கப்பட்டவரின் குடும்பத்தினர் அண்மையிலேயே வவுனியாவுக்கு வருகை தந்து இவரைப் பார்வையிட்டுச் சென்றனர் எனவும் 1985 ஆம் ஆண்டு காலப் பகுதி வரை இவர் இலங்கை பொலிஸில் பணியாற்றியிருந்தார் எனவும் உறவினர்கள் கூறினர். (ஐ-100)

# மண்ணில் புதையுண்டு கிடந்த 1,050 அடையாள அட்டைகள்

கொழும்பு,நவ.23

பல வருடங்களுக்கு முன்னர், மண்ணில் புதைக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் உள்ளிட்ட 1,050 அடையாள அட்டைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை மாவட்டம், அம்பலாந்தோட்டை பெமினியன் வில, நுகசெவன பிரதேசத்தில் கட்டுமாணப் பணிக்காக மண் அகழ்ந்துக் கொண்டிருந்த பெக்கோ இயந்திரத்தின் கீழ், இந்த அடையாள அட்டைகள் சிக்கி யுள்ளன. மண் அகழ்ந்து கொண் டிருந்த போது, பெக்கோ இயந் திரத்தில் மண் அள்ளும் பகுதியில் பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்ட பொதிகள், மண்ணுடன் அள்ளுண்டன என பெக்கோ இயந்திரத்தின் சாரதி தெரிவித்துள்ளார்.



அடையாள அட்டைகள், உஹ பிட்டிகொட கிராம அதிகாரி ஏ.கே. நுவன் ந்தனவிடம் ஒப்படைக்கப்பட்டன. இதுகுறித்து பின்னர், பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து, அடையாள அட்டை களை அம்பலாந்தோட்டை பொலிஸார் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.

தேசிய அடை யாள அட்டை, அலுவலக அடை யாள அட்டைகள் என்பனவே மீட்கப்பட்டுள்ளன. அந்த அடையாள அட்டைகள், மாமடுல்ல, பெமினியன்வில, ஹங்கன் வகுர, பன்சலகம, வலே வேவத்த ஆகிய முகவரிகளைக் கொண்டுள்ளன எனத் தெரிவிக்கப் படுகின்றது. (ம)

## மீனவர்களுக்கு கைக் கணினிகள்

கொழும்பு,நவ.23

இலங்கை மீனவர்களுக்கு கைக்கணினி வழங்கப்பட உள்ளது என்று மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மட்டக்குளியில் நடைபெற்ற மீனவர்களுக்கான வானொலி சேவையொன்று ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக மீன்களை கண்டறியும் கருவி கடல் நடுவில் ஏற்படக் கூடிய விபத்துக்கள் தொடர்பில் முன்கூட்டியே அறிந்து கொள்ளும் கருவி ஆகியனவற்றுக்கு மேலதிகமாக கைக்கணினிகள் வழங்கப்படவுள்ளன.

இரண்டு ஆண்டு காலப் பகுதியில் மீனவர்கள் அனைவருக்கும் சொந்த வீடுகள் மற்றும் உட்கட்டுமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். மீனவர் சமூகத்துக்கு நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட படகுகள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் 150 பேருக்கு நியமனங்கள்

கொழும்பு,நவ.23

150 பேருக்கு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பதவி வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று நேற்றுமுன்தினம் வெளியேறிய 593 பொலிஸ் கொன்ஸ்டபிள்களில் 150 பேருக்கே இவ்வாறு பதவி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியேறிய முழுமையான பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 12 எனத் தெரிவிக்கப்படுகின்றது.

களுத்துறை பொலிஸ் கல்லூரி வரலாற்றில் அதிக எண்ணிக்கையான அதிகாரிகள் ஒரே முறையில் வெளியேறிய சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடப்படுகின்றது. (ஐ)

## ஆவாக்குழுவுக்கு உறுப்பினர்கள் முகநூல் ஊடாகச் சேர்ப்பு!

### பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.23

முகநூல் ஊடாக ஆவா குழுவுக்கு உறுப்பினர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர் என்று இந்தக் குழுவுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் தெரிவித்துள்ளார் என்று பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினர் கூறியுள்ளனர்.

குறித்த நபரிடம் பொலிஸார் நடத்திய விசாரணைகளின்போது இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தவை வருமாறு:-

ஆவா குழுவுக்கு உறுப்பினர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நபர்களிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்த் திரைப்படங்களில் நீதிக்காக குரல் கொடுக்கும் பாத்திரங்களை உருவகித்து ஆவா குழுவினர் முகநூலில் பிரசாரம் செய்கின்றனர் என சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

ஆவா குழுவுக்குக் கூடுதலான பிரசார்ம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஆவா குழுவுக்கு அரசியல் பின்னணிகள் எதுவும் இருக்கின்றன என இதுவரையில் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் தெரியவரவில்லை.

எவ்வாறெனினும், சில தரப்பினர் செய்யும் பிரசாரங்களைப் போன்று ஆவா குழு அவ்வளவு பயங்கரமான பாரதூரமான ஒரு குழு அல்ல.- என்று கூறினர்.

## வெளிநாடு செல்ல அனுமதி கோரும் பஷில் ராஜபக்ஷ

கொழும்பு,நவ.23

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ வெளிநாடு செல்வதற்கு அனுமதி தருமாறு நீதிமன்றில் நேற்று கோரியுள்ளார்.

அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 02 ஆம் திகதி வரையில் மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா செல்ல அனுமதி தருமாறு அவர் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கை தொடர்பில் இந்த மாதம் 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் சரோஜினி குசல வீரவர்தன தெரிவித்துள்ளார். (ஐ)


## விமல் வீரவன்ஸவின் மற்றுமொரு மோசடி

கொழும்பு,நவ.23

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் வீடமைப்பு பொதுவசதிகள் அமைச்சராகக் கடமையாற்றிய விமல் வீரவன்ஸவின் மற்றுமொரு நிதி மோசடி குறித்து நாடாளுமன்றில் அம்பலப் படுத்தப்பட்டுள்ளது.

காலி மற்றும் வத்தளை நீதிமன்றக் கட்டடங்களை நிர்மாணிக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட 15 கோடி ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நாடாளுமன்றில் குற்றம் சுமத்தியுள்ளார்.

நீதி அமைச்சுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பிலான விவாதத்தின் போது கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.வி.பி. விஜித ஹேரத் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



காலி மற்றும் வத்தளை நீதிமன்றங்களுக்கான கட்டடங்களை நிர்மாணம் செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 15 கோடி ரூபா பணத்தை அப்போதைய வீடமைப்புத்துறை அமைச்சர், ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்தியுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு நிதி மோசடி செய்யப்பட்டமைக்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## சுகாதார அமைச்சருக்கு ஒரு கோடி ரூபா உதவி

### ஜனாதிபதி நிதியம் வழங்கியதாகச் சுட்டிக் காட்டு

கொழும்பு,நவ.23

ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக ஒரு கோடி ரூபா பணம் சுகாதார அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்தும் கூறுகையில்;

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மருத்துவச் செலவுகளுக்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி 25 லட்சம் ரூபாவும், கடந்த மார்ச் மாதம் 4 ஆம் திகதி 75 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது?

பொதுவாக இருதய நோயாளி ஒருவருக்கு ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மருத்துவ செலவுகளுக்காக ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதே நடைமுறையாகும். ஆனால், சுகாதார அமைச்சருக்கு இவ்வளவு தொகை எவ்வாறு ஒதுக்கப்பட்டது. ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மருத்துவச் செலவுகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யும் விதிமுறைகள் எவை என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று அனுரகுமார திஸாநாயக்க இதன் போது கோரியுள்ளார்.

இதேவேளை, கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஆஸ்திரேலியாவில் ஹோட்டல் ஒன்றிலிருந்து வீழ்ந்த அப்போதைய ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு மஹிந்த அரசு ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக இவ்வாறு பெருந்தொகைப் பணத்தை மருத்துவ செலவுக்காக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பில் நல்லாட்சி அரசு உறுப்பினர்கள் கடந்த அரசு மீது குற்றம் சுமத்தியிருந்தனர் என்றார் வீரவன்ஸ. (ஐ)

# பாதுகாப்புச் செயலரை பணி நீக்கம் செய்யுங்கள்

## கோட்டாபயவின் மூளையில் செயற்படுகிறார் என்றும் குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.23

பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராட்சியை உடனடியாகப் பணி நீக்கம் செய்ய வேண்டும் என்று சமூக நீதிக் கான தேசிய அமைப்பின் அழைப்பாளர் பேராசிரியர் சரத் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாதுகாப்புச் செயலாளரின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளரைப் பணி நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். தற்போதைய பாதுகாப்புச் செயலாளர், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் மூளையில் செயற்படுகின்றார்.

கோட்டாபய போன்றதொரு பாதுகாப்புச் செயலாளர் நல்லாட்சி அரசுக்குத் தேவையில்லை.

பாதுகாப்புச் செயலாளர் பதவி இன்று வலுவான ஒரு பதவியாக மாற்றம் பெற்றுள்ளது. சட்டம் அனைவருக்கும் ஒரே விதமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பாதுகாப்புச் செயலாளர் பதவியை வகித்துக் கொண்டு நண்பர்களுக்கு ஒரு விதமாகவும் ஏனையோருக்கு மற்றொரு விதமாகவும் செயற்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமல்ல என்று பேராசிரியர் சரத் விஜேசூரிய தெரிவித்துள்ளார். (ஐ)

# பாடசாலைத் தலைமைத்துவம்! ஒரு தண்ணோட்டம்



● பேராசிரியர் க.தேவராஜா
*முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் யாழ்.பல்கலைக்கழகம்*

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நீண்ட காலம் உப அதிபராகவும் அதி பராகவும் கடமையாற்றி அக் கல்லூரியை நாடளாவிய ரீதியில் பெயர் பதிக்கச் செய்த அமரர் வி.சுப்பிர மணியத்தின் 20 ஆவது வருட நிறைவில் நடத்தப்பட்ட நிகழ்வின் நினைவுப் பேருரையின் முதல் அங்கம் நேற்று பிரசுரமாகியிருந்தது. இரண்டாம் பகுதியுடன் பேருரை நிறைவு பெறுகின்றது.

### விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளல்

விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் உள்ளதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படுதல் வேண்டும். ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழைய மாணவர் என்ற வகையில் பலரிடமிருந்தும் பாடசாலைத் தலைமைத்துவத்துக்கு விமர்சனங்கள் எழலாம். அவற்றை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் கொண்டதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படுவதுடன் விமர்சனங்களில் உண்மையிருந்தால் மட்டும் அவற்றைத் திருத்திக் கொள்ளும் மனப்பக்குவத்தையும் பேணி வருதல் வேண்டும். தலைவர்கள் எப்பொழுதுமே விமர்சனங்களைக்கண்டுபயந்து விடாமல் அற்றைச் சவாலாக ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

### அதிகாரத்தைக் கையளித்தல்

பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் ஆளுமை கொண்டதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படுதல் வேண்டும். பாடசாலையில் எந்தவொரு புதியவிடயத்தை அறிமுகப்படுத்த வேண்டிஏற்பட்டாலும் அதுதொடர்பான புதிய பொறுப்பைத் தட்டிக் கழிக்காது ஏற்றுக்கொள்ள முன் வருவது பாடசாலைத் தலைமைத்துவத்தின் கடமையாகும். இவ்வாறு ஏற்றுக்கொள்ளும் பொறுப்பை நிறைவேற்ற வசதியாக அதிகாரத்தைக் கையளிக்கும் கடமையும் பாடசாலைத் தலை மைத்துவத்துக்கு உண்டு. குறித்த பொறுப்பை யார் நிறைவேற்றுவார் என்பதை அறிந்து அவரிடம் அப்பொறுப்பைக் கையளித்தால் அது சுலபமாக நிறைவேறுவதைக் காணலாம். டக்ளஸ் மைக் கிறகர் என்பவரது கருத்துப்படி, தலைவர்கள் கடும் போக்கைப் பின்பற்றவேண்டுமென்றகோட்பாடு X என்பதையோ மென்போக்கைக் கடைப்பிடிக்கலாமென்ற கோட்பாடு Y என்பதையோ அடிப்படையில் கொண்டு இயங்குதல் வேண்டும். திருவள்ளுவர் கூறுவதுபோல் 'இதனை இதனால் இவன் முடிப்பன்' என ஆய்ந்து அதனை அவன் கண் விடல் என்ற கோட்பாடு பின்பற்றப்படல் வேண்டும்.

### பயிற்சியளித்தல்

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களது வாண்மையை விருத்திசெய்யத் தேவைப்படும் பயிற்சிகளை ஒழுங்கு செய்யும் ஆற்றல் கொண்டதாகப் பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படுதல் வேண்டும். சேவைக்காலப் பயிற்சி, மீள் பயிற்சி என்பவற்றில் பங்கேற்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவது மட்டுமன்றி அத்தகையபயிற்சிகளைபாடசாலைத் தலைமைத்துவமே ஒழுங்கு செய்யவும் முடியும். பயிற்சி தொடராக மனிதவள அபிவிருத்தியைக் கொண்டுவரும் என்பதால் பயிற்சியும் அபிவிருத்தியும் இணைக்கப்பட்டிருப்பதைப் பாடசாலைத் தலைமைத்துவம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

### ஊக்கப்படுத்தல்

பாடசாலையின் உதவியாளர்களான ஆசிரியர்களையும், பின்பற்றுவோராக மாணவர்களையும் தூண்டுதல் பாடசாலைத் தலைமைத்துவத்தின் கடமையாகும். பெரும்பாலும் தேவைகளை இனம்காண்பதும் திருப்திகளை வழங்குவதும் தூண்டுதலின் அடிப்படைகளாக அமையும். எனவேதான் ஆசிரியர்களதும் மாணவர்களதும் தேவைகளைக் கண்டறிவதில் பாடசாலைத் தலைமைத்துவம் அக்கறை கொள்வதுடன் அவற்றுக்கான திருப்திகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள் தொழில் ரீதியாக முன்னேறுவதற்குரிய வாய்ப்புக்கள், தேவைப்படும் சுற்று நிருபங்கள், விளம்பரங்கள், வெகு சன ஊடகத் தகவல்கள் போன்றவற்றைச் சரியான சமயத்தில் வழங்குவதுடன் அவை தொடர்பான கலந்துரையாடல்களையும், ஆலோசனைகளையும் வழங்குவது பாடசாலைத் தலைமைத்துவத்தின் பணியேயாகும். இதன்மூலம் பாடசாலையின் கற்றல்–கற்பித்தல் நடவடிக்கையில் மட்டுமல்லாது இணைச் செயற்பாடுகளிலும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் பங்குகொள்ள வைப்பதும் பாடசாலைத் தலைமைத்துவத்தின் ஊக்குவித்தல் பணியாகும். தொழில்திருப்தி என்பது இங்கு முக்கியம் பெறுவதால் தனது உதவியாளர்களான ஆசிரியர்களிடம் தொழில் திருப்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

### நேரத்தை முகாமைசெய்தல்

பாடசாலைகளில் நேர முகாமைத்துவத்தை சிறப்பாக பின்பற்றுவது பாடசாலைத் தலைமைத்துவத்தின் கடமையாகும். நேரம் ஓர் அருமையான வளம் என்பதாலும் பாடசாலைகள் வருடத்தில் இருநூறு நாள்கள் மட்டுமே செயற்படுவதாலும் இந்த நேரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு பாடசாலைத் தலைமைத் துவமே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கற்றல்–கற்பித்தலுக்கு நேர அட்டவணை ஒதுக்குவது போன்றே இணைச் செயற்பாடுகளுக்கும் நேரத்தை ஒதுக்குவது பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். ஒதுக்கிய நேரத்தில் குறித்த கருமம் நிறைவேறுவதை உறுதிப்படுத்துவதும் அவசியமாகின்றது. ஆசிரியர்களிடையே நேரமுகாமைத்துவம் தொடர்பாக ஏற்படக்கூடிய முரண்பாடுகளைச் சமன்செய்ய நெகிழ்ச்சியுள்ள நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடிப்பதும் பாடசாலைத் தலைமைத்துவத்தின் கடமையாகும். இந்த நேர முகாமைத்துவத்தில் சுய அபிவிருத்தி என்பதற்கு நேரத்தை ஒதுக்கி ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கு உதவுவது பாடசாலைத் தலைமைத்துவமேயாகும். நல்ல நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடிக்க வேலைகளின் அவசரத் தன்மை, அவசியத் தன்மை ஆகிய இரண்டையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஆஸ்திரேலியாவில் இருப்பது போல் நெகிழ்ச்சி கொண்ட நேரமும் அமுலாக்கப்படலாம்.


முரண்பாடுகளை முகாமை செய்தல் பாடசாலையில் தோன்றுகின்ற முரண்பாடுகளை முகாமை செய்வது பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். தனிப்பட்ட முரண்பாடுகள், குழுக்களுக்கிடையிலான முரண்பாடுகள், நிறுவன முரண்பாடுகள் எனப் பல்வகைப்பட்ட முரண்பாடுகள் தோன்றலாம் என்பதனால் அவற்றை இனம் காண்பதும் முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதும் பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். பழைய காலத்தில் முரண்பாடுகள் தோன்றுவது கெடுதியானது என்றும் அவற்றை எக்காரணம் கொண்டும் உருவாக விடக்கூடாது என்பதுமான கருத்து நிலவி வந்தது. ஆனால், அண்மைக் காலத்தில் முரண்பாடுகள் தோன்ற வேண்டும் என்றும் ஆனால் அவை உத்தம அளவில் காணப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுமான கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. உத்தம அளவிலான முரண்பாடுகள் ஊழியர்களின் செயற்றிறனை உயர் அளவில் வைத்துக் கொள்ள உதவும் என்பதால் முரண் பாடுகள் தோன்றுவதற்கு அனுமதிப்பதும் ஆனால் அவற்றை உத்தம அளவில் வைத்திருக்க நடவடிக்கை எடுப்பதும் பாடசாலை முகாமைத்துவத்தின் கடமையாகும். இங்கு ஆகக்கூடுதலான முரண்பாடுகளையும், ஆகக் குறைவான முரண்பாடுகளையும் இல்லாமல் செய்து உத்தம அளவான முரண்பாடுகளை பாடசாலைத் தலைமைத்துவ பராமரித்து வருவது பாடசாலையின் வள்ர்ச்சிக்கு உதவுவதாக அமையும்.

### அணி முகாமைத்துவம்

முகாமைத்துவத்தில் மிக வளர்ச்சிபெற்றநிலையான அணி வேலையைக் கொண்டுவருதல் நல்ல தலைமைத்துவத்துக்கு வகைசெய்யும். ஒவ்வொரு பணிக்குமென குழுக்களைத் தனித்தனியாக உருவாக்கி அவையே தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் தலைமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அணிமுகாமைத்துவம் உருவாக்கப்படுமானால் தலைவன் பார்வையாளனாக மட்டுமே பணியாற்றினால் போதுமானதாக இருக்கும். உதவியாளர்களும் பின்பற்றுவோரும் தாமே தேவையான தீர்மானங்களை எடுத்து நடைமுறைப் படுத்த முடியும். தீர்மானங்களைக் கூட்டாக எடுத்து எல்லோரும் இணைந்து நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவர்களே எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் அளவுக்கு அதிகாரம் வழங்கப்படல் வேண்டும். பரிசளிப்புவிழா, விளையாட்டுப் போட்டி என்பவற்றுக்கு பாடசாலைகளில் குழுக்கள் உருவாக்கப்பட்டு அணி முகாமைத்துவத்துக்கு வகை செய்யப்படல் வேண்டும்.

### முடிவுரை

எந்தவொரு பாடசாலையின் வளர்ச்சியும் தலைமைத்துவத்தில் தங்கியுள்ளது என்பதை எவரும் மறுக்கவோ அன்றி மறைக்கவோ முடியாது. இதன் காரணமாகவே மிகச் சிறிய பாடசாலையிலிருந்துமிகப்பெரிய கல்லூரி வரை இத்தலைமைத்துவத்துக்கான நல்ல அதிபரைத் தேடி அலைகின்றன. உண்மையிலேயே தலைவர்கள் பிறப்பதில்லை. அவர்கள் உரு வாக்கப்படுகின்றார்கள் என்ற புதிய கோட்பாட்டின் படி பாடசாலைகளின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்ட அதிபர்கள் தமது தலைமைத்துவத்துக்கான ஆளுமையை வளர்த்துக் கொள்வார் களாயின் அவர்களால் பாடசாலைகளுக்கான நல்ல தலைமைத்துவத்தை வழங்கிவிட முடியும். இத்தகைய அதிபர்களால் பாடசாலையுடன் தொடர்புடைய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் என்போரை பாடசாலையின் இலக்கு நோக்கிய பயணத்தில் சிறப்பாக இணைத்துக்கொள்ள முடியும். இது பாடசாலைச் சமூகத்தினர் இடையே உச்ச திருப்தியைப் பெற்றுக் கொடுப்பதுடன் பாடசாலையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தி மாவட்ட, மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பாடசாலையின் மதிப்பை உயர்த்தி பெரும் எண்ணிக்கை கொண்ட மாணவர்களைக் கவரும் நிலையை உருவாக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ●





# உலக வரலாறும் மனித விடுதலையும்

09



சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பாவிலும் சோசலிச அரசுகள் சிதைவுற்றமைக்குப் பொருளாதார நெருக்கடியும் ஒரு காரணம். இந்த நாடுகளின் பொருளாதார வாழ்வு மைய அரசின் இரும்புப் பிடிக்குள் இருந்தது. மைய அரசே பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டி, அவற்றை இறுக்கமாக நடைமுறைப்படுத்தியது. சோவியத் ஒன்றியத்தைப் பொறுத்தவரை அரச பொருளாதாரத் திட்டங்கள் பொது மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வனவாக அமையவில்லை. மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விவசாய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்குப் பதிலாகக் கனரக தொழிற்சாலைகள் நிறுவும் திட்டங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. உலக முதலாளிய வல்லரசுகளுடன் பனிப் போரில் ஈடுபட்டிருந்தமையால் தேசிய வருமானத்தின் பெரும் பங்கு ஆயுத உற்பத்தியிலும், அணு ஆராய்ச்சியிலும், விண்வெளி ஆய்விலும் செலவிடப்பட்டது. இத்தகைய தவறான அணுகுமுறையால் சோவியத் ஒன்றியம் பாரிய உணவுத் தட்டுப்பாட்டைச் சந்திக்க நேர்ந்தது. பண வீக்கம் அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சியின் விகிதாசாரம் படிப்படியாக வீழ்ந்து பூஜ்யத்தை அடைந்ததாக சோவியத் பொருளாதார நிபுணர்கள் சிலர் கூறுகிறார்கள். மக்களின் வாழ்க்கைத் தரமும் வெகுவாகக் குறைந்தது. நாடு பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. சோவியத் மக்கள் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்குண்டனர். முதலாளிய உலகிலிருந்து உணவுத் தானியங்களை இறக்குமதி செய்ய சோவியத் அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. சோசலிசப் பொருளாதார உற்பத்தி முறையில் மக்களுக்கு நம்பிக்கை தளர்ந்தது. கம்யூனிசக் கட்சியின் ஆட்சியமைப்பை மாற்றியமைக்க மக்கள் திடசங்கற்பம் பூண்டனர்.




சோவியத் ஒன்றியத்திலும் சரி, கிழக்கு ஐரோப்பாவிலும் சரி, சோசலிசத்தின் சிதைவுக்குப் பொருளாதார நெருக்கடி மட்டும் முக்கிய காரணி அல்ல. ஒரு கொடூரமான சர்வாதிகார ஆட்சிமுறையும் அதன் கீழ் பொதுமக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுமே கம்யூனிச நிர்வாகம் சிதைந்து போனமைக்குப் பிரதான காரணமாகும்.

ஒக்ரோபர் புரட்சியை அடுத்து சோவியத் ஒன்றியத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிப் பீடம் ஏறியது. கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகார ஆட்சியில் உண்மையான ஜனநாயகம் பேணப்படுமென லெனின் கூறிவந்தார். ஆனால், நடைமுறையில் அப்படி நிகழவில்லை. லெனினின் மறைவுக்குப் பின்னர் ஆட்சிப் பீடம் ஏறிய ஸ்டாலின் மிகவும் கொடூரமான சர்வாதிகார ஆட்சிமுறையை நிறுவினார். அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடியது. இரவுக் கைது, சித்திரவதை, கொலைகளாக பொதுமக்கள் மீது கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. சைபீரியப் பனிமண்டலச் சிறைகளில் பல லட்சம் மக்கள் மரணத்தைத் தழுவ நேரிட்டது. ஸ்டாலினின் மறைவுக்குப் பின்னர் பதவிக்கு வந்த குருசேஷ் 1956 ஆம் ஆண்டு விடுத்த பிரகடனத்தில், ஸ்டாலினின் ஆட்சிக்கால அட்டூழியங்களைப் பகிரங்கப்படுத்தினார். ஆயினும், அரச பயங்கரவாதம் முடிவுக்கு வரவில்லை.

எதிர்ப்புக்களை நசுக்கி, குடிமக்களை இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தீர்மானித்த அரசு, கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகளை மேற் கொண்டது. இதனால் சாதாரண மக்களின் சாதாரண சமூக வாழ்வு சிதறடிக்கப்பட்டது. குடும்பம், மத வழிபாடு, பண்பாட்டு வாழ்வு போன்ற சமூக வாழ்வுக்கு ஆதாரமாக விளங்கும் மனித உறவுகளைப் பாதிக்கும் வகையில் அரச சர்வாதிகாரம் மக்களின் வாழ்வில் தலையிட்டது. அன்புறவுகளுக்கு அப்பால், அரச விசுவாசத்திற்கும், கீழ்ப்படிவுக்கும் முதன்மை அளிக்கப்பட்டது. மக்களின் சிந்தனையை நெறிப்படுத்தி அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நோக்கில் ஊடகங்களையும், கல்வி முறையையும், கட்சிச் சித்தாந்தத்தையும் அரசு தனது கட்டுப்பாட்டில் இயக்கியது. ஆயினும், யதார்த்த உண்மைகளை ஊடகங்கள் வாயிலாகவும், திட்டமிட்ட பரப்புரைகள் மூலமாகவும் சோவியத்சர்வாதிகாரம் மூடிமறைக்க முனைகிறது என்பதை மக்கள் உணரத் தொடங்கினர். நீண்ட காலமாக, பல பரம்பரைகளாக சர்வாதிகார ஆட்சியின் அட்டூழியங்களைச் சகித்து வந்த சோவியத் மக்கள், 80 களின் இறுதிப் பகுதியில் கோபச்சேவின் ஆட்சிக் காலத்தில் பொறுமையின் எல்லையை அடைந்திருந்தனர். சோவியத் சோசலிய ஆட்சியைக் கட்டிக்காக்க விளைந்த கோபச்சேவ் சில அடிப்படையான அரசியல், பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். ஆனால், அவை மக்களின் கொதிப் புணர்வையோ, சோசலிச ஆட்சியைச் சிதைத்துவிட வேண்டும் என்ற அவர்களது உறுதிப்பாட்டையோ தணித்து விடவில்லை.

தனியார் சொத்துடைமையை பொதுவுடைமையாக ஆக்கிவிட்டால், சொத்துடைமையால் எழும் வர்க்க பேதங்கள் நீங்கி, சமத்துவ சமுதாயம் உருவாகும் என மாக்ஸியத்தின் மூல கர்த்தாக்கள் கண்ட கனவு நிறைவேறவில்லை. மாறாக, சோசலிச நாடுகளில் ஒரு புதிய ஆளும் வர்க்கம் தோற்றம் எடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும் பிரமுகர்களும் முக்கிய உறுப்பினர்களுமாக அரச நிர்வாகத்தைக் கைப்பற்றிப் புதிய ஆளும் வர்க்கமாக உருவெடுத்தனர். இப் புதிய ஆளும் வர்க்கமானது சர்வாதிகாரமும், சகல வசதிகளும், சலுகைகளும் பெற்றதாக மக்களிடமிருந்து அந்நியப்பட்ட சக்தியாக இயங்கியது. ஊழலும் நிர்வாகச் சீர்கேடும் ஒழுக்கக் கேடும் இந்தப் புதிய ஆட்சியாளர்களிடம் குடிகொண்டமையால் இவர்கள் வெகுசன விரோதிகளாக மாறினார்கள். சோசலிச உலகில் தோற்றமெடுத்த இப்புதிய அதிகார வர்க்கத்தின் அநீதிகளும் அட்டூழியங்களும் சோசலிசத்தின் வீழ்ச்சிக்குப் புற நிலையை அமைத்துக் கொடுத்தன எனலாம்.

சோசலிச ஆட்சியில் சமத்துவமும் சுதந்திரமும், சம உரிமைகளும் நிலை நாட்டப்பட்ட ஓர் உன்னத சமுதாயம் பிறக்கும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் சமத்துவத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக அவை தனி மனித அபிலாசைகளை நசுக்கி, சமூக அநீதிக்கு வழிவகுத்தன. எல்லா மனிதர்களும் தமது ஆற்றலுக்கும் திறமைக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவே ஆவல் கொண்டனர். மனித ஆற்றலுக்கு மதிப்பளிக்காமல், தேவையின் அடிப்படையில் வருமானத்தை நெறித்து அரசினால் திணிக்கப்பட்ட சமத்துவமானது மனித உரிமைக்கும் சுதந்திரத்துக்கும் விரோதமாக அமைந்தது. பிற தலையீடுகள் எதுவுமின்றி தமது தனிப்பட்ட வாழ்க்கையை – தமது சொந்த அபிலாசையை – தாமாக நிர்ணயித்துக் கொள்ளவே மனிதர்கள் விரும்பினார்கள். பொது உடைமை என்றும், பொதுவான கூட்டுறவு வாழ்க்கை என்றும் தேவைக்கு ஏற்றதான ஊதியம் என்றும் சோசலிசம் வழங்கிய சமத்துவத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அடிப்படையான மனித உரிமைகளோடு, தமது தலைவிதியைத் தாமாகத் தெரிவுசெய்யும் சுதந்திர மனிதர்களாக வாழ்வதையே எல்லா மனிதர்களும் விரும்பினார்கள். தனி மனிதர்களின் இந்த அடிப்படையான அபிலாசைகளுக்கு சோசலிச ஆட்சிமுறை இடமளிக்கவில்லை. சோசலிசத்தின் சிதைவுக்கு இதுவும் ஒரு பிரதான காரணியாக அமைந்தது.

> “உலக முதலாளிய வல்லரசுகளுடன் பனிப்போரில் ஈடுபட்டிருந்தமையால் தேசிய வருமானத்தின் பெரும் பங்கு ஆயுத உற்பத்தியிலும், அணு ஆராய்ச்சியிலும், விண்வெளி ஆய்விலும் செலவிடப்பட்டது. இத்தகைய தவறான அணுகு முறையால் சோவியத் ஒன்றியம் பாரிய உணவுத் தட்டுப்பாட்டைச் சந்திக்க நேர்ந்தது. பண வீக்கம் அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சியின் விகிதாசாரம் படிப்படியாக வீழ்ந்து பூஜ்யத்தை அடைந்ததாக சோவியத் பொருளாதார நிபுணர்கள் சிலர் கூறுகிறார்கள். மக்களின் வாழ்க்கைத் தரமும் வெகுவாகக் குறைந்தது. நாடு பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. சோவியத் மக்கள் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்குண்டனர். முதலாளிய உலகிலிருந்து உணவுத் தானியங்களை இறக்குமதி செய்ய சோவியத் அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. சோசலிசப் பொருளாதார உற்பத்தி முறையில் மக்களுக்கு நம்பிக்கை தளர்ந்தது. கம்யூனிசக் கட்சியின் ஆட்சியமைப்பை மாற்றியமைக்க மக்கள் திடசங்கற்பம் பூண்டனர்.”

மானிடத்தின் வரலாறு பற்றிய ஹேகலதும், காள் மாக்ஸினதும் சிந்தனை உலகங்களைத் தரிசித்தோம். வரலாற்றியலில் இயங்கியல் தத்துவத்துக்கு ஹேகல் அளித்த முக்கியத்துவம் பற்றியும், சமூக வரலாற்றுத் துறையில் இயங்கியல் ஆய்வு முறையைக் காள் மாக்ஸ் தழுவிக்கொண்டமையையும் பார்த்தோம். 'மூலதனம்' என்ற தமது பிரதான நூலில் முதலாளித்துவ உற்பத்தி வடிவம் பற்றி காள் மாக்ஸ் நிகழ்த்திய ஆழமான ஆய்வு பற்றியும் விளக்கினோம். முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத வீழ்ச்சி பற்றியும், கம்யூனிச சமூகத்தின் உதயத்துடன், முரணியங்கள் நீங்கிய அந்த உயர் நிலை சமுதாய வளர்ச்சியுடன் வரலாற்று அசைவியக்கம் முடிவுக்கு வருமென மாக்ஸ் கூறிய தீர்க்கதரிசனம் பலிக்கவில்லை என்பது பற்றியும் விவரமாக விளக்கினோம்.

சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சீனாவிலும், சோசலிச உற்பத்தி வடிவங்கள் சிதைவடைந்து அங்கெல்லாம் முதலாளித்துவ பொருளுற்பத்தி பெருவளர்ச்சி கண்டு வருகிறது. சோசலிசத்தின் வீழ்ச்சியுடன் முதலாளித்துவம் எழுச்சி கண்டுள்ள இந்தப் புதிய சூழ்நிலையில், மாக்ஸிய சிந்தனை மறு பரிசீலனைக்கு ஆளாகி வருகிறது. நவீன வரலாற்றியலில் மாக்ஸிய சிந்தனை எத்தகைய பங்கை வகிக்க முடியும்? மாக்ஸிய சமூகவியலை ஒரு அறிவியற் கோட்பாடாக நிறுவமுடியுமா? மாக்ஸியச் சிந்தனையிலுள்ள பலவீனங்கள் என்ன? சிறப்பம்சங்கள் என்ன? மனித விடுதலை நோக்கிய வரலாற்றின் அசைவியக்கம் முடிவுநிலை எய்துமா? இன்றைய வரலாற்றியல், சமூகவியல் சிந்தனையாளர்கள் மத்தியில் எழுந்துள்ள சர்ச்சைக்குரிய இக்கேள்வி பற்றி இனி நோக்குவோம்.

(தொடரும்...)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டு மல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

## பதிவு செய்யாத தனியார் வைத்திய நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, நவ.23

பதிவு செய்யப்படாமல் இயங்கிவரும் தனியார் வைத்தியநிலையங்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை தனியார் வைத்திய நிலையங்களைப் பதிவு செய்வது கட்டாயமாக்கப் பட்டுள்ளது என்று தனியார் வைத்திய சேவைகளை ஒழுங்குபடுத்தும் சபைச் செயலாளர் டொக்டர் காந்தி ஆரியரத்ன குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"தனியார் வைத்திய நிலைங்களைப் பதிவு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட ஒரு கட்டணம் அறவிடப்படும்.

அந்த நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். 2017 ஆம் ஆண்டுக்கான பதிவை முன்னிட்டு ஒக்ரோபர் மாதத்திலேயே சில தனியார் வைத்திய நிறுவணங்கள் விண்ணப்பித்துள்ளன.

இவ்வாறு பதிவு செய்யப்படாமல் முன்னெடுத்துச் செல்லப்படும் தனியார் வைத்திய நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது"– என்றார் அவர். (ஏ)

## ஈழ அகதிகள் கடத்தல் குறித்து; இந்தியாவுடன் ஆஸி.பேச்சு

டில்லி, நவ.23

ஈழ அகதிகள் ஆள்கடத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதைத் தடுப்பதற்கான விசேட பேச்சு ஒன்று இந்தியாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் நடைபெற்றுள்ளது.

ஆஸ்திரேலியாவின் எல்லைப்பாதுகாப்புப் படையின் ஆணையாளர், ரோமன் கோட்லீக் உள்ளிட்ட பிரதிநிதிகள், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், கடற்பாதுகாப்புப் படையினர் மற்றும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்தவர்களும், தமிழ்நாட்டில் அகதிகளாக வாழ்கின்ற ஈழத் தமிழர்களும், இந்தியாவின் பல பகுதிகளின் ஊடாக ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் செல்ல முற்படுகின்றனர். கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்களின் போது அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்த ஈழ அகதிகளின் படகுகள் பல, தமிழகம் உள்ளிட்ட இந்தியக் கடற்பகுதியின் ஊடாகவே பயணத்தை ஆரம்பித்துள்ளமையும் தெரியவந்துள்ளது. இந்த நிலையிலேயே, இவ் வாறான அகதிகளின் பிரவேசத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அதிகாரிகளிடம் ஆஸ்திரேலியா கோரிக்கை விடுத்துள்ளது. (ஏ)

## 18 லட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் இலங்கையர் கைது

கொழும்பு, நவ.23

சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களுடன் இலங்கையர் ஒருவரைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கப் பிரிவினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

டுபாயில் இருந்து நாட்டுக்கு வருகைதந்த இலங்கையரே (வயது - 44) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுக்களின் பெறுமதி சுமார் 18 இலட்சம் என்று சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளை சுங்கப் பிரிவினர் கையகப்படுத்தினர்.

அத்துடன் சந்தேகநபருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஏ)

## நுவரெலியாவில் ஆற்றில் கொட்டப்படும் கழிவுகளால் நீர் மாசடையும் அபாயம்.

நுவரெலியா, நவ.23



நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட அக்கரபத்தனை மன்றாசிநகரத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் மன்றாசி நகரத்தை அண்மித்துக் காணப்படும் பாலத்தின் அருகில் கொட்டப்படுகின்றன.

இவ்வாறு கொட்டப்படும் கழிவுகள் அனைத்தும் ஆகுரோயா ஆற்றில் சேர்வதால் ஆற்று நீர் மாசடைவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அந்தப் பிரதேச மக்கள் குளிப்பதற்கும் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கும் இந்த ஆற்று நீரையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் தாம் சுகாதார ரீதியாகப் பாதிக்கப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நகரத்தில் சேர்க்கப்படும் குப்பைகள் பாதை ஓரத்தில் கொட்டப்படுவதாலும் அதனை நாய்கள் இழுத்துச் செல்வதாலும் அந்தப் பகுதியின் சுகாதார நிலை பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளது.

மழை காலங்களில் துர்நாற்றம் வீசுவதுடன், நுளம்புத் தொல்லையும் அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பல தடவை கள் இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டிய போதும், இதுவரை எவரும் கவனத்தில் எடுக்கவில்லை என்று பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே, நுவரெலியா பிரதேச சபை அதிகாரிகள் நகரத்தின் சுகாதார நடவடிக்கையைக் கருத்தில் கொண்டு குப்பைகளை முறையான இடத்தில் கொட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

### தினசரி ராசி பலன் 23.11.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 7.45 – 8.45 |
| | மாலை : 4.45 – 5.45 |
| ராகு காலம் | : 12.00 – 1.30 |
| குளிகன் | : 10.30 – 12.00 |
| எமகண்டம் | : 7.30 – 9.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் – மேல்நோக்கு நாள்

**மேஷம்** : சாந்தம் - மனக் குழப்பங்கள் குறைந்து வாழ்வில் சாந்தம் காணும் நன்னாள்.

**ரிஷபம்** : முயற்சி - நம்பிக்கையுடன் ஈடுபடும் அனைத்துக் காரியங்களும் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** : நலம் - இன்று மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நலம் ஏற்படும்.

**கடகம்** : நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பல கிடைக்கும்.

**சிம்மம்** : சினம் - வீண்கோபத்தால் அனைவரிடத்திலும் உள்ள மதிப்புக் குறையும்.

**கன்னி** : பாராட்டு - உழைப்புக்குத் தகுந்த பாராட்டுக்கள் கிடைக்கும்.

**துலாம்**: அலைச்சல் -வீண் அலச்சல்களும் மன உளைச்சல்களும் உண்டாகும்.

**விருச்சிகம்**: கவனம் - ஆரம்பிக்கும் காரியங்களில் சிறப்புக்கள் குறையும், ஆதலால் கவனத்துடன் இருக்க வேண்டிய நாள்.

**தனுசு**: ஆக்கம் - இன்று உங்களுடைய செயலில் நல்ல முன்னேற்றம் தோன்றும்.

**மகரம்**: ஆர்வம் - செய்யும் செயல்களில் மிகுந்த ஆர்வம் காணப்படும்.

**கும்பம்**: சிரமம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் அனைத்துக் காரியத்திலும் சிரமம் உண்டாகும்.

சந்திராஷ்டமம்: அவிட்டம் 3,4ம் பாதங்கள், சதயம்.

**மீனம்**: மேன்மை - இன்று எதிர்பாராத மேன்மை அடைவீர்கள்.



யாழ்.மாவட்ட சாரணர் சங்கம் நடத்திய கலாநிதி க.கனகராசா நினைவுப் பேருரை நிகழ்வு யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனுக்கு யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் செ.தேவறஞ்சன் மற்றும் மில்க்வைற் தொழிலதிபர் இ.தவகோபால் சேர்ந்து நினைவுப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (இ)

## விபத்தில் தம்பதியர் பலி

கொழும்பு, நவ.23

அவிசாவளை–மஹறதொல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் தம்பதியர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் லொறியும் ஓட் டோவும் மோதி இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தில் உயிரிழந்துள்ளோர் அவிசாவளை பிரதேசத்தைச் சேர்ந்த தம்பதியரான 30 வயதான நபரும் 28 வயதான பெண்ணும் என்று தெரியவந்துள்ளது. (ஏ)

## இலங்கை இளைஞர் திறன் அபிவிருத்திக்கு அமெ.உதவி


கொழும்பு, நவ.23

அமெரிக்கத் தூதரகத்தின் வருடாந்த இளைஞர் வலு வூட்டல் நன்கொடை நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக 8 உள்நாட்டு சிவில் சமூக நிறுவனங்களுக்கு சுமார் 60 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அமெரிக்கத் தூதரகம் வழங்கியுள்ளது.

சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதில் இருந்து, தலைமைத்துவப் பயிற்சியை வழங்கல், பால்நிலை சமத்துவத்தை முன்னிறுத்தல் மற்றும் ஒதுக்கப்பட்ட சமுதாயங்களின் உரிமைகள் மேம்படுத்தல் என்ற வகையில் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள இளைஞர்சார் குழுக்களுக்கு ஆதரவளிப்பதில் அமெரிக்கத் தூதரகம் பெருமை கொள்வதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பொது விவகாரங்களுக் கான அதிகாரி ஜேம்ஸ் ரூஸோ குறிப்பிட்டுள்ளார்.

சமுதாய அபிவிருத்தி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, நல்லிணக்கம், மனித உரிமைகள் மற்றும் வேலைவாய்ப்பு திறன்களை விருத்தி செய்தல் என்பவற்றை இலக்கு வைத்த நிகழ்ச்சிகளுடனான பல்வேறு பிரேரணைகளில் இருந்து வெற்றி பெறுநர்கள் 8 பேர் இவ்வருடத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ரூ.135 மில்லியனை இளைஞர் வலுவூட்டல் நன்கொடை நிகழ்ச்சியின் ஊடாக அமெரிக்கத் தூதரகம் வழங்கியுள்ளது. (ஏ)





மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வல்லையில் அண்மையில் மரங்கள் நட்டு வைக்கப்பட்ட போது பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டு மரங்களை நட்டுவைத்தனர். இதன்போது மாணவர்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. மாகாண சபை உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், ச.சுகிர்தன் ஆகியோர் மரக்கன்றுகளை வழங்குவதையும் அருகில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனையும் காண்கிறீர்கள்.







போர் என்னும் சூறாவளியால் அள்ளுண்டு புலம்பெயர் மண்ணெங்கும் தூக்கி வீசப்பட்டவர்கள் எம்மக்கள்.

அதில் நோர்வே பேர்கன் ஒஸ்லோவில் புகலிடம் பெற்று வாழ்ந்துவரும் எம் உறவுகள், எம் சமூகப்பிள்ளைகள் கல்வியில் முன்னேற வேண்டும், என்ற நல்ல நோக்கோடு பேர்கன் ஒஸ்லோ இணையத்தை உருவாக்கி மாலை நேர விசேட வகுப்பு நடத்தும்படி வேண்டினர்.

அதை அடுத்து இந்த இணையம் உருவானது. இங்கு கல்வி பயிலும் மாணவர்களில் 2016ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் 10 ஆண்டுகளின் பின் இவ் வருடம் ஒரு மாணவன் சித்தியடைந்துள்ளார்.

அவரையும், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஏனைய 19 மாணவர்களையும், அவர்களின் உயர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களையும் பாராட்டும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. நிகழ்வில் சில பதிவுகள். (இ





யாழ்.பிரதேச செயலகத்தின் கலாசார பேரவை, கலாசார அதிகார சபையால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் பெருவிழா அண்மையில் யாழ். கலைத்தூது மண்டபத்தில் பிரதேச செயலர் பொ. தயானந்தன் தலைமையில் நடைபெற்றது.


இதில் பிரதம அதிதியாக யாழ்.மேலதிக அரச அதிபர் (காணி) எஸ். முரளிதரன் கலந்துகொண்டு யாழ்.ரத்னா விருது பெற்றவர்களைக் கௌரவித்தார். யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரியைச் சேர்ந்த கலா பூஷணம் திருமதி தமீமா றஹீம் இதன் போது யாழ்.ரத்னா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ஐ-19)







கொக்குவில் வளர்மதி முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா கடந்த ஞாயிறன்று இடம்பெற்றது. கட்டடத்தை யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் திறந்து வைப்பதையும், நிகழ்வுக்கு தலைமை வகித்த ஆ.சத்தியமூர்த்தி விருந்தினர்களான மகப்பேற்று வைத்திய நிபுணர் கு.சுரேஷ்குமார். நல்லூர் பிரதேச செயலர் ஆ.சிறி, மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மற்றும் கிராம அலுவலர்கள் இ.இரட்ண கோபால், தே.பராசக்தி ஆகியோரையும் படங் களில் காணலாம். (இ-12)





யாத்ரிகனின் 'காலப் பழி' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமை உரையாற்றினார். கரவெட்டிப் பிரதேச செயலர் நூலை வெளியிட்டு வைத்தார். (ஐ-40)

# மாவீர் தினம் கொண்டாடத் தடை !

## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.23

மாவீர் தினம் கொண்டாட தடை விதிக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித் துள்ளார்

நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இத தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த கால யுத்தத்தில் நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்தவர்களுக்கும், இந்த யுத்தத்தில் உயிரிழந்த பொது மக்களுக்கும் அஞ்சலி செலுத்த முடியும்.



ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த உறுப்பினர்கள் மற்றும் அவர்களுக்கு உதவி புரிந்தவர்களுக்கு மாவீரர் தினம் கொண்டாட அனுமதிக்க முடியாது. அவர்கள் எமது நாட்டுக்காகவோ அல்லது நாட்டு மக்களுக்காகவோ போராடவில்லை.

நாட்டுக்காக உயிரிழந்திருந்தால் அஞ்சலி செலுத்துவது தவறான விடையம் இல்லை. ஆனால் அவர்கள் நாட்டுக்காக போராடவில்லை.

எனவே, இந்த மாவீரர் தினம் அனுஷ்டிப்பதற்கோ, அல்லது பயங்கரவாதத்துடன் தொடர்புடைய இவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கோ இந்த நாட்டில் ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளார்.

# மட்டக்குளியில் சுற்றிவளைப்பு; சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது

கொழும்பு, நவ.23


மட்டக்குளி - காக்கைதீவு பிரதேசத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் சந்தேகத்தின்பேரில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோதரை, கொட்டாஞ்சேனை, தெமட்டகொடை பொலிஸார் மற்றும் பொலிஸ் அதிரடிப்படையினர் இணைந்து மட்டக்குளி - காக்கைத்தீவு பிரதேசத்தில் நேற்று அதிகாலை காலை திடீர் சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

இப் பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனை இடம்பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலுக்கு அமையவே இந்த திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டதாக பொலிஸ் அதிரடிப்படைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் போதுபோதைப் பொருள்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்களிடம் கைரேகை அடையாளங்கள் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# முந்திச் செல்ல முயன்ற பஸ்கள்; விபத்தில் சிக்கி ஐவர் படுகாயம்



புத்தளம், நவ.23

புத்தளம் நாகவில்லு பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற விபத்த்தில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றும் சிலாபத்திலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதியே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இருண்டு பஸ்களும் வீதி விதிகளை மீறி ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, பின்தொடர்ந்து வந்த வான் ஒன்றும் பஸ்ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பஸ் சாரதி ஒருவரும், வீதி ஓரமாக நின்ற ஒருவர் மற்றும் பஸ்ஸில் பயணி த்தவர்களில் சிலரும் படுகாமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள ப்பட்டு வருவதாகவும் புத்தளம் பொலிஸார் தெரிவித்து ள்ளனர்

# 25 ஆயிரம் ரூபா அபராதம் மக்களுக்கு பெரும் சுமை!

## மஹிந்த ராஜபக்ஷ கவலை

கொழும்பு, நவ.23

வாகனப் போக்குவரத்து விதிகளை மீறினால் 25,000 ரூபா அபராதம் விதிக்கப்படுமாயின் அது மக்களுக்கு பெரும் சுமையாக அமையும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வாகனப் போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள 25,000 ரூபா அபராதம் நாட்டு மக்களின் வருமான நிலைக்கு பொருத்தமற்றது.



சாரதிகள் மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோர் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்குவார்கள்.

குடிபோதையில் வாகனம் செலுத்துவோருக்கு வேண்டுமென்றால் இந்த அபராதம் பொருத்தமாக அமையும். எனினும் ஏனைய அபராதங்கள் மக்களின் வருமான நிலைமைக்கு ஏற்புடையதல்ல.

சாரதி அனுமதிப்பத்திரம் காப்புறுதி பத்திரம் போன்றவற்றை எடுத்துச் செல்ல சிலர் மறந்து விடக் கூடும்.

இவ்வாறான சந்தர்பங்களில் பெரியளவில் அபராதம் விதிப்பது பிழையானதாகும். ஓட்டோ சாரகள் தவறிழைத்தால் அவர்களது ஒரு மாத வருமானமே அபராதத்துக்கு செலுத்த நேரிடும்.

நாட்டின் வருமான நிலையை கருத்தில் கொண்டே அபராதம் விதிக்கப்பட வேண்டும். அபராதம் செலுத்த முடியாதவர்களை சிறையில் அடைக்க நேரிடும்.

அப்போது அவர்களை பராமரிக்க அரசுக்கு மேலதிக செலவு ஏற்படும் என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# மஹிந்தவுக்கு எதிரான வழக்கு பிற்போடப்பட்டது.!

கொழும்பு, நவ.23

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபஷ 2015 ஆம் ஆண்டு இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டிகளை பயன்படுத்தி கட்டணம் செலுத்தப்படாமல் இருந்த 14.25 கோடி ரூபாவை பெற்றுக்கொள்ளும் வகையில் தொடுக்கப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ உட்பட நான்கு பேருக்கு எதிராக இலங்கை போக்குவரத்து சபை கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தில் தெடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, மஹிந்த ராஜபக்ஷ சார்பாக ஆஜரான நீதவான் விடுத்த கோரிக்கைக்கு அமைய குறித்த வழக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்ன யாபா மற்றும் காமினி செனரத் ஆகியோர் இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தனர்.

# சாதாரண தரத்தில் கணிதப்பாடத்தை கட்டாயப்படுத்துவது அவசியமாகும்

கொழும்பு, நவ.23

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் கணிதப் பாடத்தில் சித்தியடைவது கட்டாயமாக்கப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய காலக்கட்டத்தை பொறுத்தவரையில் எந்தவொரு தொழிலை எடுத்துக் கொண்டாலும் அடிப்படை கணித அறிவு அவசியமாகிறது.

அதனால் கணித பாடத்தில் சித்தியடையாமல் உயர்தரம் கற்பதற்கான திட்டத்தை அரசு கைவிட வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

# மாணவர்களுக்கான போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு குழு நியமனம்

கொழும்பு, நவ.23

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்தை பாதுகாப்பான முறையில் முன்னெடுக்கவும், அந்த சேவையின் தரத்தை உயர்த்துவதும் இதன் நோக்காகும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சிசிர கோத்தாகொட தெரிவித்துள்ளார்.

இந்த குழுவை நியமிப்பது தொடர்பில் உரிய தரப்பினர்களிடையில் கலந்துரையாடல் நடத்தியுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சில தினங்களில் இதுதொடர்பிலான அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தற்போது பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காக 40 ஆயிரம் வாகனங்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ரயில் விபத்துக்கள் அதிகரிப்பு

கொழும்பு, நவ.23

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் ரயில் விபத்துக்கள் அதிகரித்துள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மாத்திரம் 59 விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக ரயில்வே பிரதி போக்குவரத்து அத்தியட்சகர் டி.எஸ். பொல்வத்தகே குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய ரயில் கடவை ஊடாகவும், ரயிலின் மிதிபலகையிலும் பயணித்தவர்களே விபத்துக்குள்ளாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் மாதம் வரையில் 40 ரயில் விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக ரயில்வே திணைக்கள பிரதி போக்குவரத்து அத்தியட்சகர் டி.எஸ்.பொல்வத்தகே கூறினார்.

நவம்பம் மாதத்தில் மாத்திரம் 19 ரயில் விபத்துக்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நியூஸிலாந்திலும் நேற்று நிலநடுக்கம்

வெலிங்டன், நவ.23

நியூசிலாந்தில் மத்திய பகுதியில் நேற்று 6.3 ரிச்டர் அளவில் பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது.

நியூசிலாந்தின் வடபகுதி தீவுகளை மையமாகக் கொண்டு பூமிக்கு அடியில் சுமார் 37 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட நேற்றைய நிலநடுக்கத்தின் சேத விவரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை. (ஏ)

## குரங்கால் ஏற்பட்ட மோதலில் 20 பேரின் உயிர்கள் காவு!

திரிபோலி, நவ.23

லிபியாவில் குரங்கு ஒன்றால் ஏற்பட்ட மோதல் சம்பவம் 20 பேர் உயிரைக் காவு கொண்டுள்ளது. தென்லிபியாவின் நகர் ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் செல்லப் பிராணியாக வளர்க்கப்பட்டு வந்த குரங்கு ஒன்று பாடசாலை மாணவி ஒன்றைத் தாக்கிக் காயப்படுத்தியது. இதனால் ஆத்திரமுற்ற மாணவியின் உறவினர்கள் குரங்கையும் குரங்கின் உரிமையாளர்கள் மூவரையும் கொலை செய் துள்ளனர்.

அதைத்தொடர்ந்து இரண்டு குடும்பங்களுக்கும் இடையில் ஏற்பட்டகுழு மோதலில் மொத்தம் 20 பேர் கொல்லப்பட்டனர். பெரும் எண்ணிக்கையானோர் காயம் அடைந்தனர். (ஏ)

# நில நடுக்கத்தை தொடர்ந்து ஜப்பானைத் தாக்கியது சுனாமி

## இடம்பெயர்கின்றனர் மக்கள்; 14 பேர் காயம்





டோக்கியோ, நவ.23

ஜப்பானில் நேற்று அதிகாலை 7.4 என்ற ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து மேற்கு ஜப்பானை சுனாமி தாக்கியுள்ளது. பசிபிக் பெருங்கடலில் 11.3 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் 14 பேர் காயம் அடைந்தனர்.

இருப்பினும் இந்த நில அதிர்வை அமெரிக்கா 6.9 ரிச்டர் என்று தனது புவியியல்சார் ஆய்வு மையத்தினூடாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும், புகுஷிமா தீவில் இருந்து 6 கி.மீ. தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் அங்குள்ள அணு உலைகளுக்கு பெரும் ஆபத்து ஏற்படும் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மேற்கு ஜப்பானை சுனாமி தாக்கியுள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சுனாமி அலைகள் சுமார் 4.5 அடி உயரம் வரை எழும்பியுள்ளன என்றும், இது புகுஷிமாவில் இருந்து சுமார் 70 கி.மீ. தொலைவில் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.


மேலும், இந்த சுனாமி அலைகள் சுமார் 10 அடி உயரம் வரை நிகழும் ஆபத்து உள்ளதால் மேற்கு ஜப்பானைச் சுற்றியுள்ள பொதுமக்கள் அவசர அவசரமாக இருப்பிடங்களிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இதே பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் விளைவாக ஏற்பட்ட சுனாமிப் பேர லைகளின் எழுச்சியால் புகுஷிமா அணு உலையில் இருந்த 3 ரியாக்டர்கள் உருகியதும், சுமார் 18 ஆயிரம் பேர் இறந்தும், காணாமல் போனமையும் குறிப்பிடத்தக்கது.

**இலங்கையருக்கு பாதிப்பில்லை**

இந்த நில நடுக்கத்தால் ஜப்பானிலுள்ள இலங்கையர்கள் எவருக்கும் பாதிப்பு இல்லை என்று இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் பேராசிரியர் கங்காநாத் திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ஏ)

# அமெ.பாதுகாப்புச் செயலாளராக முன்னாள் படைத் தளபதி நியமனம்?



பெட்மின்ஸ்டர், நவ.23

அமெரிக்காவின் புதிய பாதுகாப்புச் செயலாளராக வாய்ப்பு ஜேம்ஸ் மேத்திஸுக்கு உள்ளதாக ட்ரம்புக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் தனது நிர்வாகத்தில் முக்கிய பதவிகளுக்கு நியமிப்போரைத் தெரிவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

நியூஜெர்சியின் பெட் மின்ஸ்டரில் உள்ள அவரது கோல்ப் விடுதியில் இதற்கான ஆலோசனை தொடர்ந்து நடை பெற்று வருகிறது.

மசாசூசெட்ஸ் மாகாண முன்னாள் ஆளுநரும், 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டவருமான மிட் ரோம்னி, ஓய்வு பெற்ற கடற்படைத் தளபதி ஜேம்ஸ் மேத்திஸ் ஆகியோருடன் கடந்த 19 ஆம் திகதி ட்ரம்ப் நீண்ட நேரம் ஆலோசனையில் ஈடுபட்டார்.

இதில் மிட் ரோம்னி புதிய வெளியுறவு செயலாளராக நியமிக்கப்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படும் நிலையில், ஜேம்ஸ் மேத்திஸ் புதிய இபாதுகாப்புச் செயலாளர் மற்றும் பென் டகனின் தலை வராகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக ட்ரம்புக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதை உறுதிப்படுத்தும் வகையில் ட்ரம்ப் கடந்த சனிக் கிழமை தனது 'டுவிட்டர்' தளத் தில் 'மேத்திஸ்' மிகவும் சுவாரஸ்யமானவர்' என்று புகழ்ந்து செய்தி வெளியிட்டிருந்தார்.

66 வயதான மேத்திஸ் 2010-2013 வரை அமெரிக்காவின் வெளிநாட்டுப் போர்களைத் தலைமை தாங்கி நடத்தியுள்ளார். அந்த வகையில் ஆப்கனிஸ் தான், ஈராக் போன்ற மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியப் போர்களை அவர் வழிநடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# கிறிஸ்மஸ் நிகழ்வில் தீவிரவாதிகள் ஐரோப்பாவில் தாக்குதல் நடத்தலாம்

## அமெ. வெளியுறவுத்துறை எச்சரிக்கை

வொஷிங்டன், நவ.23

ஐரோப்பாவில் கிறிஸ்மஸ் நிகழ்வுகளின்போது தீவிர வாதத் தாக்குதல்கள் நடத்தக் கூடும் மிக ஆபத்து உள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை எச்சரித்துள்ளது.

கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகள் உட்பட பல இடங்களில், இஸ்லாமிய அரசு என்று தங்களை அழைத்துக் கொள்ளும் தீவிரவாத அமைப்பு மற்றும் அதன் இணை அமைப்புகள் தாக்கு தல் நடத்தத் திட்டமிட்டு வரு கின்றன என்று நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன என்று அமெரிக்க மக்களிடம் அந்நாட்டின் அமெரிக்க வெளி யுறவுத் துறை கூறியுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு, பிரான்சில் உள்ள கிறிஸ்மஸ் அங்காடிகளில் இரண்டு தனித்தனி தாக்குதல் கள் நடைபெற்றன.

இவ்விரு தாக்குதல்களிலும், அங்காடி களில் பொருள்களை வாங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது வான் அல்லது காரில் சென்ற தாக்கு தல்தாரிகள் தாக்குதல் நடத்தினர்.

கடந்தவார இறுதியில், பயங்கரவாதத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் ஏழு பேரை பிரான்ஸ் பொலி ஸார் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# காபூல் மசூதியில் தாக்குதல் 32 பேர் பலி;45 பேர் காயம்

காபூல், நவ.23

ஆப்கனிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஷியா பிரிவினருக்கான மசூதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 32 பேர் உயிரிழந்தனர். 45 பேர் காயமடைந்தனர்.

இதுதொடர்பில் காபூல் நகர பொலிஸ் அதிகாரி பரீதூன் ஒபையாடி கூறியதாவது:

"காபூலின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பக்கீர்-உல்-உலாம் மசூதியில், முஸ்லிம்களின் இறைதூதர் முகமது நபியின் பேரன் இமாம் ஹுசைனின் நினைவு தினத்தையொட்டி ஏராளமான ஷியா பிரிவினர் திங்கள்கிழமை கூடியிருந்தனர்.

இதன்போது அந்தக் கூட்டத்துக்குள் புகுந்த தற்கொலைப் படையபங்கரவாதி, தமது உடலில் மறைத்து வைத்திருந்த வெடி பொருளை வெடிக்கச் செய்தார்.

2 தளங்களைக் கொண்ட அந்த மசூதிக் கட்டடத்தின் முதல் தளத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது"- என்றார் அவர்.

இந்தத் தாக்குதலில் 32 பேர் உயிரிழந்தனர் என்றும், 45 பேர் காயமடைந்தனர் என்றும் பொது சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்தது.

இதேவேளை இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

# பள்ளி வான் மரத்தில் மோதி 6 குழந்தைகள் பரிதாப சாவு

நியூயோர்க், நவ.23

அமெரிக்காவின் தென்பகுதியில் உள்ள டென்னஸீ மாநிலத்தில் பாடசாலை வான் மரத்தில் மோதியதில் 6 குழந்தைகள் உயிரிழந்தன.

அமெரிக்காவின் டென்னஸீ மாநிலத்தில் உள்ள சட்டானூகா நகரில் நேற்று முன்தினம் மாலை பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் சுமார் 35 குழந்தைகளுடன் வந்த பாடசாலை வான், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, வீதி யோரம் இருந்த மரத்தின்மீது பயங்கரமாக மோதியது.

மோதிய வேகத்தில் அந்த வான் மரத்தின் அருகில் கவிழ்ந்தது. தகவல் அறிந்து, விரைந்த மீட்புக் குழுவினர், வானின் உள்ளே உடல் சிதைந்த நிலையில் இருந்த 5 குழந்தைகளின் உடல்களை வெளியே எடுத்தனர்.



காயமடைந்த 20 இற்கும் அதிகமான குழந்தைகள் அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் ஒரு குழந்தை சிகிச்சை பயனின்றி பலியானதால் இந்த விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது.

மிதமிஞ்சிய வேகமே இந்த விபத்துக்குக் காரணம் என்று கருதும் உள்ளூர் பொலிஸார் இந்தச்சம்பவம் தொடர்பாக பாடசாலை வான் சாரதியைக் கைதுசெய்து, விசாரித்து வருகின்றனர். (ஏ)

காலைக்கதிர் Kalaikkathir


# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

பொன்.வேணு கிருஷ்ணா

## இலங்கையரை ட்ரம்பின் வருகை எவ்வாறு பாதிக்கும்?

பனிப்போர் காலத்தில் - குறிப்பாக 1970 களின் பிற்பகுதியில் ஐ.தே.கட்சியின் ஜெயவர்த்தனா அரசு காலத்தில், தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் தமிழ் நாட்டைத் தளமாகக் கொண்டு தோற்றம் கொண்டன.

இலங்கையில் தமிழ் மக்களின் புவியியல் பிரதேசம் இந்தியாவின் தமிழ் மாநிலமான தமிழ் நாட்டுக்கு மிக அண்மையில் இந்தியாவின் வாசற் படிக்கல் போல அமைந்திருப்பதாலும் -

இந்தியாவின் பாதுகாப்புக் கொள்கை, வெளிவிவகாரக் கொள்கை ஆகியவற்றில் புவிசார் அரசியல் - இராணுவ கேந்திரங்களில் மிக முக்கியமான இடத்தில் இலங்கை என்றும் இருப்பதாலும் -

பனிப்போர் கால அரசியல் சித்தாந்த- இராணுவ உபாயங்களின் அடிப் படையிலும் தமிழ் நாட்டின் தேர்தல் அரசியலிலும் சிலவேளை புதுடில்லியின் ஆட்சியாளருக்கான பலத்தை நிர்ணயிப் பதிலும் இலங்கை இனப்பிரச்சினை செல்வாக்குச் செலுத்தியதாலும் -

அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மற்றும் அன்றைய தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்) ஆகியோருக்கிடையில் நிலவிய நல்லுறவின் நிமிர்த்தமாக அவர்கள் இருவரும் இணக்கமாகச் செயற்பட்டமையாலும்-

இது சாத்தியமாயிற்று.

அதற்குப் பின்னர் கழிந்த முப்பது ஆண்டுகளும் இலங்கை மாதாவை இரத்தம் தோய்ந்த வரலாற்றின் சொந்தக் காரியாக்கியது. சிலவேளைகளில் இந்தியத் தாயும் அந்த இரத்த வெள்ளத்தில் கை நனைத்துக் கொண்டாள். இலங்கை மக்களின் அழிவின் 'பாவம் பழிகளில்' பெரும் பகுதி இந்திய கொள்கை வகுப்பாளர்களையே சாரும்.

இப்பொழுது பூகோளத்தில் இலங்கைக்கான சதுரங்கம் எப்படியுள்ளது. ஹிலாரி கிளிண்டனின் தோல்வியால் இலங்கை இராஜதந்திரிகள் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியுமா?

இப்போதுதான் இலங்கைக்கு புதிய சிக்கலான களம் காத்திருக்கிறது.

புதிதாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான, குடியரசுக்கட்சி நிர்வாகத்துக்குட்படவுள்ள அமெரிக்கா - பல்வேறு பாரிய வர்த்தக - பொருளாதார உடன்பாடுகளுக்கூடாக இலங்கையைப் 'புணரும்' சீனா -

தமது வாசற்படியான இலங்கை மண் தமக்குப் 'பிடித்தமான அழகுடன்' இருக்கவேண்டும் என எதிர்பார்க்கும் இந்தியா -

இம் மூன்று பாரிய வல்லரசுகளின் வியூகங்களை விளங்கிச் செயற்படுவது மிகக்கடினமாகும்.

இலங்கையில் அமையும் எந்த அரசும் தமக்குச் சொந்தமான வல்லரசுகளைக் கையாளும் இராஜதந்திர அனுபவங்களைக் கொண்டவை எனும் அடிப் படையில் சமகாலத்தில் ஒரே நேரத்தில் இந்தியாவையும் சீனாவையும் பல்வேறு பரிமாணங்களிலும் திருப்திப்படுத்தும் வெளிவிவகாரக் கொள்கையைக் கடைப் பிடிக்கும் போக்கு மஹிந்த அரசில் உறுதியாகவும் தற்போதைய நல்லாட்சி அரசில் கணிசமான அளவிலும் தெரிகிறது.

ஆனால் தமது விருப்பு-வெறுப்புக் களை பிற்போட்டுவிட்டு அல்லது மதிக்காமல் இலங்கை நடந்து கொள்கிறது என இந்திய இராஜதந்திரிகள் குழம்பாதபடிக்கு இலங்கை - சீன உறவைப் பேணியபடி, அதேவேளை இந்திய உறவையும் பேணுவது மிகக் கடினமான இராஜதந்திர முகாமைத்துவமாகும்.

"கொழும்பில் நிலைகொண்டுள்ள இலங்கையின் மூத்த இராஜதந்திரியொருவர் அண்மையில் இவ்வாறு கூறினார். "ஜனநாயகக் கட்சியின் ஒபாமா நிர்வாகக் காலத்தில் சமந்தா பவர், சுசான் ரைஸ் மற்றும் றொபேட் ஓ பிளேக் போன்றோர் இலங்கை விவகாரத்தினுள் உள் நுழைந்து நுண்முகாமைத்துவம் (Micro Management) செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். குடியரசுக் கட்சி நிர்வாகத்திலிருந்த றிச்சார்ட் ஆர்மிரேஜுக்கு இலங்கை விவகாரம் புரியும். ஆனால், ட்ரம்ப் இலங்கை விவகாரத்தை அக்கறைக்குரியதாக எடுப்பார் போலத் தெரியவில்லை. ஆகையால், கடந்த காலங்களில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா தலைமை தாங்கி முன்னெடுத்த இறுக்கமான தீர்மானங்கள் போன்றன ஐ. நா. மனித உரிமை சபை போன்றவற்றில் எதிர்பார்க்க முடியாது".- என்றார்.

அப்போது இக்கட்டுரையாளர் தென் கொரியப் பாதுகாப்பில் அமெரிக்காவின் யுக்தி தொடர்பான ஒரு கேள்விக்கு விடையளிக்கையில், "சர்வதேச ஊடகமொன்றில் டொனால்ட் ட்ரம்ப் 'வட கொரியா சீனாவின் குழந்தை என்றும் வடகொரியாவைக் கையாளும் பொறுப்பை சீனாவிடமே அமெரிக்கா ஒப்படைக்கும் என்றும்' கருத்தளவிலேதானும் கூறத் துணிந்துள்ளார். இதை தென்னாசியச் சூழலில், பிரயோகித்தால் இலங்கையைக் கையாளும் பொறுப்பு இந்தியாவிடம் இயல்பாகவே போய்ச்சேர வாய்ப்பு உள்ளதல்லவா? அவ்வாறு போய்ச் சேர்ந்தால் சீனாவுடன் இலங்கை மேற்கொள்ளும் உறவைப் பொறுத்து இந்திரா காந்தி காலத்தில் ஏற்பட்டமை போல இலங்கை -இந்திய உறவில் விரிசல் தோன்றலாமல்லவா?" எனக் கேட்டார்.

அந்த இராஜதந்திரி விடை கூறுவதிலிருந்து நோகாமல் நழுவிக் கொண்டு பின்வருமாறு கூறினார். "ரம்பின் தெரிவு அமெரிக்காவை நாற்பது, ஐம்பது வருடங்களுக்கு முந்தைய நிலைக்கு இழுத்துச் செல்கிறது. வெள்ளையர்கள் பயன்படுத்தும் கக்கூஸை கறுப்பர்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு நிறவாதம் மீண்டும் எழலாம். மாட்டின் லூதர்கிங் போராடிய சூழல் மீண்டும் தோன்றும். டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவை இரண்டு படுத்தியுள்ளார்; ஐரோப்பாவை இரண்டு படுத்தியுள்ளார்; உலகத்தை இரண்டு படுத்தியுள்ளார். காலச் சுழற்சியில் உலகம் மீண்டும் காட்டுமிராண்டித்தனத்துக்குள் நுழைகிறதோ என எண்ணத் தோன்றுகிறது. நான் டொனால்ட் ட்ரம்ப் சிறிய வித்தியாசத்தில் வெல்லுவார் என எதிர்பார்த்தேன். ஆனால் கடைசி நேரத்தில் ஹிலாரி மீது முன்வைக்கப்பட்ட கிரிமினல் அம்சங்களைக் கொண்ட ஈ-மெயில் குற்றச்சாட்டும் -அது தொடர்பில் FBI செயற்பட்டவிதமும் டொனல்ட் ட்ரம்பின் வெற்றியை பெருவெற்றியாக்கிவிட்டது. ஜனாதிபதியாகத் தெரிவாகிய பின்னரும் கூட, அந்த ஈ-மெயில் விவகாரத்துக்காக ஹிலாரி கிரிமினல் குற்றச்சாட்டின் அடிப்படையில் விசாரணைக்குட்படவும் அதன் வழி அவர் தனது பதவியை ராஜினாமாச் செய்யவோ இழக்கவோ நிறைய வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம். அதனால் அவ்வாறான ஒருவருக்கு வாக்களித்து ஏன் தமது வாக்குகளையும் நேரத்தையும் வீணடிப்பான் என பல லட்சம் மிதக்கும் வாக்காளர்கள் ட்ரம்ப் பக்கம் சாய்ந்திருக்கலாம்" என கொழும்பில் நிலைகொண்டுள்ள ஓய்வுபெற்ற அந்த மூத்த இராஜதந்திரி கூறினார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் Daily Mirror பத்திரிகையில் அண்மையில் சிரேஷ்ட ஊடகவியலாளர் Ranga Jayasuriya எழுதிய ஆய்வொன்று மிகவும் கவனத்தை ஈர்க்கிறது. அதன் முக்கிய பகுதிகளின் மொழிபெயர்ப்பை வாசகர்களுக்காகத் தருகிறோம்.

"ஏற்கனவே செயற்பட்டுக் கொண்டிருக்கும் கூட்டமைப்புக்கள் மற்றும் ஒப்பந்தக் கடமைகள் போன்றன ட்ரம்ப்பின் ஆட்சியில் இல்லாதொழிக்கப்படுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப் படுமா என்கின்ற அச்சமும் நிலவுகிறது. இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டால் அவை அமெரிக்க ஜெனரல்கள் மற்றும் இராணுவத்துறையால் எதிர்க்கப்படலாம். தென்கொரியா மற்றும் ஜப்பான் போன்றவற்றுடனான நம்பகமான நட்பை அமெரிக்கா தனது சொந்தப் பாதுகாப்புக்காக முறித்துக் கொண்டால் கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. எது எவ்வாறெனினும் இலங்கை போன்ற நாடுகளுடனான ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்காவின் உறவு மிகவும் வேறுபட்டதாகவே இருக்கும்".

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் அண்மையில் நல்லதோர் உறவைக் கட்டியெழுப்புவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

**முதலாவது-**

"இலங்கை மீதான இராஜதந்திர நலன்கள் மற்றும் வொசிங்டனுடன் இணங்கிச் செல்லக் கூடிய அரசு தற்போது நாட்டில் ஆட்சி செய்வது" என்பதாகும்.

**இரண்டாவது -**

"சீனாவுக்கு எதிரான அமெரிக்காவின் நகர்வில் இலங்கை கேந்திர முக்கியத்துவம் மிக்கதோர் இடத்தில் அமைந்துள்ளது" என்பதாகும்.




"அமெரிக்காவின் இலங்கை மீதான எதிர்பார்ப்பு முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ அரசின் சீனாவுடனான அதிகரித்த உறவாலும் இலங்கையில் சீனா அதிக செல்வாக்குச் செலுத்தியதாலும் சீர் குலைந்தது. ஆனால் ராஜபக்ஷவைத் தோற்கடித்து ஆட்சிக்கு வந்த சிறிசேன- விக்கிரமசிங்க அரசு அமெரிக்காவுடன் நல்லுறவைப் பேணுவதில் முக்கியத்துவம் காண்பித்தது.

"தற்போது, முஸ்லிம்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிப்பதுடன், சட்ட ரீதியற்ற வகையில் அமெரிக்காவில் குடியேறியுள்ள 11 மில்லியன் லத்தினீயர்களை வெளியேற்றுவேன் எனவும் வாக்குறுதி வழங்கியுள்ள ட்ரம்ப், ஜனநாயக ஆட்சியை மேற்கொள்வார் என்றோ அல்லது அதற்குப் போதிய ளவு உந்துதலை வழங்குவார் என்றோ எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக பூகோள அரசியல் போன்று கூட்டு ஒப்பந்தங்களை விரிவாக்குவதில் ட்ரம்ப் ஈடுபாடு காட்டமாட்டார். இவ்வாறான பூகோள அரசியல் கூட்டு ஒப்பந்தங்களுக்குக் ஹிலாரி கிளிண்டனே ஆதரவு வழங்கியிருந்தார்.

"ஆசிய பசுபிக் நாடுகள் மற்றும் அமெரிக்கா இணைந்து மேற்கொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தமான Trans pacific Partnership என்கின்ற கூட்டு ஒப்பந்தத்தை இல்லாதொழிப்பேன்" என ட்ரம்ப் ஏற்கனவே வாக்குறுதி வழங்கியுள்ளார்.

இது ஒரு பொருளாதார வளர்ச்சியை நோக்கிய ஒப்பந்தமாகும்

(கட்டுரையாளர் குறிப்பு: தான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற அன்றோ மறு நாளோ "ஆசிய பசுபிக் நாடுகள் மற்றும் அமெரிக்கா இணைந்து மேற்கொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தமான rans pacific Partnership என்கின்ற கூட்டு ஒப்பந்தத்தை இல்லாதொழிப்பேன்" என ட்ரம்ப் மீண்டும் இரு நாள்களுக்கு முன்பு கூறியுள்ளார்.)

ட்ரம்ப் அரசானது தனது நிர்வாக முன்னுரிமைகளை மாற்றியமைத்தால் அமெரிக்காவைத் தனது பயனுள்ள நட்பு நாடாகத் தக்கவைத்துக் கொள்வதென்பது இலங்கைக்குக் கடினமான பணியாகும். அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியினரை விடக் குடியரசுக் கட்சியுடனேயே அண்மையில் இலங்கை அரசு நல்லுறவைக் கட்டியெழுப்பியிருந்தது. 2000 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசு அமெரிக்காவின் அப்போதைய உதவி இராஜாங்கச் செயலர் றிச்சார்ட் ஆர்மிரேஜுடன் நல்லுறவைப் பேணியது. இத்தனிப்பட்ட உறவு புஷ் நிர்வாகத்துடன் இலங்கையின் அப்போதைய அரசு பயனுள்ள மூலோபாய உறவைக் கட்டியெழுப்ப உதவியது.

"அமெரிக்காவின் ஈராக்கிய ஆக்கிரமிப்புக்கு இலங்கை ஆதரவை வழங்கியிருந்தது. அமெரிக்கா தலைமையிலான கூட்டணிக்கு உதவும் முகமாக இலங்கையிலிருந்து ஒரு பற்றாலியன் பொறியியலாளர்களை அனுப்புவதாக ஐ.தே.க. அரசு வாக்குறுதி அளித்தது. ஆனாலும், இது செயலுருப் பெறுவதற்கு முன்னரே முன்பு ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவின் முயற்சியால் அப்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசு வீழ்ந்தது.

"எனினும், குடியரசுக்கட்சியின் நடைமுறைகளை ட்ரம்ப் பின்பற்றவில்லை. இந்த நடைமுறைகள் தனது பரப்புரையைக் குழிதோண்டிப் புதைப்பனவாக ட்ரம்ப் குற்றம் சுமத்தியிருந்தார். பொப் டோல் தவிர குடியரசுக் கட்சியின் மூத்த அரசியல்வாதிகள் எவரும் ட்ரம்பின் இந்தக் கருத்தை ஆதரிக்கவில்லை. இந்நிலையில், ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் ஐ.தே.க. மற்றும் அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் பழைய றிச்சார்ட் ஆர்மிரேஜுடனான உறவு எவ்வாறு உதவும் என்பது தெளிவற்றதாகவே காணப்படுகிறது'

"அமெரிக்காவின் பிரசன்னத்தைக் குறைப்பதென ட்ரம்ப் தீர்மானித்தால், இலங்கை மட்டும் பாதிக்கப்படமாட்டாது. ஒபாமா நிர்வாகத்தின் நட்பு நாடாக விளங்கிய இந்தியாவும் இதனால் பாதிக்கப்படும். இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான மூலோபாய நட்புறவானது உச்சளவிலேயே காணப்படுகிறது. அத்துடன், இந்த உறவு ஒபாமா நிர்வாகத்தில் மேலும் நெருக்கமடைந்துள்ளது.

"குறுகிய-வெளிப்படையான-இராணுவக் கூட்டணி தவிர அனைத்து மூலோபாயப் பங்காளிக் கூட்டுச் செயற்பாடுகளிலும் அமெரிக்காவும் இந்தியாவும் ஈடுபடுகிறது. இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதே இதற்கான காரணமாகும். இந்தப் பிராந்தியத்தில் சீனாவுடன் போட்டிபோடக் கூடிய சமவலுவுடன் இந்தியா மட்டுமே உள்ளது.

"புஷ் நிர்வாகத்தின் போது இந்தியாவுடன் அமெரிக்காவால் சிவில் அணுவாயுத ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதிலும், இந்தியாவுடன் எவ்வளவு தூரம் மூலோபாய உறவை வளர்த்துக்கொள்ள ட்ரம்ப் ஆர்வம் காண்பிப்பார் என்பது தெளிவற்றதாகும்.

"அமெரிக்காவின் கடல்சார் ஒத்துழைப்பு இந்தியாவுக்குக் கிடைக்காவிட்டால், பொருளாதார மற்றும் இராணுவத் துறைகளில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை எதிர்த்து நிற்க முடியாத நிலை உருவாகும். சீனப் பொருளாதாரம் இந்தியாவின் மொத்தத் தேசிய உற்பத்தியின் ஐந்து மடங்காகும்.

(19 ஆம் பக்கம் பார்க்க...)

# 5 ஆவது ஆசிய ஹொக்கி சம்மேளனக் கிண்ணம்; ஆரம்பப் போட்டியில் இலங்கைக்கு அமோக வெற்றி:



ஹொங் கொங், நவ.23

ஹொங் கொங்கில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான ஐந்தாவது ஆசிய ஹொக்கி சம்மேளன கிண்ணப் போட்டியின் குழு 'பி' போட்டியில் உஸ்பெகிஸ்தானை எதிர்த்தாடிய இலங்கை 7 - 2 என்ற கோல்கள் அடிப்படையில் இலகுவாக வெற்றிபெற்றது.

இடைவேளையின்போது இலங்கை 3 - 1 என்ற கோல்கள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

இப் போட்டியில் இலங்கை அணியில் 7 கோல்களும் கள (பீல்ட்) கோல்களாக அமைந்தமை விசேட அம்சமாகும்.

போட்டியின் 14ஆவது நிமிடத்தில் இலங்கையின் முதலாவது கோலை ப்ரியலன்க சந்தருவன் போட்டார். மறுநிமிடம் இலங்கையின் இரண்டாவது கோலை ஷாமிக்க குணவர்தன போட்டார்.

16 நிமிடங்கள் கழித்து ஷாமிக்க தனது இரண்டாவது கொலைப் போட இலங்கை 3 - 0 என முன்னிலை பெற்றது.

இடைவேளைக்கு 5 நிமிடங்கள் இருந்தபோது உஸ்பெகிஸ்தான் சார்பாக கேபுல்லோ கய்போயெவ் பெனல்டி கோர்ணர் மூலம் கோல் ஒன்றைப் போட்டார்.

இடைவேளையின் பின்னர் தினேஷ் விஜேசிங்க , லஹிரு பன்தி , ப்ரியலன்க சந்தருவன் ஆகியோர் 5 நிமிட இடைவெளயில் இலங்கைக்கும் நான்காம், ஐந்தாம், ஆறாம் கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

மேலும் 11 நிமிடங்கள் கழித்து ப்ரியலன்க சந்தருவன் தனது மூன்றாவது கோலைப் போட இலங்கை 7 -1 என்ற கோல்கள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

போட்டியின் 68 ஆவது நிமிடத்தில் உஸ்பெகிஸ்தானின் இரண்டாவது கோலை ஒக்குஞ்சொன் மிர்ஸாக்காரி மொவ் போட்டார்.

இலங்கை தனது இரண்டாவது லீக் போட்டியில் சிங்கப்பூரை நேற்று எதிர்த்தாடியதுடன், கடைசி லீக் போட்டியில் தாய்லாந்தை நாளை சந்திக்கவுள்ளது




ஸிம்பாப்வே - இலங்கை அணிகள் மோதிய ஒருநாள் போட்டியின் போது இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளர் சுரங்க, ஸிம்பாப்வே துடுப்பாட்டகாரரை நோக்கி பந்தை வீசிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இச்செயலில் ஈடுபட்ட இலங்கை வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மாலுக்கு போட்டிச் சம்பளத்தில் 50 சதவீதம் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

போட்டியின் இரண்டாவது ஓவரின் போது சுரங்க லக்மால் வீசிய பந்தை ஸிம்பாப்வே துடுப்பாட்ட வீரர் சிப்ஹபாஹா சந்தித்தார். பந்து லக்மாலிடம் செல்ல சிப்ஹபாஹா ஓடாமல் நின்றார். பந்தை பிடித்த லக்மால் உடனே சிப்ஹபாஹாவை நோக்கி வீசினார். அதிர்ஷ்டவசமாக பந்து சிப்ஹபாஹா மீது படாமல் விக்கெட் காப்பாளரிடம் சென்றது, லக்மாலின் இச்செயல் மைதானத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இலங்கை வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மால் ஐ.சி.சி. விதிமுறையை மீறி செயற்பட்ட குற்றத்துக்காக அவரின் போட்டிச் சம்பளத்திலிருந்து 50 சதவீதம் அபராதம் விதிப்பதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

மேலும், கூடுதலாக இரண்டு குறைபாடு புள்ளிகள் வழங்கியுள்ளது. ஒரு வீரர் 24 மாதத்துக்குள் நான்கு குறைபாடு புள்ளிகள் பெற்றால், அவர் போட்டியிலிருந்து தடை செய்யப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது:

## புதுமுக வீரர் ஜெயந்த் யாதவ்வுக்கு பாராட்டு

இங்கிலாந்துக்கு எதிரான 2 ஆவது டெஸ்டில் சிறப்பாக விளையாடிய புதுமுக வீரர் ஜெயந்த் யாதவ்வை விராட் கோஹ்லி பாராட்டியுள்ளார்.

இது தொடர்பில் கோஹ்லி தெரிவித்துள்ளதாவது-

ஜெயந்த் யாதவ் மிகவும் சிறப்பாக செயற்பட்டார். அவரது பங்களிப்பு விலை மதிப்பற்றது. அவர் மிகவும் நேர்த்தியாக பந்து வீசினார்.

தனது முதல் டெஸ்டில் அவர் நன்றாக செயற்பட்டது பாராட்டுக்குரியது. களத்தடுப்பு அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அதை என்னிடம் தெரிவித்தார். அவரது செயற்பாடு உண்மையிலேயே மகிழ்ச்சியை அளித்தது. உறுதியான ஐந்து விக்கெட்டுக்களை சாய்த்தனர் என்று தெரிவித்துள்ளார்.

## அணித் தலைவராக இருப்பது பற்றி கோஹ்லியின் பதில்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் இரு இன்னிங்ஸிலும், அணித் தலைவர் விராட்கோஹ்லி மிகச் சிறந்த முறையில் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை வெற்றிப் பாதைக்கு கொண்டு சென்றார்.

இந்நிலையில், தான் அணித் தலைவராக இருப்பது உற்சாகமாக இருக்கிறது என்று விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அணித் தலைவர் பொறுப்பில் நான் உற்சாகமாக இருக்கிறேன். எனக்கான பொறுப்பு அதிகமாக இருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு பின் தான் அணித் தலைவர் பதவி சுமையாக உள்ளதா



என கணிக்க முடியும். நமது திட்டங்களை சூழ்நிலைக்கு ஏற்ப வெளிப்படுத்தினாலே போதுமானது என தெரிவித்துள்ளார்.

# 20 வயதுக்குட்பட்ட மகளிர் உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி; கால் இறுதிப் போட்டிகளுக்கு வட கொரியா, ஜப்பான் தேர்வு

பப்புவா , நவ23

20 வயதுக்குட்பட்ட மகளிர் உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் பப்புவா நியூ கினியில் நடைபெற்று வருகிறது.

இப்போட்டியின் கால் இறுதியில் விளையாடுவதற்கு ஆசிய நாடுகளான வட கொரியாவும் ஜப்பானும் தகுதி பெற்றுள்ளன. ஜேர்மனியுடனான போட்டியில் தோல்வி அடைந்ததால் தென் கொரியா கால் இறுதி வாய்ப்பை இழந்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற கடைசி லீக் போட்டிகளின் பின்னர் வட கொரியா, பிரேஸில் (குழு ஏ), ஜப்பான், ஸ்பெய்ன் (குழு பி), ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ் (குழு சி), ஜேர்மனி, மெக்சிகோ (குழு டி) ஆகிய நாடுகள் கால் இறுதிகளில் விளையாட தகுதி பெற்றுள்ளன.

இதில் முதலாவதாக குறிப்பிடப்பட்டுள்ள நான்கு நாடுகள் ஏற்கனவே கால் இறுதிக்கு முன்னேறிய நிலையில் கடைசி நான்கு



அணிகள் நேற்றுமுன்தினம் தீர்மானிக்கப்பட்டன.

போர்ட் மோர்ஸ்பி, பவா பார்க் விளையாட்டரங்கில் நடைபெற்ற குழு 'சி' க்கான லீக் போட்டி ஒன்றில் நியூஸிலாந்தை சந்தித்த பிரான்ஸ் 2 - 0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி கொண்டு கால் இறுதித் தகுதியைப் பெற்றுக் கொண்டது.

போர்ட் மோர்ஸ்பி, சேர் ஜோன் கய்ஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற ஐக்கிய அமெரிக்காவுக்கும் கானாவுக்கும் இடையிலான போட்டி 1 - 1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

எனினும் புள்ளிகள் நிலையில் இரண்டாம் இடத்தைப் பெற்றதால் கால் இறுதி வாய்ப்பை ஐக்கிய அமெரிக்கா உறுதிசெய்துகொண்டது.

பவா பார்க் விளையாட்டரங்கில் நடைபெற்ற குழு 'டி' யிற்கான போட்டியில் வெனிசுவேலாவை சந்தித்த மெக்சிகோ 3 - 2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிகொண்டது. இதன் மூலம் மெக்சிகோ கால் இறுதியில் விளையாட தகுதி பெற்றது.

சேர் ஜோன் கய்ஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இதே குழுவுக்கான மற்றைய போட்டியில் தென் கொரியாவை 2 - 0 என்ற கோல்கள் அடிப்படையில்



ஜேர்மனி வெற்றிகொண்டு கால் இறுதி வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொண்டது.

லீக் போட்டிகள் யாவும் முடிவடைந்ததை அடுத்து நாளையும், நாளை மறுதினமும் கால் இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

போர்ட் மோர்ஸ்பி தேசிய விளையாட்டரங்கில் நாளை நடைபெறவுள்ள முதலாவது கால் இறுதிப் போட்டியில் வட் கொரியாவும் பிரேஸிலும் ஒன்றை ஒன்று எதிர்த்தாடவுள்ளன.

தொடர்ந்து நடைபெறும் இரண்டாவது கால் இறுதியில் ஜப்பானை பிரேஸில் எதிர்த்தாடவுள்ளது.

சேர் ஜோன் கய்ஸ் விளையாட்டரங்கில் எதிர்வரும் வெள்ளியன்று நடைபெறவுள்ள மூன்றாவது கால் இறுதியில் ஐக்கிய அமெரிக்காவை மெக்சிகோவும் தொடரும் கடைசி கால் இறுதியில் ஜேர்மனியை பிரான்ஸும் எதிர்த்தாடவுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir



# பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பாவுக்கு போட்டித் தடை

கிறைஸ்ட்சர்ச், நவ.23

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி மெதுவாக பந்து வீசியதால் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டி தொடரில் விளையாடி வருகிறது. இதில் கிறைஸ்ட்சர்ச்சில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் 105 ஓட்டங்கள் இலக்கை நோக்கி 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய நியூசிலாந்து அணி 31.3 ஓவர்களில் இலக்கை கடந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இந்த போட்டியில் 2 ஆவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி வீரர்கள் குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்து வீசி முடிக்கவில்லை. பந்து வீச்சை முடிக்க கூடுதலாக நேரம் எடுத்து கொண்டனர். இது குறித்து போட்டி நடுவர்கள் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தொழில்நுட்பக் குழுவில் புகார் செய்தனர்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்திய சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தொழில்நுட்பக் குழு பாகிஸ்தான் அணி வீரர்கள் அனைவருக்கும் போட்டி கட்டணத்தில் 20 சதவீதத்தை அபராதமாக விதித்தது. மேலும், அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக்குக்கு 40 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டதுடன் அவருக்கு ஒரு போட்டியில் விளையாடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.


கடந்த ஓகஸ்டு மாதம் இடம்பெற்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்து வீசவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி இருந்தது. 12 மாதத்துக்குள் மீண்டும் அதே குற்றச்சாட்டில் அந்த அணி சிக்கி இருப்பதால் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக்குக்கு இந்த தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹாமில்டனில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தடை காரணமாக மிஸ்பா உல் ஹக் இந்த போட்டியில் விளையாட முடியாது. ஏற்கனவே தனது மாமனார் இறந்ததால் மிஸ்பா நாடு திரும்பி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# தோல்வியை தவிர்க்க கடுமையாக போராடினோம்!

## இங்கிலாந்து அணியின் தலைவர் குக் தெரிவிப்பு



இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியை தவிர்க்க நாங்கள் கடினமாக போராடினோம் என்று இங்கிலாந்து அணியின் தலைவர் அலஸ்டயர் குக் கூறி உள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையினான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 246 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இந்தத் தோல்வி குறித்து இங்கிலாந்து அணியின் தலைவர் அலஸ்டயர் குக் கருத்து தெரிவிக்கையில், 'இந்த போட்டியில் தோல்வியை தவிர்க்க நாங்கள் கடினமாக போராடினோம். இருப்பினும் முடிவில் தோல்வி கண்டது ஏமாற்றம் அளிக்கிறது. முதல் நாளில் துடுப்பெடுத்தாட எளிதாக இருந்தது. அதன் பிறகு கடினமாக இருந்தது. இங்கு நாணயச் சுழற்சியில் வெல்வது சிறப்பாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

2 ஆவது நாளில் 5 விக்கெட்டுக்களை இழந்தாலும் நாங்கள் இந்தியாவுக்கு எதிராக கடைசி வரை எங்களது போராட்ட குணத்தை வெளிப்படுத்தினோம்.

விராட் கோஹ்லி ஓட்டங்களைக் குவித்ததன் மூலம் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவித்தது எங்கள் துடுப்பாட்டக்காரர்களுக்கு நெருக்கடியாக அமைந்தது.

முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் நாங்கள் சிறப்பாக விளையாடினோம். அடுத்த 2 போட்டிகளில் வென்றால் தான் இந்த போட்டித் தொடரில் நாங்கள் பின்தங்கிய நிலையில் இருந்து முன்னேற் றம் காண முடியும்' என்று தெரிவித்துள்ளார்.

# பி.சி.சி.ஐ. நிர்வாகிகளின் பதவிகள் பறிபோகுமா?

புதுடில்லி, நவ.23

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நடைபெற்ற முறைகேடுகளை அடுத்து, இந்தியாவில் கிரிக்கெட் போட்டிகளை நடத்தும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையில் (பி.சி.சி.ஐ.) சீர்திருத்தங்களைக் கொண்டுவர உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

இதற்காக, முன்னாள் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆர்.எம். லோதா தலைமையிலான குழு ஒன்றையும் உச்ச நீதிமன்றம் அமைத்தது. இந்தக் குழுவின் பரிந்துரைகள் உச்ச நீதிமன்றத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டன.

பி.சி.சி.ஐ. அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் அரசியல்வாதிகளாக இருக்கக் கூடாது, தகவலறியும் உரிமைச் சட்ட வரம்புக்குள் பி.சி.சி.ஐ. கொண்டுவரப்பட வேண்டும் உள்ளிட்ட அம்சங்கள் அந்த அறிக்கையில் இடம்பெற்றிருந்தன. இந்தப் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளபோதிலும், பி.சி.சி.ஐ. அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், மாநில கிரிக்கெட் சங்கங்களும் லோதா பரிந்துரைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இதனிடையே, லோதா குழு தனது பரிந்துரைகளை உச்ச நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்தது. அதில், பி.சி.சி.ஐ. நிர்வாகத்தில் உள்ள அனைவரையும் பதவி நீக்கம் செய்ய வேண்டும் உள்ளிட்ட பரிந்துரைகளைச் சமர்ப்பித்துள்ளது.

இதனால், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நிர்வாகிகளின் பதவிகள் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில் அகட், கோரிச்

சென்னை, நவ.23

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில் உலகின் 14 ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ராபர்ட்டோ அகட், உலகின் 48 ஆம் நிலை வீரரான குரோஷியாவின் போர்னா கோரிச் ஆகியோர் பங்கேற்பதாக அறிவித்துள்ளனர்.

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அகட், தொடர்ந்து 5 ஆவது முறையாக பங்கேற்கிறார். அவர், சென்னை ஓபனில் குரோஷியா வீரர் சிலிக்குக்கு சவால் அளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டில் அகட் இரு சாம்பியன் பட்டங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை ஓபனில் பங்கேற்பது குறித்து அகட் கருத்துத் தெரிவிக்கையில், சென்னை ஓபனில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்த சீசனை சிறப்பாக தொடங்குவதை எதிர்பார்த்து காத்திருக்கிறேன். தற்போது தரவரிசையில் 14 ஆவது இடத்தில் இருக்கிறேன். விரைவில் முதல் 10 இடங்களுக்குள் முன்னேற முயற்சிப்பேன். சென்னை ஓபனில் எனது முதல் சம்பியன் பட்டத்தை வெல்ல முடியும் என நம்புகிறேன். இந்த சீசனின் எஞ்சிய போட்டிகளுக்கு சென்னை ஓபன் சரியான அடித்தளமாகவும், பயிற்சிப் போட்டியாகவும் இருக்கும்' என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குரோ ஷியாவைச் சேந்த 20 வயதான போர்னா கோரிச், சென்னை ஓபனில் பங்கேற்பது குறித்து கூறியதாவது:- கடந்த ஆண்டு இறுதிச்சுற்று வரை முன்னேறினேன். அதனால் இந்த ஆண்டு சம்பியன் பட்டம் வெல்ல வாய்ப்புள்ளது. சென்னை ஓபன் மூலம் எனது முதல் ஏ.டி.பி. சம்பியன் பட்டத்தை வெல்வதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.



# திரிவுபடுத்தப்பட்ட வரலாறே மாணவருக்குப் போதனை

## நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி. விசனம்

கொழும்பு, நவ.23

முற்றிலும் திரிவுபடுத்தப்பட்ட வரலாறே மாணவர்களின் பாடப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன என்று நேற்று நாடாளுமன்றத்தில் சீற்றத்துடன் குறிப்பிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்ப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற வரலாற்றுப் புத்தகங்களில் தமிழர்களின் வரலாறுகள் அழிக்கப்பட்டுள்ளன. முற்றாக திரிவுபடுத்தப்பட்டுள்ளன. தமிழ் மன்னர்கள் தொடர்பில் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. ஆயிரம் வருடங்கள் வரலாற்றைக் கொண்ட முஸ்லிம்களின் வரலாறு தொடர்பில் அந்த வரலாற்றுப் புத்தகங்களில் ஒரு வசனமேனும் இல்லை.

தரம் 6,7,8,9 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரலாற்றுப் புத்தகங்களில் தமிழர்களின் வரலாறுகளே இல்லை. வரலாற்றுப் பாடப்புத்தகத்தில் அவ் வாறான நிலைமை காணப்படுகின்ற நிலையில், சித்திரத்தில் அதனைவிடவும் மோசமான நிலைமையொன்றே உள்ளது.

சித்திரங்கள், வடிவங்கள் மற்றும் கலை வடிவங்கள் சிங்கள மரபையே கொண்டிருக்கின்றன. தமிழ் மரபுகள் முற்றாக மறைக்கப்பட்டுவிட்டன. தமிழ் மன்னர்களின் வரலாறுகள் முற்றுமுழுதாக இல்லாமற் செய்யப்பட்டு விட்டன. சிங்களவர்கள், ஆரியர்களாக இங்கு வருவதற்கு முன்னரே, தமிழர்கள் இங்கிருந்தனர். எனினும், அவையெல்லாம் மறைக்கப்பட்டு, வரலாறு திரிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயருக்கு எதிராக சிங்களவர்கள் மட்டுமன்றி தமிழர்களும் போராடினர். இந்து -பௌத்த பாடசாலைகளை சேர். பொன் இராமநாதனே நிறுவினார். போயா தினத்தை விடுமுறை தினமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற யோசனையையும் அவரே முன்வைத்தார். இவையெல்லாம் மறக்கப்பட்டு விட்டன.

இலங்கை, இந்தியா மற்றும் ஐரோப்பிய வரலாறுகளை மாணவர்கள் கற்கின்றனர். இலங்கை வரலாற்றை கற்கும் போது, அதில் தமிழர் வரலாறு இல்லை. ஆகையினால், தமிழ் மாணவர்கள் தமிழர் வரலாற்றையும் சிங்கள மாணவர்கள் சிங்கள வரலாற்றையும் கற்கும் வகையிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். வரலாறு திரிபுபடுத்தப்பட்டு, மாற்றப்பட்டு பலவந்தமாக திணிக்கப்படுவதனால், இனங்களுக்கு இடையில் கசப்பான உணர்வுகளே தோற்றுவிக்கப்படுகின்றன.

அதனை விடவும் சமய பாடங்களின் விடயத்தில் நிலைமை மிக



மோசமாக உள்ளது. பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவ சமய பாடங்களை கற்பிப்பதற்கு அச்சமயங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர்களே நியமிக்கப்படுகின்றார்கள்.

ஆனால் இந்து சமயத்திற்கு மட்டுமே வயதான, அல்லது வேறு பாடநிரலில் இடமில்லாதவர்கள் சமய பாடத்தை கற்பிப்பதற்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இவ்வாறு தான் நிலைமை உள்ளது. அதேநேரம் சமயபாட நூல்களை அமைக்கின்ற போது தமிழ்ப் பெயர் உடையவர்கள் அந்தக் குழுவில் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் இந்துக்கள் கிடையாது. வரலாற்று நூல்கள் தயாரிக்கின்ற போதும் நிலைமை அவ்வாறுதான் உள்ளது. ஆகவே அது தொடர்பாக ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.

வடக்கு மாகாணம் தற்போது கல்வியிலேயே வீழ்ச்சி கண்டிருக்கின்றது. முப்பது வருடகால யுத்தம் ஒருபுறமிருந்தாலும் மறுபக்கத்தில் வடமாகாணத்திற்கு தலைசிறந்த ஆசிரியர்களை உருவாக்கிய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை தற்போதும் இராணுவத்தின் பிடியிலேயே உள்ளது. கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஓர் அறைக்குள்ளேயே தற்போது பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இருக்கின்றது. நல்லாட்சியிலும் இந்த நிலைமை நீடிப்பதா?

தீவக பகுதியில் கல்வியின் நிலைமை மிக மோசமாக உள்ளது. தீவகத்தில் கணித, விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் மாணவனோ அல் லது க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவனோ கடலில் 45 நிமிடங்கள் பயணித்து பின்னர் நகரத்திற்கு வரவேண்டியுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு நாளும் செய்வது சாத்தியமாகுமா? ஆகவே தீவக வலயத்தில் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு உரிய திட்டமிடல்கள் அவசியம்.

மேலும் இந்த நாட்டில் முன்பள்ளிகள் தொடர்பில் உரிய நிலைமைகள் கிடையாது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்றொரு பழமொழி உள்ளது. மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரையில் சரியான கற்கைகள் ஊட்டப்படாமல் பின்னர் 13 ஆண்டுகள் கற்கைகளை வழங்குவதால் என்ன பயன் ஏற்படப்போகின்றது. அத்தோடு இராணுவத்தினர் முன்பள்ளிகளை நடத்தும் நிலை இந்த நாட்டில் தான் உள்ளது. இந்த சபையில் பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதும் அதற்குரிய பதில் கிடைக்கவில்லை. ஆகவே இந்த நாட்டில் முன்பள்ளிகள் தொடர்பில் தேசிய கொள்கையொன்று அமைக்கப்படவேண்டும்.- என்றார்.

# மேசன் பயிற்சிக்கு யாழ்ப்பாணத்தில் குறைந்தளவு இளைஞர்கள் தெரிவு

## அதிகாரிகளின் அசமந்தம் காரணமா?

தேசிய வீடமைப்பு அதிகார சபை மேசன் தொழிற் பயிற்சியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுத்து பயிற்சியும் ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ்.மாவட்டத்தில் 245 பேர் மட்டுமே இந்தப் பயிற்சிக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். ஆனால், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1500 பேர் உள்வாங்கப்பட்டுள்ளனர். அதிலும், மணலாறு (வெலி ஓயா) பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 500 பேர் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், மேற்படிப் பயிற்சி நெறிக்கு யாழ்.மாவட்டத்தில் ஏன் குறைந்தளவான இளைஞர்கள் உள்வாங்கப்பட்டனர் என்று விடயமறிந்தவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மூன்று மாதங்களை உள்ளடக்கிய மேற்படி பயிற்சி நெறியில் பங்கேற்கும் இளைஞர்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ், சீருடைகள், பெறுமதிமிக்க மேசன் தொழில் உபகரணங்கள் என்பவற்றை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இந்தப் பயிற்சிக்கு, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர், அவருக்கு கீழே ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் ஒருவர் என்ற ரீதியில் பணியாற்றும் வீடமைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் இணைந்து பயிற்சியாளர்களை சேர்த்துக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில், காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் 85 பேர், ஊர்காவற்றுறை - 45 பேர், கரவெட்டி - 18 பேர், யாழ்ப்பாணம் - 17 பேர், சாவகச்சேரி - 12 பேர், சண்டிலிப்பாய் - 12 பேர், கோப்பாய் - 10 பேர், சங்கானை - 10 பேர், வேலணை - 8 பேர், தெல்லிப்பழை - 7 பேர், நெடுந்தீவு - 6 பேர், பருத்தித்துறை - 5 பேர், மருதங் கேணி - 5 பேர், உடுவில் - 3 பேர், நல்லூர் - 2 பேர் என்ற வகையில் 245 பேர் மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து எத்தனை பயிற்சியாளர்களையும் தெரிவுசெய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் யாழ்.மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லைஎன்றும்,இதனாலேயே இங்கு குறைந்தளவான இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டனர் என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சுமார் ஒன்றரை இலட்சம் பேர் வரையானோர் வசிக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தப் பயிற்சிக்கு 1500 பேர் வரையானோர் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் நிலையில், ஆறரை இலட்சத்துக்கும் அதிகமானோர் வசிக்கும் யாழ்ப்பாணத்தில் 245 பேர் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டிருப்பது அதிகாரிகளின் அசமந்தப் போக்கையே வெளிக்காட்டுவதாகவும் கவலை வெளியிடப்பட்டுள்ளது. (ம-10)

# ஓ.. அமெரிக்கா...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

"இந்தியாவை அமெரிக்கா கைவிட்டால் தென்னாசியப் பிராந்தியத்தில் பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கும். இந்தியாவின் அயலிலுள்ள இலங்கை போன்ற சிறிய நாடுகள் அமெரிக்காவின் இத்தகைய நிலைப்பாட்டால் இந்தியா மற்றும் சீனா ஆகிய இருநாடுகளுடனும் உறவைப் பேண வேண்டிய தெரிவுக்கு வழி வகுக்கும். பாதுகாப்பற்ற நிலையை எதிர்நோக்கும் இந்தியா, பனிப்போர்க் காலப் பகுதியில் செய்ததைப் போன்று தனது போட்டியாளர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஏமாற்றுத்தனமான செயல்களில் இறங்கும்.


"இதனால் பொருளாதார செழுமைக்காக சீனா மற்றும் இந்தியாவுடன் உறவைப் பேணும் இலங்கையின் உறவு சிக்கலுக்குரியதாக மாறும். இவ்விரு நாடுகளுடனும் இலங்கை தனது பொருளாதார செழுமைக்காக உறவைப் பேண வேண்டிய தேவையுள்ளது. இலங்கையின் நலனுக்காக அமெரிக்கா இந்தப் பிராந்தியத்தில் ஒரு நிலைப்பாட்டைக் கைக்கொண்டாலும் அது இலங்கையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்.

"எனினும் அமெரிக்காவின் அரசியல் கொள்கை ரீதியானது என்பதற்கப்பால் தனிப்பட்ட ஒருவர் சார்ந்ததாக மாறியுள்ளது. ட்ரம்ப் இலங்கையுடனான உறவை முறித்துக் கொள்வதில் ஆத்ம திருப்தி அடைவாரானால், இலங்கையும் அவருடனான தொடர்பை முறித்துக் கொள்ள முடியும்".

இக் கட்டுரையாளரின் கேள்வி: அவ்வாறு நடந்தால் இலங்கையை ஆட்கொள்ளப் போகும் அடுத்த வல்லரசு எது? அவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கை இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் துரிதப்படுமா? தாமதப்படுமா? குழம்புமா? வேறு வேறு என்ன என்ன வகையில் நிலைமைகள் மாற்றமடையும்? விடைகள் தெரிய சற்றுக் காலமெடுக்கும்.

(கேள்வி தொடரும்...)

# 21 ஆவது ஆண்டு நினைவில்





தோற்றம்: 03.11.1941
மறைவு: 23.11.1995

அமரர்
**கனகசபை சண்முகசுந்தரம்**
*(ஸ்தாபகர், சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்)*

தோற்றம்: 18.08.1983
மறைவு: 23.11.1995

அமரர்
**சண்முகசுந்தரம் சிவரூபன்**
*(மாணவன், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி*

துணையிழந்து மூவேழு தாழாண்டுகளாய் முடிந்தும்
நினைவு வானில் நீங்கள் இருவீரும்
அணையா விளக்காய் ஒளிதந்து எம்மனதில்
இணைந்து நிறைந்து இருக்கின்றீர் நித்தலுமே.

*துர்க்கா இல்லம்,
29, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.*

(C-094)

குடும்பத்தினர்.

காலைக்கதிர்
Kalaikkathir

## சமஷ்டியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேரவையின் மற்றைய இரு இணைத்தலைவர்களானஇருதய வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த த.வசந்தராசா ஆகியோரும் பங்கு பற்றினர்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்குக்கும் தெற்குக்கும் ஒரு தொடர் பாடல் வேண்டும். அதுவே இன்று குறைகின்றது. மொழியில் எங்களுக்குள் இடர்பாடு இருந்தாலும் நாம் அந்தத் தொடர்பாடலை மேற்கொள்ளவேண்டும்.-உங்களுடன் வந்து பேசவேண்டும் – என்று தீர்மானித்தோம்.

நான் மொழி என்று குறிப்பிடும்போது நாங்கள் 1955 இல் சிங்களத்தில்தான் படித்தோம். அப்போது உங்களில் பலர் பிறந்திருக்க மாட்டார்கள். என்னைப்போல யாழ்ப்பாணத்திலும் பலர் சிங்களத்தில் படித்தனர். ஆனால் 1956 இல் சிங்களத்தில் படிப்பதை நாம் நிறுத்தினோம். ஏனென்றால் அப்போதுதான் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது. அன்றொரு நாள் சந்திரிகா அம்மையாரிடம் நான் இதைச் சொன்னேன். நான் சிங்களத்தில் படிப்பதை நிறுத்தியமைக்கு உங்கள் தந்தைதான் காரணம் என்று நான் அவரிடம் கூறினேன்.

அந்நிலை ஏற்பட்டது துரதிஷ்டவசமானது. ஏனென்றால் தமிழர்கள் மீது மேலாதிக்கம் செலுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் சில சிங்களத் தலைவர்களுக்கு இருந்த பிற்போக்குத்தனமான நோக்கினால் நாங்கள் முப்பது வருட யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டியவர்களானோம்.

உங்களுக்கு உள்ள பல சந்தேகங்களை நீக்குவதற்காகவே நாங்கள் இங்கு வந்துள்ளோம். ஒரு விடயம் என்னவென்றால் உங்களில் பலருக்கு என்னைத் தெரியாது – என்னைப் பற்றி வேறு யாரோ சொன்னவற்றைத்தான் நீங்கள் அறிந்து வைத்திருக்கின்றீர்கள். என்னைத் தெரிந்த சிலரும், என்னைத் தெரியாத உங்களில் பலரும் என்னுடன் சம்பந்தப்படாத மூன்றாம் தரப்பினர் என்னைப் பற்றி சொன்னவற்றின் அடிப்படையில்தான் என்னை இப்போது பாக்கின்றீர்கள்.

அதற்குத் தவறான மொழி பெயர்ப்புகள், தவறான புரிந்துணர்வுகள், பிழையான விளக்கங்கள் போன்றவையும் சில சமயங்களில் அரசியல் உள்நோக்கத்துடன் வேண்டுமென்றே செய்யப்பட்ட தவறான வியாக்கியானங்களும் காரணமாக இருக்கலாம். அதனால் தான் சந்தேகங்களைக் களைய நாம் நேரில் வந்துள்ளோம்.

இலங்கையில் புரிந்துணர்வு இன்மையே எங்களின் பெரிய குறைபாடாகவுள்ளது.

2009 இல் மேயில் உயிரிழந்தவர்களுக்கான நினைவு நிகழ்வு ஒன்று 2014 மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நடைபெற்றிருந்தது. அதற்கு நான் சென்றிருந்தேன். அந்த நிகழ்வுக்கு நீதிமன்றம் தடைவிதித்திருப்பதாகப் பொலிஸ் அதிகாரி எனக்குத் தெரிவித்தார். ஆனால் அந்த பொலிஸ் அதிகாரி நீதிமன்ற உத்தரவு தொடர்பாகப் பெற்றுக் கொண்ட மொழிபெயர்ப்பே தவறானது என்பதைக் கண்டுபிடித்துக் காட்டினேன். அதனால் அந்த நிகழ்வு அமைதியாக நடந்தேறியது. ஊர்வலம் நடத்தவே தடை விதிக்கப்பட்டிருந்தது. கூட்டம் நடத்த அல்ல. மொழிபெயர்ப்புப் பிழை எத்தகைய தவறைத் தரும் என்பதற்கு இது நல்லதொரு சான்று.

ஆயிரத்து ஐநூறு முதல் ஆயிரத்து எண்ணூறு பொலிஸார் ஆயுதங்களுடன் குவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தாக்குதலுக்குத் தயாராக இருந்தார்கள். ஆனால் கூட்டம் மிக அமைதியாக, சமாதானமாக நடந்து முடிந்தது.

அந்த ஒரு சொல்லில் ஏற்பட்ட தவறான மொழிபெயர்ப்பு – 'ஊர்வலம் தடை செய்யப்பட்டுள்ளது.' என்பதை 'கூட்டம் நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது' என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டமை – உரிய நேரத்தில் கண்டுபிடித்துத் திருத்தப்பட்டதால் நேரக்கூடிய பெரும் களேபரம் தடுத்து நிறுத்தப்பட்டது; தவிர்க்கப்பட்டது.

நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமை – ஒருவரின் மொழியை மற்றவர் அறிந்திராமை – ஒருவரின் மொழியை மற்றவர் கற்பதற்கு விருப்பமில்லாதமை – இந்த நாட்டில் பல பிரச்சினைகள் உருவாகக் காரணமாக அமைந்துவிட்டது.

அந்தவரிசையில் கடைசியாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டதே 'எழுக தமிழ்' நிகழ்வாகும்.

'எழுக தமிழ்' என்ற எமது நிகழ்வுத் திட்டம் மூலம் – கூட்டம் மூலம் – இவைதான் எங்கள் கவலை, இவைதான் எங்கள் பிரச்சினை என்பதை உலகுக்கு எடுத்துச் சொல்ல நாம் விரும்பினோம். ஒருவருக்கும் என்ன நடக்கின்றது என்பது தெரியவில்லை. ஆகவே நாங்கள் யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் – டாக்டர்கள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், பொறியியலாளர்கள், சிவில் அதிகாரிகள், ஓய்வுபெற்ற சிவில் அதிகாரிகள் – ஆகியோரோடு அரசியல்வாதிகளும் சேர்ந்து தமிழ் மக்கள் பேரவை என்ற சிவில் சமூக அமைப்பை உருவாக்கினோம்.

அந்த அமைப்பு நமது மக்களின் கருத்து, உணர்வு நிலை என்னஎன்பதைப் புரிந்துகொண்டு அதைபொதுமேடைக்குக் கொண்டு வர முயற்சித்தது. எங்கள் கவலைகளை, ஆதங்கங்களை, எதிர்பார்ப்புக்களை ஒருநிலைப்படுத்தி வெளிப்படுத்துவதற்கான முயற்சி தான் அது. நாங்கள் குறிப்பிடத்தக்களவு வெற்றிகரமாக அதைச் செய்தோம்.

அதன் பின்னர்தான் அது குறித்து தெற்கில் பல பிழையான – தவறான – புரிதல்கள் மிகப் பெரிய அளவில் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் அறிந்து கொண்டோம்.

*'எல்லா பௌத்த குருமாரும் வடக்கிலிருந்து தூக்கியெறியப்பட வேண்டும், வடக்கில் எந்த பௌத்த விகாரையும் இருக்கக் கூடாது'* – இப்படி எல்லாம் விக்னேஸ்வரன் விரும்புகிறார் என்றெல்லாம் பல விடயங்கள் கூறப்பட்டன.

இதனால்தான் *'எங்களுடைய பேச்சுகளில் நாங்கள் மிக அவதானமாக இருக்கிறோம். நாங்கள் என்ன பேசினோம் என்பதை வரிக்கு வரி சரியாகப் படித்துப் பாருங்கள்'* என நான் ஜனாதிபதி முன்னிலையில் சிங்களத்தில் மிகத் தெளிவாகக் கூறினேன்.

நாங்கள் சிங்கள மக்களுக்கோ, பௌத்த துறவிகளுக்கோ, அல்லது வேறு யாருக்குமோ எதிரானவர்கள் அல்லர். எங்கள் பிரச்சினைகள் என்னவென்பதை வெளிப்படுத்த மட்டுமே நாம் முயன்றோம் என்றேன்.

இதற்காகத்தான் நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம்.

மாவீரர் தினம் என்பது தங்களுடைய குடும்பங்களில் இருந்து உயிர் நீத்தவர்கள் சம்பந்தமாக நினைக்கும் ஒரு நாள் – ஒரு நினைவு நாள் – கூடியவர்கள், அவர்களோடு சேர்ந்தவர்கள், தாய், தகப்பன், சகோதரர்கள், எல்லோரும் சேர்ந்து அந்தத் தினத்திலே இறைவனை வேண்டி அவர்களுடைய ஆத்மா சாந்தியடையவேண்டும் என்றும் அவர்களின் வாழ்க்கை இப்படிப் போய் விட்டதே என்றும் பேச, கதைக்க ஒன்றுகூடும் ஒரு நாள். அதை நீங்கள் எதிர்ப்பது எதற்காக என்று எனக்கு விளங்கவில்லை. உங்களுடைய மனதிலே புதிராக – எதிராக இருக்கும் ஒரு வைராக்கியம் அவர்கள் செய்வது எல்லாம் பிழை போல உங்களுக்குத் தெரிகின்றது.

என்னைப் பொறுத்த வரையில் அவர்கள் செய்வதில் எந்தத் தவறுமில்லை. அன்றைய தினத்திலே அவர்கள் உயிர்நீத்த தம் குடும்பத்தவர்களைப் பற்றி நினைப்பதில் எந்தவிதமான பிழையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இது உங்களுக்கு ஓர் அறிமுகம். இதிலிருந்து நாங்கள் முன்னோக்கிச் செல்ல வேண்டும். இப்படி இருந்து பயனில்லை. நாங்கள் தெற்கில் வந்து பேச வேண்டும். மாத்தறைக்குப் போய் பேச வேண்டும். கல்லெறி வாங்க வேண்டும். குண்டு அடித்தாலும் அதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஆனால் பேச வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கின்றது. ஏனென்றால் நாங்கள் பேசாமல் எதுவும் நடக்காது. 65 வருடமாக நாங்கள் இப்படித்தான் இருக்கின்றோம். எங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் பேசாமல் இருக்கின்றோம். பேசிப் பார்ப்போம்.

நீங்கள் ஆகக் கூடக் கேட்கின்றீர்கள், குறையக் கேட்கின்றீர்கள் என்றெல்லாம் பலரும் கூறுகிறார்கள். அது குறித்தெல்லாம் பேசுவோம்.

நாங்கள் இங்கு வந்த விடயம் தெரியாமல் எதையும் கேட்கக் கூடாது. நான் வடமாகாண முதலமைச்சராக இருக்கின்றேன். ஒவ்வொருத்தரும் தொலைபேசி எடுத்து 'சேர் ,இப்படி நடந்தது , அப்படி நடந்தது' என்று சொல்கிறார்கள். நான் அவற்றைக் கேட்டுவிட்டு ஏதாவது சொன்னால் பல பாதிப்புக்கள் ஏற்படும். உண்மை , பொய்யை நாம் ஆராய வேண்டும்.

அரசியல் ரீதியாக ஏதோ வொரு நன்மைகளைப் பெறவோ அல்லது தீமைகளை ஏற்படுத்தவோ நாங்கள் இவற்றைச் சொல்லக்கூடாது.

போர்க்குற்ற விசாரணை உண்மையான ஒன்றாக நடைபெறுவது என்றால் சர்வதேச உள்ளடக்கம் தேவை. அது இல்லை என்றால் மக்களுக்கு நீதி கிடைக்காது என்பது எங்கள் கருத்து.

இந்த விசாரணையில் மூன்று விடயங்கள் இருக்கின்றன. வழக்கு நடத்துநர் , நீதிபதிகள் , சட்டம். இந்தச் சம்பவங்கள் நடைபெற்ற காலத்திலே சர்வதேச சட்டங்களை அமைவாக நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை.

ஆகவே , அந்தச் சட்டங்களை எங்கள் சட்டத்துக்குக் கீழ் கொண்டு வர வேண்டும். அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் கூட, வழக்கு நடத்துநர் யார்? , நீதிபதிகள் யார்? என்ற விடயங்களிலே நாம் சர்வதேச உள்ளீடுகளை எதிர்பார்க்கின்றோம்.

ஏனென்றால் வழக்கு நடத்துநர் சம்பந்தமாக – சட்டமா அதிபர் திணைக்களம் சம்பந்த மாக – முன்னர் பகவதி அவர்களின் தலைமையின் கீழ் வந்த குழுவினர் பல குற்றச்சாட்டுக்களை சுமத்தினர்.

அதாவது , அவர்கள் இராணுவத்தினரையும் பாதுகாத்துக் கொண்டு இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்கள் , பாதிக்கப்பட்டவர்கள் குறித்து தீர்வு வழங்குகின்றார்கள்.

ஆகவே , அவ்வாறானவர்கள் எவ்வாறு எங்களுக்கு ஏற்ற விதத்தில் வழக்கை நடத்துவார்கள் என்பதில் எங்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது.

நீதிபதிகளும் அதே மாதிரித்தான். எங்கள் நீதிபதிகள் சம்பந்தமாக மூன்று சிங்கள சட்டத்தரணிகள் ஒரு புத்தகம் வெளியிட்டார்கள். ஒரே விதமான நிகழ்வுகள் கொண்ட இடத்திலே தமிழ் மக்களுக்கு ஒரு விதமாகவும் சிங்கள மக்களுக்கு இன்னொரு விதமாகவும் தீர்ப்பைக் கொடுத்ததனால் எங்களுடைய பெரும்பான்மையின நீதிபதிகள் இன ரீதியாகச் சிந்திக்கிறார்கள் என்ற ஒரு முடிவுக்கு வந்திருந்தார்கள்.

ஆகவே, இப்படியான ஒரு சூழ்நிலையில் நாங்கள் நீதியை எதிர்பார்க்க வேண்டும் என்றால் வெளிநாட்டு உள்ளீடுகள் அவசியம் என்பது எனது கருத்து. இதை நாம் வெளிநாடுகளிலும் சொல்லிக்கொண்டுதான் வருகின்றோம்.

ஒரு விடயத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். கட்சி தன்னுடைய வேலைகளைச் செய்து கொண்டு போகின்றது. அதில் ஒரு பிரச்சினையும் இல்லை. கட்சி ரீதியாக மட்டும் நாம் ஒரு தீர்மானத்தை எடுத்து இன ரீதியான தீர்வைப் பெறலாம் என்று நாங்கள் நம்பவில்லை.

எங்கு பார்த்தாலும் மக்களுடைய பங்குபற்றலால்தான் இப்படியான விடயங்களில் ஒரு தீர்வைக்காண முடியும். மக்களின் உதவி-பங்களிப்பு-இருக்கின்றது என்று அரசாங்கம் தெரிந்து கொண்டால்தான் எங்களுடைய பிரச்சினைகள் பற்றி அவர்கள் உரியவாறு சிந்திப்பார்கள். ஓரிரண்டு பேருடன் பேசிவிட்டு தீர்மானத்துக்கு வந்தால் – அவர்கள் எங்களுக்காக எதை எதைப் பேசுகிறார்களோ எங்களுக்குத் தெரியாது. ஆகவே நாங்கள் கட்சி ரீதியாகவும் சிந்தித்துக் கொண்டு – பேசிக்கொண்டு – வருகின்றோம். இன ரீதியாக – மக்கள் ரீதியாகவும் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகின்றோம். இது மக்கள் ரீதியான தொழிற்பாடு – செயற்பாடு.

யுத்தம் முடிந்து 7 வருடங்கள் கடந்தும் இராணுவத்தின் பிடியில் வடக்கு மாகாணம் உள்ளது. வடக்கிலுள்ள மக்களின் நிலங்களை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். இது மிகப் பெரும் பிரச்சினையாகும். நிலங்களை கட்டம் கட்டமாகவேனும் விடுவிக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்படும் நிதி பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்படுவதாக சொல்கின்றார்கள். எமக்கு தருவதாக சொன்ன நிதியில் சிறு பகுதியை அனுப்பி வைத்தால் அதனைக் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது. இது தொடர்பில் ஜனாதிபதியுடன் இன்று (செவ்வாயன்று) கலந்துரையாடினேன். ஜனவரி மாதத்துக்குள் உறுதியளிக்கப்பட்ட நிதியை அனுப்பிவைப்பதாக, ஜனாதிபதியும் நிதியமைச்சரும் உறுதியளித்துள்ளனர். இது எமக்குச் சாதகமான ஒன்று.

நாம் சிங்கள மக்களுடன் கைகோக்கத் தயார். முதலில் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தாருங்கள். பின்னர், ஒரே நாட்டுக்குள் இணைந்து வாழ்வோம். – என்றார்.

### சிறுநீரகம் தேவை

22 வயதுடைய இளைஞர் ஒருவருக்கு உடனடியாக B+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை. இரக்க குணம் உடையவர்கள் தர விரும்பினால் உடன் தொடர்பு கொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
0750406320 /
0217914498/0722269876/
076 7471361

## மக்கள் பங்களி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யுத்தத்திற்கு பின்னரான சூழலில் இனமுரண்பாடானது, மக்கள் பங்களிப்புடனான கலந்துரையாடல்கள் இல்லாது, வடக்கிலும் சரி தெற்கிலும் சரி வெறுமனே தேர்தல் வெற்றியை குறியாகக் கொண்ட அரசியல் வாதிகளாலும், துரதிஷ்டவசமாக சில ஊடகங்களாலும், பிழையான திசையில் கொண்டு செல்லப்பட்டு வருகின்றன.

சுயலாபங்களையும் தேர்தல் வெற்றிகளையும் குறியாகக் கொண்டிராது, மக்களின் நலனை கருத்திற்கொண்ட, மக்கள் மயப்படுத்தப்பட்ட, ஒரு தளத்தில், தூர நோக்குடன் இயங்குவதன் மூலமாகத்தான், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உண்மையான நீதியை பெற்றுக்கொள்ள முடியும் என நாம் திடமாக நம்பியதன் ஒரு வெளிப்பாடுதான் இந்த தமிழ் மக்கள் பேரவையின் தோற்றம்.

ஆயுதமோதல்கள் 2009 இல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டபோது, அத்தோடு தமிழர்களின் பிரச்சினை தீர்ந்து விட்டதாக, அல்லது இந்த இலங்கைத் தீவின் இனப்பிரச்சினை தீர்ந்து விட்டதாக அர்த்தம் கற்பிக்கப்பட்டது.

உண்மையில் இலங்கைத் தீவில் ஆயுதமோதல் என்பது இனப்பிரச்சினையின் விளைவுளில் ஒன்றே தவிர மூலபிரச்சினை அது அல்ல.

போரினால் அழிந்து போன வீதிகளும் புகையிரதப் பாதைகளும் மீளக்கட்டமைக்கப்பட்ட போது, தமிழர்களுக்கு இனி பிரச்சினையே இல்லை என பலவாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு அதுவே உண்மை என நம்பவைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

தமிழர்கள் மீதான யுத்தம், மிக பயங்கரமான அழிவுகளுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து, எமது மக்களினதும் மக்களின் அரசியல் இருப்பினதும் எதிர்காலம் மிகப்பெரிய ஒரு கேள்விக்குறியாக, ஒரு வெற்றிடமாக தென்பட்டது. தமிழர்களின் நீதிக்கான பயணத்தின் மிக தீர்க்கமான இந்த காலப்பகுதி, இப்படியாக ஒரு தெளிவற்ற ஒரு வெற்றிடமான நிலையில் தொடர்ந்தும் இருப்பது ஆபத்து.

இவ்வெற்றிடம், தேர்தல் மைய அரசியலினால் ஒருபோதும் நிரப்பப்படமாட்டாது, அப்படி தேர்தல் மைய அரசியலினால் நிரப்பப்படவும் கூடாது எனும் நோக்கோடு, வடக்கு கிழக்கில் வாழும் சமூக, மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், துறை சார் நிபுணர்கள், சமூக, மத பெரியவர்கள் இணைந்து நடாத்திய தொடர் கலந்துரையாடல்களும், ஆயுதமோதல்களின் முடிவிற்கு பின்னரான தமிழர் அரசியற் போக்கின் நாம் பெற்ற பட்டறிவுமே இப்படியான ஒரு மக்கள் மயப்படுத்தப்பட்ட அமைப்பின் தேவையை வெளிப்படுத்தி நின்றது.

அதன்வழி உருவானதுதான் தமிழ் மக்கள் பேரவை.

(டாக்டர் லக்ஷ்மனின் உரையின் முழுவடிவம் நாளை பிரசுரமாகும்)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கத்துடன் முன்னெடுப்பதுதான் தவறு.

"ஜே.வி.பி. தனது மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்ச்சிகளைத் தெற்கில் நடத்துகின்றது.

"அவர்களால் அதைச் செய்ய முடிகின்றது ஏனென்றால், அவர்கள் இப்போது தடை செய்யப்பட்ட அமைப்பு அல்ல. ஆனால் வட பகுதி மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளைக் குறிப்பிட்டு, அதனடிப்படையில் தங்கள் அன்புக்குரியவரின் நினைவு அனுஷ்டானங்களை முன்னெடுகக முடியாது. ஏனென்றால் அது தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு என்பதாலாகும்." – இப்படி அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

## கருணா பிரிவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிரிதலே இராணுவ முகாமினால், புலிகளின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான விநாயக மூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் பிரிவுக்கு ரீ-56 ரகத்தைச் சேர்ந்த 150 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன என பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மூன்று பேருக்கான குற்றப்பத்திரிகை நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு மீண்டும் இன்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப் படவுள்ளது.